# வேதாந்தத் தெளிவாம்


# சைவசித்தாந்தம்




தொகுப்பாசிரியர் :

இளையதம்பி சுப்பிரமணியம்





# வேதாந்தத் தெளிவாம்

# சைவசித்தாந்தம்



சமய ஞானிகள், மெய்யடியார்கள், பேரறிஞர்கள், ஆய்வாளர்கள் பலரதும் கருத்துக்களைத் தொகுத்தமைத்தது.


தொகுப்பாசிரியர் :

இளையதம்பி சுப்பிரமணியம்

வெளியீடு — 1

முதற் பதிப்பு—பிரபவ ஸ்ரீ ஆனி 1987

பதிப்புரிமை ஆசிரியருக்கே உரியது.




## கடவுள் வாழ்த்து

" ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறுவிரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே "

# உள்ளுறை


1. சிவ வணக்கம் ... ... 1

2. வேதங்கள் ... ... 8

3. சமயம்,—சைவம்,—சைவசித்தாந்தம்—சிவம் 15

4. வேத தரிசனங்கள் ... ... 22

5. தரும சாத்திரங்கள் ... 37

6. ஆகமங்கள் ... ... 43

7. நால்வகைப் புருஷார்த்தங்களும் வருணாசிரம தர்மமும் 48

8. சைவ சித்தாந்த தத்துவ விளக்கம் ... 54

9. அத்துவிதம் ... ... 73


## பின் இணைப்பு


1. சிவஞானபோதப் பொழிப்பு ... 86

2. சிவஞானசித்தியார் உணர்த்தும் ஞானநெறி 93

## சித்தாந்தபானு
## சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள்

# ஆசியுரை

தீக்ஷயா ச்ரவணே யோக்யோ
தீட்சயா பூஜநே க்ஷமஹ
தீட்சயா பிராப்யதே ஞானம்
தீட்சயா மோட்சமாப் னுயாத்

தீட்சையினாலேயே ஞானநூல்களைச் கேட்டலில் (கற்றலிலும்) அதிகாரம் உண்டாகிறது. தீட்சையினாலேயே பூஜை செய்தலில் தகுதி உண்டாகிறது. தீட்சையினாலேயே ஞானம் அடையப்படுகிறது, தீட்சையினாலேயே மோட்சமும் பெறப்படுகிறது.

அத்துவ சுத்தியுடன் கூடிய தீட்சை ஒருவருக்கு மும்மலங்களை அழித்து ஞானத்தைக் கொடுக்கின்றது. சிவப்பிரகாசம்' நூலிலும் "திருவருள் கொடுத்து மாற்றி" என்ற செய்யுளில் இது தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது.

இத்தகைய தீட்சை பெற்றுச் சிவபூசை செய்கிற இந்நூலாசிரியர் ஞானநூல்களை ஒத ஆராய்ச்சி செய்ய, முற்றிலும் தகுதி உடையவரே.

"ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த

ஆராவின்ப அருங்கனி பிழிந்ததன் சாரங்கொண்ட சைவசித் தாந்தப்" பெருமைகளை விளக்கவந்த இந்நூல் ஆசிரியர் வேதங்களையும் வேத அங்கங்களையும் புராண இதிகாசங்களையும் ஆகமங்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றின் கருத் துக்களை அறிந்து கொள்ளக் கூடியவகையில் சுருக்கித் தொகுத்து இந்நூலை வெளிப்படுத்தியிருக்கிறார். இத்தொகுப்பு நூல் மேற்கூறிய நூல்களின் கருத்துக்களை ஒரளவு தெரிந்து கொள்வதற்கும் விரிவாக கற்க விரும்புவோர்க்கு ஒரு வழிகாட்டியாகவும் அமையும் என்பதே எமது நம்பிக்கை.

இந்நூல் ஆசிரியருக்கு இதுபோன்ற பல நூல்களை எழுதக் கூடிய ஆற்றலையும் தேகதிடம் மனோதிடம் என்பவற்றையும் அருளும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கோப்பாய்.

வித்தியா சாகர நியாய சிரோமணி

## இ. சுப்பிரமணிய சாஸ்திரி

வழங்கிய.

# உண்மை உரை

சைவசமயம் வேதாகமங்களையும் திருமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டதென்பது வெள்ளிடைமலை, ஆனால் சைவசித்தாந்தம் வேதாந்தம் என்னும் விடயங்கள் விளங்கிக்கொள்வதற்கு மிகவும் கடினமானவை.

இந்நிலையில் "வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தம்" என்னும் அருமையானதும் மெல்லிய தமிழ் நடை பொருந்தியதுமான இந்தநூல் சாதாரண பாமரமக்களுக்கும் விளங்கக்கூடியதாக ஒன்பது பகுதிகளோடு பின் இணைப்பாகச் சிவஞான போதமும் சிவஞான சித்தியாரிலே பன்னிருதிருப்பாக்களும் பொழிப்புடன் வெளிவந்திருப்பது போற்றத்தக்கது.

இந்நூலை திரு. இ. சுப்பிரமணியம் அவர்கள் தமது வயது முதிர்ந்தநிலையில் தொகுத்து எழுதியுள்ளார். உடலில் ஒன்பது துவாரங்களை நம்கர்ம வினைகளை அனுபவிக்க காரணகர்த்தாக்களாக உள்ளவர்கள் சூரியன் முதலான ஒன்பது கிரகங்கள். ஆகவே இதேக் கிரகங்கள் மூலம் இந்த ஒன்பதுவாயிலைக்கொண்ட உடலை நீத்து இனியபிறவாநிலையை அடைவதற்கு இந்நூல் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும் சாதனமாகும்.

எந்தவிடயத்தையும் விரித்துக்கூறுவது யாராலும்இயலும். ஆனால் சுருக்கமாகவும் விளங்கத்தக்கதாகவும் கூறுவதற்கு நல்ல அனுபவமும், பல நூல் ஆராய்ச்சியும் பல ஆண்டுகள் செய்தபயனுமே இந்நூல் இந்த விதமாக அமைவதற்குக்காரணம்.

ஆசிரியர், சிவபூசை முதலான கர்மாக்களிலும் சந்தியானுட்டானம் யோகப்பயிற்சிகளிலும் பல ஆண்டுகளாக முறையாக ஈடுபட்டுப் பயின்றுவருபவர் என்பது எனக்குத்தெரியும். இப்படிப்பட்ட சைவச் செம்மல் தொகுத்து எழுதிய அரும் பெரும் முத்தாம் இந்நூலைப் படித்து எல்லோரும் பயன்பெற வேண்டுகின்றேன்.

ஆசிரியருக்கு இனிப்பிறவாநிலைகிடைக்க வேண்டுமென்று தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கின்றேன்

93, கோவில் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

5 - 5 - 1987

# வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் —ஓர் அறிமுக நோக்கு

— பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் —

**வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்** என்னும் நூல் திரு. இளையதம்பி சுப்பிரமணியம் அவர்களாலே எழுதி வெளியிடப் படுகின்றது. உபநிடதங்கள் எல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ள கருத் துக்களின் தெளிவே **பகவத் கீதை** என்று கூறுவர். இது போலவே வேதங்கள் முதலாய நூல்களிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களின் தெளிவாகச் சைவசித்தாந்தம் கொள்ளப்படுகின்றது. இதுபற்றிப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் (லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, பக். 20) பின்வருமாறு கூறுவர் :

> "தென்னாட்டில் பெரிதும் பயிலும் சைவசித்தாந்தத்தில் கைவந்தவன், பாரத நாடெங்கணும் பயின்று வரும் எல்லாத் தத்துவ தரிசனங்களிலும் பயிற்சியுடையவனாகிறான். ஏனெனில், சைவசித்தாந்த உண்மைகள் எடுத்துக் கூறப்படும்பொழுது அவ்வுண்மைகள் நன்கு கிரகிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்வதற் குரியன என்பதைத் தெளிவாக்கும் முறையில், ஏனைய தரி சனங்கள் தரும் கருத்துக்களையும், கொண்ட முடிபுகளையும், முறையாகவும் தெளிவாகவும் விளக்கி, அவற்றைச் சித்தாந்த நோக்கில் தருக்க அடிப்படையில் படிப்படியாக மறுத்துப் பரமத கண்டனஞ் செய்து சைவசித்தாந்தக் கோட்பாட்டினை நிறுவும் பொழுதெல்லாம், சைவசித்தாந்தம் ஏனைய தரிசனங் களின் சிந்தனை முறைகளை எடுத்துப் பேசும் சந்தர்ப்பங்கள் தவிர்க்க முடியாதவை. ஆகையால், சைவசித்தாந்தம் இந்து தத்துவ சிந்தனைகளின் விளக்க விரிவுரைகளை உள்ளடக்கிய பெருந் தத்துவமாகத் திகழ்ந்து வருகின்றது!"

இக்கருத்தினை நூலாசிரியர் உட்கொண்டே தன் நூலை ஆக்கியுள்ள போதிலும், இது இக்கருத்தினை ஆய்ந்து கூறும் நூல் என்று கூறுவதற் கில்லை. இது ஒரு தொகுப்பு நூலேயாகும். ஒன்பது அத்தியாயங் களாக இந்நூல் பகுக்கப்பட்டுள்ளது. ஏழாவது அத்தியாயத்திலே சைவசித்தாந்த தத்துவம் விளக்கப் படுகின்றது. அப்பொழுது ஆசிரியர்,

"சைவ சித்தாந்திகள் தம் கோட்பாடுகள் அனைத்திற்கும் ஆகமம் இருபத்தெட்டையும் மேற்கோளாகக் கொள்பவர். அவர்கள் நான்கு வேதங்களையும் இருபத்தெட்டு ஆகமங்களை யும் பன்னிரண்டு திருமுறைகளையும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களையும் பிரமாண நூல்களாகக் கொள்வர்"

என்று கூறிச் செல்கிறார் (பக். 54). இவ்வாறு சைவசித்தாந்த தத்துவத்துக்கு அடிப்படைகளாக அமைந்தனபற்றி முதல் ஆறு அத்தியாயங்களிலும் விளக்கிக் கூறுகின்றார்.

முதலாவது அத்தியாயம் வேதங்கள், வேதாங்கங்கள் பற்றிக் கூறுகின்றது. நான்கு வேதங்கள் கூறும் விடயங்கள், வேதங்கங்கள் ஆறும் பற்றிய விவரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இவைபற்றி அறிய விரும்பும் ஆரம்ப மாணவர்களுக்கு இப்பகுதி நல்ல பய னுடையதாகும். ஞான சாதனங்களின் ஆரம்பக் கூறாகிய வேதங்களைப் பற்றிக் கூறிய ஆசிரியர் இரண்டாவது அத்தியாயத்திலே சமயம் பற்றிப் பொதுவாகவும், சைவசமயம், சைவசித்தாந்தம் ஆகியன பற்றிச் சிறப்பாகவும் கூறிச் செல்கிறார். சமயம்பற்றி அவர் கூறி யுள்ள கருத்துக்கள் சிந்தனைக்கு விருந்தளிப்பன.

"சமயத்தின் அடிப்படை, ஞானம். ஞானத்தைத் தரு பவன் கடவுள். கடவுள் அருள் கொண்டு அருளியவையே வேதாகமங்கள். இவைகள் ஞானசாதனங்கள். இவ்வழி வந்த யாவும் ஞானநூல்கள் எனவும் தத்துவ நூல்கள் எனவும் கூறப்படும். இத்துணையவையெல்லாம் தெரிவிக்கும் வழிகளே சமயக் கொள்கைகள் எனப்படும்"

என்று ஆசிரியர் கூறிச்செல்வதை (பக். 17) நோக்குக. வேதங்களின் உட்பொருளைத் தரிசித்துக் கூறப்பட்ட விளக்கங்களே சம்கிதைகள், பிராமணங்கள், உபநிடதங்கள் எனப்பட்டன. மூன்றாவது அத்தி யாயம் இவற்றைப்பற்றிக் கூறுகின்றது. "வேதநூற் கருத்துக்களை ஐயம் திரிபு இன்றி அறியும் இயல்பினர் அருகி விளங்குதல் கண்டு, வேத நூலில் காணப்படும் ஒழுகலாற்றினை ஒருங்கே திரட்டி மக்க ளுக்குத் தரப்பட்டுள்ள நூல்களே தரும சாஸ்திரங்களாயின" (பக்.37). இத்தகைய தருமசாத்திரங்கள், புராணங்கள், இதிகா சங்கள் பற்றி நான்காம் அத்தியாயம் விளக்கங் கொடுக்கின்றது. ஐந்தாம் அத்தியாயம் ஆகமங்கள் பற்றிக் கூறுகின்றது.

இந்நூலின் ஆறுவது அத்தியாயம் வித்தியாசமான போக்கிலே அமைவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. ஏனைய அத்தியாயங்களைப் போலன்றி, இது விமரிசனப் பாங்கிலே அமைகின்றது. நால்வகைப் புருஷார்த்தங்கள் பற்றியும் வருணாசிரம தர்மம் பற்றியும் இப்பகுதி விளக்கங் கொடுக்கின்றது. வருணாசிரம தர்மம் பற்றி நூலாசிரியர் தெளிவான விளக்கம் கொடுப்பதுடன் அதனை இன்றையச் சூழ்நிலையுடன் தொடர்புறுத்தி நோக்கித் தன்னுடைய அபிப்பிராயத்தினையும் தெரிவிக்கிறார்.

> "இருக்கு வேதத்தில், புருஷ சூத்திரத்தில் விராட் புருடனின் முகத்திலிருந்து பிராமணனும், தோள்களிலிருந்து க்ஷத்திரியனும், தொடைகளிலிருந்து வைசியனும், கால்களிலிருந்து சூத்திரனும் தோன்றினர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் வேதகாலத் தொடக்கத்திலே தொழில் அடிப்படையிலே சாதிப் பாகுபாடு விதிக்கப்பட்டிருக்கவில்லை என்றே தெரிகின்றது. இருக்குவேத பாசுரம் ஒன்றில் 'நான் ஒரு புலவன், என் தந்தை வைத்தியர், என் தாய் கூலம் அரைப்பவள். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் பூண்டோம்' என்று கூறப்பட்டிருப்பதாக, வியத்தகு இந்தியா என்னும் நூலில் ஏ. எல். பசாம் கூறுவது கவனிக்கற்பாலது."

என்று ஆசிரியர் கூறிச்செல்வது சிந்தனைக்கு விருந்தாகின்றது. வருணாசிரம தர்மம் ஒருகாலச் சமூக ஒழுங்காக இருந்ததேயொழிய அது ஏற்றத்தாழ்வு கற்பிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதொன்றல்ல. ஆனால், அக்கோட்பாடு ஏற்றத்தாழ்வு கற்பிக்கப் பிற்காலத்தோரராலே இலகுவாகக் கையாளப்பட்டது. இக்கருத்தினையே ஆசிரியர், "இவ்வாறு காலப்போக்கில் நான்கு வருணங்களும் பல உபவருணங்களாகக் கிளைவிட்டுப் பிற்காலத்தில் சாதிவேறுபாடுகள் பல்கிப் பெருகக் காரணமாயின. இன்று இப்பிரிவினைகள் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உண்டாக இடமளிப்பதால் வருணதருமம் தனது பழைமையான மேன்மையையும் பெருமையையும் இழந்துவிட்டதெனலாம்" எனக் கூறிச் செல்கிறார் (பக். 53). இறுதி மூன்று அத்தியாயங்களும் சைவசித்தாந்தம் பற்றி விளக்கமளிப்பனவாய் அமைகின்றன.

ஆசிரியர் தான் இந்நூலை எழுதவேண்டிய தேவையினைத் தன் முகவுரையிலே பொருத்தமுறக் குறிப்பிடுகிறார். அவர் உளம் நொந்து கூறும் இக்கருத்துச் சமயப் பிரசாரகர் ஒவ்வொருவரும் மனங்கொள்ள வேண்டியதொன்றாகும்:

"புராணங்களாயினும் தரும சாத்திரங்களாயினும் அவை சாதாரண மக்களுக்கென்றே ஆக்கப்பட்டவை என்ற உணர் வின்றி, அவற்றையே பிரமாண நூல்களாகக் கொண்டு, சமயப் பிரசாரகர்கள் பிரசாரம் செய்து வந்தமையால், வீபரீதக் கருத்துக்களுக்கு அவை இடமளிக்கலாயின. இவற்றின் அடிப் படையிலே புறச்சமயத்தவர் எம் சமயத்தை இழிவு செய்ய முற்பட்ட சந்தர்ப்பங்களிலே அவர்களுக்குத் தக்க காரணங் காட்டி உண்மை நிறுவ முடியாத இயலாமையும் உண்டா யிற்று."

இக்கருத்து சைவசமயிகள் யாவரினதும் மனத்தை உறுத்துமெனவே நம்புகிறேன். சைவசித்தாந்தம் எம்முடைய தனிப்பெருந் தத்துவம் என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறோமேயொழிய அதனை மக்கள் எல்லோரும் உணர்ந்து ஓரளவு விளக்கம் பெறவாவது நாம் முயற்சி செய்யவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த வகையில். "சைவசித்தாந்தம் பற்றித் தொடக்கநிலை அறிவுடையோரும் தாமாகவே படித்துத் தெளிவுபெற உதவவல்லது" இந்நூல். இந்நூலாசிரியரின் இப்பணியைப் பின்பற்றி இத்தத்துவம் மக்கள் வயப்பட்டதாக ஆவதற்கு உழைப்பதன் மூலம் சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவலாம்.

சைவசித்தாந்தம் உன்னதமான ஒரு தரிசனம். அதனை மறை பொருளாகக் கருதி ஒரு சிலருடைய அறிவுக்குரியதாக ஆக்கி வைக்க வேண்டியதில்லை. அத்தரிசனத்தை எம்முடைய இளைஞர்களும் சிறுர் களும் இலகுவிலே ஓரளவாவது அறிய வழிசெய்ய வேண்டும். அத்தகைய தரிசனம் எம்மத்தியிலிருப்பதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். அது எல்லோராலும் விளங்கப்பட முடியாததொன்று என்னும் பிழையான கருத்து எம்மத்தியிலிருந்து அகலவேண்டும். இந்நூலைப்போலப் பல நூல்கள் தோன்ற வேண்டும்.

தான் எடுத்துக்கொண்ட பொருளை எளிமையாகவும் தெளி வாகவும் கூறுவதற்கேற்ற மொழிநடையினை நூலாசிரியர் கையாண் டிருப்பது விதந்து கூறப்பட வேண்டியதொன்றாகும். தேவையான இடங்களில் சிறிய வாக்கியங்களை அமைத்துக் கொள்கிறார். தரிசனம் பற்றிய ஆய்வு அறிவியல் ரீதியானது. எனவே சைவசித்தாந்த விளக்கம் அறிவியல் ரீதியிலே அமைய வேண்டியது. தர்க்க ரீதியான மொழிநடை இவ்விளக்கத்துக்கு அவசியமானதாகும். திரு. சுப்பிரமணியம் வேண்டிய இடங்களிலே இத் தர்க்கரீதியான நடையைக் கையாளுகிறார். உதாரணத்திற்குப் பின்வரும் பகுதியினை நோக்குக:

"உயிர்களுக்கு அநுக்கிரகம் மாத்திரம் குறித்துப் பொது வகையால் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே சிவசக்தியின் சொரூபமாம். அதுவே பராசக்தி எனப்படும். அப்பராசக்தி உயிர்களுக்கு மலபாகம் வருதற்பொருட்டு ஐந் தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையால் வியாபரிக் குங்கால் இச்சா ஞானக் கிரியை என முத்திறப்படும்."

**'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்'** நூல் நல்ல நோக்குடனே எழுதி வெளியிடப் படுகின்றது. சைவசித்தாந்தம் சிறப்பான முறை யிலே மாணவர்களாலே பயிலப்பட வேண்டும். ஒருசிலர் என்ற நிலைபோய்ப் பலரும் இத்தத்துவத்தினை உணர்ந்தவராயும் வல்லவ ராயும் உளர் என்ற நிலை உருவாக வேண்டும். அதற்கு அத்தத்துவம் எளிமையாக மாணவர்களுக்குப் புகட்டப்பட வேண்டும். திரு. சுப்பிர மணியம் அவர்களுடைய நூல் இம்முயற்சிக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு. இந்நூலாசிரியரின் முயற்சி பொதுவாகத் தமிழுலகாலும், சிறப்பாகச் சைவத்தமிழுலகாலும் நிச்சயமாகப் பாராட்டப்படும் என்பது என் நம்பிக்கை.

உ

# முகவுரை

நான் பிறந்த குடும்பம் சைவாசாரங்களில் பற்றுறுதியும் கடைப்பிடியும் மிகுதியும் கொண்டதாகும். எனது கல்விக் கண்களைத் திறந்துவிட்ட அளவெட்டி ஞானோதய வித்தியாசாலையும் அருணோதயக் கல்லூரியும், சிவபத்தியிலும் சமயாநுட்டானங்களிலும் மேலும் என்னை ஊக்கி வழிநடத்தின. எனவே சிறுவயது முதற்கொண்டு சமய நம்பிக்கையும் இறைவிசுவாசமும் பெற்று வளர்ந்தேன். எனினும் சமயம் சார்ந்த சில உண்மைகளில், சிறப்பாக "சர்வ வல்லமையுள்ளவரும் பெருங் கருணைக் கடலுமாகிய கடவுள், ஆன்மாக்களை அறியாமையிலே அழுந்தாவண்ணமும் பிறந்து இறந்து உழலாவண்ணமும் தொடக்கத்திலேயே காத்து அருள் புரியாமை ஏன்?", என்ற ஐயம், என் இளம் உள்ளத்தில் எழுந்து தீர்வுகாண முடியாதவாறு அலைக்கழித்து வந்தமையை, நான் இவ்விடத்தில் கூறியேயாக வேண்டும்.

இவ்விடத்தில் வேறோர் இடர்ப்பாடும் காலப்போக்கில் தோற்றுவதாயிற்று. புராணங்களாயினும் தரும சாத்திரங்களாயினும் அவை சாதாரண மக்களுக்கென்றே ஆக்கப்பட்டவை என்ற உணர்வின்றி அவற்றையே பிரமாண நூல்களாகக் கொண்டு, சமயப் பிரசாரகர்கள் பிரசாரம் செய்து வந்தமையால், விபரீதக் கருத்துக்களுக்கு அவை இடமளிக்கலாயின. இவற்றின் அடிப்படையிலே புறச்சமயத்தவர் எம் சமயத்தை இழிவு செய்ய முற்பட்ட சந்தர்ப்பங்களிலே அவர்களுக்குத் தக்க காரணங்காட்டி உண்மை நிறுவ முடியாத இயலாமையும் உண்டாயிற்று. இதனால் சிறிது காலம் ஆற்றாமையோடு கூடிய மனக்கவலையடையவும் நேர்ந்தது. இந்நாடு சுதந்திரம் பெறுவதற்குச் சற்று முன்பும் பின்பும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், சைவ வினாவிடை, நல்வழி, நன்னெறி முதலான நூல்களை ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே கற்கவேண்டிய நிலை இல்லாது போனதும் பெருங் குறையாகும். புராணங்களின் உட்கருத்துக்கள் கைவிடப்பட்டுப் பொதுக் கருத்துக்களே சமயப் பிரசாரங்களிலே மலிந்திருந்தமையால், கந்தபுராணம் போன்ற தத்துவ சாத்திரங்களின் நுண் பொருள்களும் எட்டாதனவாயின.

எனினும், எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளினாற் போலும், இந்த மருட்சியினிடையேயும் எமது சமய உண்மைப் பொருளினை உணரல் வேண்டும் என்ற ஆர்வம் இளம் பராயத்தி

லிருந்து என்னை விட்டு நீங்காதிருந்தது. ஆனால் இதற்கான வாய்ப்புக்கள், என்வரையில் மிகக் குறைவாகவே அமைந்தன. வாழ்க்கையை நடத்தற்கு வேண்டிய கல்வியைக்கூட ஓரளவுதான் பெறமுடிந்தது. எனினும் உத்தியோகம் பெற்ற பின்பும் தொடர்ந்து சமயநூல்களைக் கற்பதிலும் சமயச் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் கூடிய ஆர்வம் கொள்ளலானேன்.

காலிநகர் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலய தர்மகர்த்தாச்சபையின் பொதுச் செயலாளராகவும் கொழும்பு விவேகாநந்தசபைத் துணைப் பொதுச்செயலாளராகவும் சேவை புரியும்காலங்களிலெல்லாம் முன்பு என் உள்ளத்தை அரித்து வந்த வினாக்களுக்கு விடைகாண்பதில் பெரிதும் ஈடுபட்டு முயன்று வந்தேன். என் முயற்சியின் உண்மைத் தன்மையை உணர்ந்த பெரியார்கள் சிலர், தம்மாலான விளக்கங்களைத் தந்தனர். முற்றுண்மையையும் உணர்வதற்கு மெய்கண்ட சாத்திரங்களைக் கற்பதன் இன்றியமையாமையையும் எனக்கு உணர்த்தினர். ஆனால் எனது உத்தியோகப் பொறுப்புக் காரணமாகவும், பொருளாதார வசதிக்குறைவு காரணமாகவும் அவற்றைக் கற்கக் கூடியவாய்ப்பு எனக்குக் கிட்டவேயில்லை. "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்களாகா" என்னும் பொன்மொழி என் வரையிற் பொய்யாவது எங்ஙனம்? சமயசாத்திரக் கல்விபெற நான் எனது பதவியிலிருந்து ஓய்வுபெறும் வரை காத்திருக்க நேர்ந்தது.

கொழும்பு மத்தியதந்திக் கந்தோரில் பிரதிப் பிரதம தந்தி அதிபர்ப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த வகுப்பிலே சேர்ந்து கற்கத் தொடங்கினேன். நல்லையாதீனத் தலைவரின் அருளாசியோடு தொடங்கப்பெற்ற இவ்வகுப்பானது என் போன்றார்க்கு "எய்ப்பில் வைப்பு" என அமைந்தது என்றே கூறல் வேண்டும்.

இவ்வகுப்போடு இணைந்ததோர் அங்கமாக, "வைதிக சித்தாந்த சைவ பீடம்" என ஓர் அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டபொழுது, அதன் பொருளாளராகவும் பதிப்பாசிரியராகவும் என்னைத் தெரிந்தனர். எமக்குச் சித்தாந்த நூல்களைக் கற்பித்து வந்த ஆசிரியர், பண்டிதர் மு. கந்தையா அவர்களது வேண்டுகோளினையேற்று அன்னாரது நூலாகிய "சித்தாந்தச் செழும்புதையல்கள்" பலரதும் உதவி கொண்டு எம்மால் வெளியிடப்பட்டது.

இந்நூலுக்கு விதந்துரை பெறுவதற்குப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களை நான் அணுகிய காலை, அவரும் கற்றறிந்த இளைஞர் சிலரும், ''சித்தாந்தச் செழும் புதையல்கள்'' நூலிலும் எளிமையானதொருநூல், சைவசித்தாந்தம் பற்றிச் சிறப்பாகவும் வைதிக சமயங்கள் பற்றிப் பொதுவாகவும் ஆரம்பப்படியிலுள்ளோரும் விளங்கத்தக்க வகையில், வெளியிடுமாறு என்னை வேண்டினர். அவர்கள் கூற்றின் நியாயப்பாட்டினை உணர்ந்த யான், அவ்வாறே வெளியிட முயல்வதாக அவர்களுக்கு வாக்களித்தேன். என் வாக்குறுதியினை நிறைவேற்ற, சைவசித்தாந்த அறிஞர் சிலரை அணுகி அத்தகைய நூல், ஒன்றினை எழுதித் தருமாறும் வேண்டினேன். அவர்கள் என் வேண்டுகோளை ஏற்றனராயினும், அவர்களுக்கு உண்டாகிய வசதியீனங்களால் அவர்களது நூலெழுதல் முயற்சி தடைப்பட்டு நின்றது.

இந்நிலையில் நூல் எழுதி வெளியிட்ட முன்னநுபவம் இல்லாத நான், எனது வாக்குறுதியை எவ்வாறுவது நிறைவேற்றல் வேண்டும் எனவும், அதனாலே பலர் பயன்படுவர் எனவும் நம்பி, இம்முயற்சியிலே தலைப்பட்டேன். இவ்வாறு நான் எழுதுவது என் சொந்த நூலாக இல்லாவிடினும் தொகுப்பு நூலாகவாவது அமையட்டும் என்றும் தீர்மானித்தேன்.

தீர்மானத்தைச் செயற்படுத்த, என்னிடமிருந்த கட்டுரைகளையும் (நூல்கள், பத்திரிகைகளில் வெளிவந்தவை) நூல்களையும் படித்து, பார்வையிட்டு, வேண்டியவற்றைத் தொகுத்து 'வேதாந்தத் தெளிவு—சைவசித்தாந்தம்' என்ற இந்நூலினைச் சிவபெருமான் திருவருள் கொண்டு உருவாக்கியுள்ளேன்.

இது ஒரு தொகுப்பு நூலே என்பதைக் கற்போர் உளங்கொள்ளக் கடவர். ஞானிகள், அருளாளர், சமயப்பேரறிஞர் பலரதும் கருத்துக்கள், முக்கியமாக, சிவஞானமாபாடியம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருவருட்பயன், திருக்குறள்—பரிமேலழகர் உரை, திருமுறைகள், திருமந்திரம், தாயுமானவர் பாடல் ஆகியவற்றிலிருந்து பல செய்திகளைத் தொகுத்துத் தந்திருப்பதோடு, மாக்ஸ் முல்லர் முதலாகிய மேற்றிசை ஆய்வாளர், பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை (அத்துவிதம்) முதலிய தமிழ்ப் பேரறிஞர் கருத்துக்களையும் தொகுத்துள்ளேன். எத்திசையிலிருந்து கருத்து வரினும் எம்மவராகிய சைவ மக்களுக்கு அவை ஒரே நூலிலே கிடைக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும், என்ற ஆசையினாலேயே இத்தொகுப்பு வேலையை மேற்கொண்டேன. நூலின் உள்ளேயே ஆங்காங்கே கருத்துக்களின்

உரிமையாளர் பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பினும் சிற்சில இடங்களிலே குறிக்கப்படாது விடப்பட்டும் உள்ளன. அவ்வாறு குறிக்கப்படாமை சிறியதும், ஆரம்ப நிலையிலுள்ளார்க்கு விளங்க வேண்டியதுமான ஒருநூல், மேற்கோள்களால் மலைப்புத் தந்து, ஆய்வு நூல் என்ற பிரமிப்பை அளித்தல் கூடாது என்ற நோக்கத்தினாலேயேயாகும். ஆகவே இதனைப் பிழையாகக் கொள்ளாது, என்னைப் பொறுத்து அப் பெரியார்கள் ஆசி நல்குவர் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

இந்நூலை வெளியிடுவதால் ஏற்படும் செலவினத்தைப் பற்றி நான் யோசித்த பொழுது, "தயங்காது வெளியிடுங்கள். பலருக்கும் பயன்படும் நல்ல பணிக்குச் செலவு பற்றிக் கவலைப்படாதீர்கள்" என்று ஊக்கி உற்சாகப்படுத்திய என் மனைவி இன்று இப்பூவுலகில் இல்லாவிடத்தும், அவருக்கு நான் என்றும் கடப்பாடு உடையேன்.

இதனை நூல் வடிவில் வெளியிடத்தக்க வகையில் விடயங்களை ஒழுங்குபடுத்தியும் சரவைபார்த்தும் உதவிய ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

"உண்மையுரை" வழங்கி என்னை ஊக்குவித்த வித்தியாசாகர நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கும், சித்தாந்த பானு. சிவ ஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்கள் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோருக்கும் எனது பணிவுகலந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலினைக் குறுகிய காலத்திலே திறம்பட அச்சிட்டு உதவிய ஆசீர்வாத அச்சகத்தினர்க்கும் நன்றியுடையேன்.

**இ. சுப்பிரமணியம்**

107, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்



# திருமதி சுப்பிரமணியம்

இல்லுறை விளக்காய் ஒளிர்ந்து
என் இதய சோதியாகவும் திகழ்ந்த
என் அன்பு மனைவிக்கு

## படையல்

ஒன்றிய உளத்தால் ஒருயிர் இரண்டாம்
உடலினில் உறைந்தது போன்று
நின்றுநாம் உலகில் நல்லறம் புரிந்தோம்
நீடிய அன்பினால் மக்கள்
நன்றிசை யுடனே வாழ்ந்திட வைத்த
நங்கையே! என்மனை விளக்கே!
இன்றுனக் கிந்த நூலினை உனக்கே
இதயத்தாற் படைத்தனன் ஏற்பாய்.

உ

சிவமயம்

# சிவ வணக்கம்

திருச்சிற்றம்பலம்

போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

இத் திருப்பாசுரத்திற்கு முன்னர் உள்ள பாடலில் மணிவாசகப் பெருந்தகை, ''தரிக்கிலேன் காயவாழ்க்கை'' என்று கூறி எங்குத் தம் உடலை விட்டுச் செல்லும் இடம் பிறிது இல்லையாதலால், புறத்தே தம்மைப் போக்கல் ஆகாது, சிவபிரான் திருவடியின் கண்ணேயே இயைத்துக் கொள்ளல் வேண்டும் என்று இரங்கி வேண்டிக் கொள்கின்றார். சைவசித்தாந்தத்தின் குறிக்கோள் இது வேயாதலானும் நூலின் மங்கலத்தின் பொருட்டும் இத்திருப்பாடல் இங்குத் தொடக்கத்தில் காப்புப் போன்று எடுத்தாளப்பட்டுள்ளது.

எம்போன்றோருக்கும் விளக்கம் அளிப்பதற்காகச் சற்றே இதனை விரிப்பாம்:-

திருவைந்தெழுத்தை நகாரம் முதலாக ஓதுதல் வேத (மறை) வழக்கம் ஆகும். சிகாரம் முதலாக ஓதுதல் ஆகம வழக்கமாகும். திருவாசகம் தமிழ் மறையாதலின், அதன் தொடக்கத்திலே ''நமச்சிவாய வாழ்க'' என்று மணிவாசகர் கூறியருளினார். ஏனைய மந்திரங்கள் எல்லாம் பிரணவத்தோடு கூடியே எண்ணப்படுவனவாகும். சிவபிரானைப் பற்றிய இத் திருவைந்தெழுத்து மந்திரம், பிரணவம்

இல்லாதே எண்ணப் படுவதாகும். காரணம். திருவைந்தெழுத்திற்கும் பிரணவத்துக்கும் வேறுபாடு இல்லாமையே. பிரணவம் ஆகிய ஓம் என்பதன் விளக்கமே திருவைத்தெழுந்தென்பர் ஆன்றோர். அவ்விரண்டும் முறையே தொகையும் விரியுமாகக் கொள்ளப்படு வனவாம். அம்முறையே இங்குக் கூறப்பட்டது என்க.

மேலும் திருவைந்தெழுத்தின் தூல, சூக்கும, காரண முதலிய நிலைகளும், நிற்குமுறை, ஓதுமுறை, முதலியனவும் பிறவும் திருமந் திரம் முதலிய நூல்களாலும், குருவாயிலாகவும் அறிந்து கொள்க. விரிக்கிற் பெருகும்; மற்றொன்று தொடுத்தலுமாகும்.

புயங்கம் - பாம்பு; நஞ்சை உமிழ்கின்ற பாம்பை அணிகலனாக ஏற்றுக் கொண்டிருக்கும் நீ என்னை ஏன் ஏற்றுக் கொள்ளல் ஆகாது? என் தகுதி நின்னை அணுகுதற்குப் போதிய காரணம் அறியாமல் கலங்குகின்றேன் என்பதை, ''புயங்கனே மயங்குகின்றேன்'' எனவும், அறியாமல் இம்மயக்கத்தின் தெளிவாக வேறிடம் போகலாம் எனின், என்னை ஏற்றுக் கொள்வதற்கு உரிய புகலிடம் வேறுயாதும் இல்லையென்பதைக் குறிப்பதற்காக, ''புகலிடம் பிறிதொன்றில்லை'' என்றும் வெளிப்படுத்தியுள்ளார். இதனை இன்னும் உறைப்பாகக் கூறுவதற்காக, ''புறம் எனைப் போக்கல் கண்டாய்'' என்று இரங்கி வேண்டினார்.

இவ்வேண்டுதலையே என் வேண்டுதலாகவும் எம்பெருமான் திருமுன் வைத்து இந்நூலைத் தொடங்குகின்றேன். எவ்வித விக்கின மும் இன்றி நூல் இனிது முற்றுப் பெற அவன் அருளன்றி வேறு துணையும் உண்டோ?

# வேதங்கள்

சைவ சித்தாந்தம் நான்மறையோடு இருபத்தெட்டு ஆகமங்களினாலும் உணர்த்தப் பெற்றுச் சைவமக்களினால் கடைப்பிடிக்கப் படுவதாகும். மறையும் ஆகமமும் இறைவனால் அருளப் பெற்றன வென்றே ஆன்றோர் கூறுவர். அவைகளே சைவசித்தாந்தத்தின் முதல் நூல்களுமாம். இதனை,

''வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்''

என்று மிகவுங் காலத்தால் முந்திய தொல்காப்பியம் அரண் செய்கின்றது.

பண்டு உள்ள மறை தமிழ் மொழியிலேயே ஆக்கப்பட்டுள்ளது என்று உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியப் பாயிர உரையில் அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றார். அஃதாவது ''நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான், நான் மறை என்றார். அவை தைத்திரியமும்,, பௌடிகமும், தலவகாரமும் சாம வேதமுமாம். இனி, இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது; இவர் இந் நூல்செய்தபின்னர் வேதவியாதர் சின்னாட் பலபிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்;''

மறைகளை வேதவியாசர் நான்காக வகுத்தது பற்றிக் கந்த புராண வரலாறு பின்வருமாறு கூறும்.

முற்காலத்திலே, சிவபெருமான் அருளிச் செய்த மறைகள் யாவும் முதலும் முடிவும் தடுமாறப் பொருள் கொண்டு, சிலர் தவறான சமயங்களையும் நூல்களையும் இயற்றிப் பரவச் செய்தனர். இவற்றால் வந்த மயக்கத்தைத் தீர்க்குமாறு பிரமனும் திருமாலும் சிவபிரானிடம் வேண்டுதல் செய்தனர். சிவபெருமான் அதனைக் கேட்டு ''மாயவனே! நீ ஒரு கலையுடன் உலகத்திலே அவதாரஞ் செய்து வியாசர் என்ற பெயர் பெற்று மறைகளை நான்காகவகுத்து, நாம் நந்திக்கு உபதேசித்த பதினெண் புராணங்களையும், அவனிடம் உபதேசம் பெற்ற சனற்குமார முனிவனிடம் உபதேசம் பெற்று வாழ்தி'' என்று அருளிச் செய்தார். இவ்வாறு இட்ட கட்டளையைத் திருமால் பின்னர் நிறைவேற்றி வைத்தார்.

தமிழ் மறை முழுதும் கடல்கோள் நிகழ்ச்சியின் காரணத்தாலோ அன்றிப் பிற ஏதுக்களாலோ யாமறியோம், தமிழ் மக்களுக்குக் கிடைப்பதரிதாயிற்று. ஆயின் இன்று கிடைப்பதோ வடமொழி வேதமாகும் (மறை). அஃதாவது தமிழகத்துப் பிறந்து வடநாடு (ஆரியர் வாழும் இடம்) சென்று பன்னாள் ஆரியரொடு பழகி உறவு கொண்டு கலந்து, வாழ்ந்து பின்னர், தாயகமாம் தமிழகம் மீண்டெய்திய தமிழாரியர், வடசொல்லால் பழமறையினை மொழிபெயர்த்து எழுதிக் கொண்டதால் ஆரிய வேதம் என்றாயிற்று. இத் தமிழாரியர் வழித்தோன்றியோரே பாரதத்திற் பேசப்படும் கௌரவர், பாண்டவர் மரபின் முதல்வர் என்றும் ஆய்ந்தோர் கூறுவர். இங்கும், ஆரிய வேதம் என்பதும் வடமொழி வேதம் என்பதும் வேறு என்பர் சிலர். ஆரிய வேதம் பாரசீக நாட்டவர்க்கு உரிய "சிந்து அவெஸ்தா" (Zendavesta) என்பதேயாகும். (The entire sacred writings of Zoroustrianism of Zoroaster - சாரதுஷடிரம்) அதற்கும் வடமொழி வேதத்துக்கும் சிற்சில வேற்றுமையும், பற்பல ஒற்றுமையும் சார்ந்து விளங்கக் காணலாம் என்றும் அறிந்தோர் கூறுவர். எனவே இக் காலத்தவரால் பேசப்படும் வடசொல் வேதம் — ஆரிய வேதம் - பழ மறையின் மொழிபெயர்ப்போடு "சிந்து அவெஸ்தா"விலிருந்து பல கருத்துக்களைக் கடன்கொண்டு மிளிர்கின்றதென்பதும் ஒரு சார் அறிஞர் கூற்றாகும்.

"வேதம்" என்னுஞ் சொல் "வித்" என்னும் சொல்லின் வழிப்பிறந்த தென்ப. எனவே வேதம் வடசொல் இலக்கண முடிபாகும். ஆகலின், வேதம் என்பது வடசொல்லால் இயன்றதாம் என்பதும் தெளிவு. வேதத்தைப் பற்றி விரிவாகக் கூறுவதென்பது, நம்மனோர்க்கு முடியாத காரியமாகும். அது வடமொழியில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாலேயே எடுத்துக் கூறவேண்டியதாகும்.

எனினும் நாம் பெரியோர் பலரிடமும் நூல்கள் வாயிலாகவும் வேதம் பற்றி அறிந்துள்ளவற்றை இங்குக் கூறலாம். ஏனெனில் அதுவே சைவ சித்தாந்தத்துக்கு முதனூலும் பொதுநூலுமாகக் கொள்ளப் படுவதால் என்க.

பாரத வரலாறு கூறிய முனிவர் தமது காலத்தில் ஒரே வேதமாய்ப் பல பொருளுங் கொண்டு விளங்கியதை நான்கு வகைப் படுத்தி உரையும் புகன்று இவ்வுலகிற்கு உதவினர். அதனல் அம் முனிவர் வேதவியாசர் எனப்பட்டனர். நால் வேதப் பொருள்களை ஆறங்கம் (உறுப்பு) எனப் பாகுபாடும் செய்தனர். பதினெண் புராணமும் ஆக்கியோர் இவரே. ஆதலால் வேதம் வகைப்படுத்திய

காலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆகும் என்றால் மிகையில்லை. வட சொல் வேதங்கள் அம்மொழியினின்றும் தேவநாகரி எழுத்தால் மாற்றியமைக்கப்பட்டன. தேவநாகரி மொழியின் எழுத்தைச் சம்ஸ்கிருதம் (Sanskrit) என்பர். வடசொல்லைக் கிரந்த மொழி (Samskrit) என்பர்.

பேராசிரியர் மக்ஸ்முலர் (Prof. Maxmuller) என்பவர் தேவநாகரி, வடசொல் இரண்டையும் பயின்றவர். வேதகாலம் பற்றிப் பல பிறழ்ச்சியான கருத்துக்களைக் கண்டு தாம் ஆய்ந்து அதன் பயனாய் வேதகாலம் கி. மு. எண்ணாயிரம் ஆண்டுகளாகும் எனத் தம் கருத்தை வெளிப்படுத்தினர், பின்னர் மேலை நாட்டவரும் கீழை நாட்டவருமாய்ப் பலர் வேத காலம் பற்றி ஆய்ந்தனர். உலோகமான்ய பால கங்காதர திலகர், பண்டார்க்கார், இரசிதத்தர் முதலியோர் இவர்களுள் முதன்மை பெற்றனரேயாயினும் அவரெல்லாம் பேராசிரியர் மக்ஸ்முலரின் கூற்றினை ஒட்டியும் தத்தம் கருத்தினை வெளிப்படுத்தினர். இன்றும் அறிஞர் பலரும் வேத காலம் பற்றிய ஆய்விலிருக்கின்றனர்.

வேதம் நான்கும் இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமுமாம்.

1. இருக்கு என்ற சொல் மந்திரம் எனப் பொருள் தருதல் நோக்கிச் செய்யுளால் இயலும் மந்திரம் மிகுதியாகக் கொண்டு விளங்குவதே இருக்கு வேதமாயிற்று.

2. உரையிடையிட்ட பாட்டின் மிகுதிப்பாடு நோக்கி யசுர் வேதமென்றாயிற்று.

3. இசைக்கலை பற்றிய பல தொகுப்புண்மையால் சாம(ம்) வேதமாயிற்று.

4. இம்மைப் பயன் ஒன்றையே அடைதற் கேதுவாம் பொருள் தொகுத்து யாத்த அதர்வா, ஆங்கிரச, எனும் இரு முனிவர்கள் பெயரால் அதர்வாங்கிரசு எனப் பெற்றுப் பின்னர் அதர்வணமென்றாகி இறுதியில் அதர்வண(ம்) (அதர்வம் என்றும் சிலர் அழைப்பர்) வேதமாயிற்று.

நால் வேதங்களும் இறைவனை, உருத்திரன், சோமன், இந்திரன் என்றின்னோரன்ன பல பெயரிட்டு விளிக்கின்றன. பல தெய்வ வழிபாடும் போற்றப்படுகின்றன. அக்கினியை முன்னிட்டுச்

செய்யப்படும் யாகம் பலவும் வழிபாட்டு முறையுடன் பாடல்களுங் கொண்டு விளக்குவன. இவற்றின்கண் இசை வகைகளும் பொருள் வகைகளும் மலிந்து காணப்படுகின்றன. இறை, உயிர், உலகு, வீடு என்பவற்றின் தன்மையும் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன.

இந் நால் வேதத்தினையும் பின்பற்றுபவர் **வைதிகர்** எனப்படுவர்

### வேதங்களின் கூறுபாடுகள்

வேதங்களின் கூறுபாடுகள் பலவேயாயினும் அவைகள் யாவும் கருமகாண்டம், ஞான காண்டம் என இரண்டாக மிளிர்கின்றன. கரும காண்டம், வேள்வி, சடங்கு முதலியன செய்யும் முறைகளையும் மக்கள் சமுதாய வழக்கின் வழி ஒழுகும் முறையினையும், பிறர்க்கு ஆற்றும் கடப்பாட்டையும் எடுத்து விளக்குவனவாம்.

ஞானகாண்டம், மக்கள் தமது குறிக்கோளாய்க் கொண்டு அடைய வேண்டிய பொருள் இதுவாம் எனக் கூறுவதாகும். ஆன தால் முன்னையது அற்பம் என்றும் பின்னையது பிரபலம் என்றும் சொல்லப்படும். அற்பம் = இழிந்தது, இழிவு. பிரபலம் = சிறந்தது, சிறப்பு.

### வேதசாகைகள்

இருக்கு வேதம் இருபத்தொரு சாகைகள் (கிளைகள்) அல்லது உட்பிரிவுகளைக் கொண்டது என்பர். எனினும் இம்போது அவற்றுள் ஐதரேயம் எனப்படும் சாகை ஒன்றே உள்ளது.

யசுர் வேதம் நூற்றொரு சாகைகளை உடையது. அவற்றுள் இதுகாறும் கிட்டியுள்ளனவெல்லாம் காண்பசாகை, மைத்திரிசாகை, மாதயந்தின சாகை எனப்படும் மூன்றேயாம்.

சாமவேதம் ஆயிரம் சாகைகள் உடையதேனும் கிடைத்துள்ளவை இரண்டேயாம். அவை கௌதமசாகை, தலவகாரசாகை என்பனவாம்.

அதர்வணவேதம் முறையே பைப்பலாதம், மௌதம், சௌநகீயம், ஜாஜலம், (யாயலம்) ஜலதம் (யலதம்) பிரம்ம வாதம், தேவதாசம், சாரணம், வைத்தியம் என்னும் ஒன்பது சாகைகள் கொண்டது. ஆயினும் அவற்றினுள் ஒன்றேனும் கிடைப்பதரிதாயிற்று. என்றாலும் காஷ்மீரத்திலும், காசியிலும், உள்ளோரிற் சிலரே அருகிக் கிடைத்தவற்றில் சிதறுண்ட பகுதிகளைப் பயின்று வருகின்றனர் என்று அறியப்படுகின்றது. தென்னாட்டில் அதர்வண சாகை பயில்வோர் அறவே இல்லையென்றே அறிந்தோர் கூறுகின்றனர்.

**சாகை** என்பது வைதிகனொருவன் பிறப்பு நாள் முதலாக இறப்பு வரையும் செய்ய வேண்டிய கடமைகளுக்கு வேண்டியவை எல்லாம் விளக்குவதாகும் என்பர். சாகை ஒன்றேனும் செவ்வனே பயிலாத வைதிகன் வேதியனுகான் என்பர். அதுவே அக்கால வழக்குமாம்.

## இருக்கு வேதம்

இருக்கு வேதம் செய்யுள் பலவாய்க் கொண்டது. அதனைச் சம்மிதாபாகம் அல்லது புகழ்மாலைத் திரட்டு (தோத்திரக் கோப்பு) என்பர். இருக்கு எட்டுக் காண்டங்கள் கொண்டது. காண்டம் ஒவ்வொன்றும் எட்டு அத்தியாயங்கள் உடையது. ஒவ்வொரு அத்தியாயமும் பல்வேறு இனங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோரினத்திலும் ஐந்து பாட்டுக்கள் உள. சிலவற்றில் மூன்று முதல் எட்டுப் பாட்டுக்களும் காணப்படுகின்றன. அக்கினி, இந்திரன், திருமால், வருணன் முதலிய தேவர்களைச் சிறப்பாக இருக்குவேதம் புகழ்கின்றது. உருத்திரன், வியாழன், சோமன் முதலிய தேவர்களைப் பற்றிய செய்திகளும், ஆங்காங்கே காணப்படுகின்றன. உழவுத் தொழில், கன்று, காலி எனப்படும் ஆவினம், ஆட்டினம் முதலியன வளர்த்தல், வேட்டையாடுதல், மருத்துவம் முதலியனவும் சொல்லப் பட்டிருக்கின்றன. அக்காலத்தில் நாணயங்கள் வழங்கப்பட்டுள்ளன வென்றும் மக்கள் உயந்ததர ஆடை உடுத்தியும் அணிகள் பலவாய் அணிந்தும் மகிழ்ந்தனர் என்பதும், கூத்து, இசை, சூதாட்டம் முதலீயவற்றில் மக்கள் மிக்கார்வங்கொண்டு ஈடுபட்டு மகிழ்ந்தனர் என்பதும் இதன்பால் அறியப்படும். அன்றியும் இதன்கண் விளங்கும் கருமகாண்டம், மந்திரம், சங்கிதை, பிராமணம் என மூன்று பாகமாகவும் ஞானகாண்டம், உப நிடதம் என ஒரு பாகமாகவும் வகுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

## யசுர் வேதம்

யசுர் வேதம் உரையீடையிட்ட பாட்டுக்கள் கொண்டு விளங்குவது. இது கிருஷ்ணயகர், சுக்கிலயசுர் என்று இருவகைப் பட்டுள்ளது. வைசம்பாயனரே கிருஷ்ணயகர் எனப்படும் பகுதியைத் தொகுத்தவர்.

யாக்ஞவல்கியர் சுக்கிலயசுர் ஆக்கியவர். விஷ்ணு புராணத்தில் யசுர்வேதம் நூற்றெருரு சாகைகளை உடையதென்றும் அவற்றுள் வாஜசநேயிசாகை இருபத்தேழு உள்ளன வென்றும் கூறப்படுகின்றது. பௌதாயனர் தாமியற்றிய கிருஹிய சூத்திரத்தில்

யசுர் வேதம் சௌமியம், ஆக்நேயம், வச்வதேவம், பிரஜாபதி என்ற நான்கு காண்டங்கள் உடையது என்பர். இதன் கண் இந்திரன், உருத்திரன், விசுவரூபன் என்போரது செயலும் தேவாசுரர் எனும் இருதிறத்தார்க்கும் எழுந்த இகல் பற்றியும் பேசப்படுகின்றன. விரிசடைக் கடவுளாம் உருத்திரன் திரிபுரம் எரித்த வரலாறு இதில் விளக்கப்பட்டுள்ளது. பசுபதியே கணங்களுக்குத் தலைவன் என்பதும் வருணன் நீரின் தலைவனாகவும் அரசனாகவும் விளங்குகின்றான் என்பதும் தெரிந்துக் கூறப்படுகின்றன. வைதிகப் பிராமணன் பிறந்தகாலம் தொடக்கம் முனிவர், தேவர், பிதிரர் என்றிவர்களுக்குச் செய்கடனாற்றும் கடப்பாடு உடையவனே என்பதும், அக்கடப்பாட்டினை வேதம் பயின்று நாளும் நினைவு கூர்தலாலும் வேள்வி ஆற்றலாலும் மக்கட்பேற்றினாலும் நிறைவேற்றுகின்றான் என்பதும் இதன்பால் அறிவுறுத்தப் படுகின்றன.

யசுர் வேதகாலம் பற்றி ஆராய்ச்சியாளர் கௌரவர் பாஞ்சாலர் உறவு பேசப்படுவது கண்டு அஃது பாரத காலத்தையடுத்ததென்பர். அன்றியும் சுக்கிலயசுர் எனப் பெயர் தோற்றுவித்த யாக்ஞுவல்கியர் காலமும், வடசொல் இலக்கணம் இயற்றிய காலமும் ஒன்றெனக் கருதுவாருமுளர், பாணினிகாலம் அவர்தம் ஆய்வின்படி கி. மு. அறுநூறு எனக் கொள்ளினும் பாணினி இலக்கணம் இயற்றுவதன் முன்னரே வடசொல்லிலக்கணம் கண்டவர் தொண்ணூற்றறுவர் இருந்தனர் என்றால் யசுர் வேதம் தோன்றிய காலம் குறியாதே யாக்ஞுவல்கியர், சுக்கில யசுர் எனப்பெயர் குறித்த காலத்தைக் குறிப்பதாமன்றிப் பிறிதில்லை. அன்றியும், பாரதப் போருக்குப் பல காலம் முன்னரே கௌரவர் பாஞ்சாலர் உளராதல் அறிவிக்கப் பட்டுள்ளதேயன்றி அது அச்சொற்றொடர் கொண்டு அவ்விரு பகுதியினரும் பாரத யுத்த காலத்தவர் என்பதும் பொருந்தாது.

### சாம வேதம்

சாமம் இசை பற்றி எழுந்தது. இதில் இசையின் நுணுக்கமும் வேறுபாடும், வேறுபாட்டினால் உண்டாகும் இனங்களும் ஓசை நடையும் பலபட எடுத்து விளக்கப்பட்டுள்ளன. ஏகசாமி, பகுசாமி என இரு வகை இசை நடை பேசப்படும். ஒத்த நடை கொண்ட இசைப்பாக்கள் யாவும் ஏகசாமியின் பாற்படும், பல்வேறு நடை கொண்டவை யாவும் பகுசாமியின் பாற்படும். இது ஆயிரம் சாகைகள் கொண்டதெனப் பேசப்படினும், இக்காலத்து உள்ளன

எல்லாம் கௌதம சாகை, தலவகார சாகை என்னும் இரண்டேயாம். தமிழ் நாட்டில் கௌதம சாகை பெரும்பாலோராலும் பயிலப்படுகின்றது. இதன் கண்ணுள்ள பாக்கள் பல இந்திரன், சந்திரன், அக்கினி என்றித் தேவர்களைப் பரவுவன. இசையே தேவர்கள் விரும்பும் காணிக்கைப் பொருளென்று இவ்வேதம் கூறுகின்றது.

**சாம வேத காலம்:** இருக்கு வேத சங்கிதைகளில் காணப்படும், பிருகத் சாமம், இரதந்திரம் என்னும் இரு பாவகை சாமவேதத்தில் உள்ளன. ஆதலால் அச்சங்கிதை தோன்றிய காலத்துக்கும் முன்னையதே சாமவேதமெனக் கொள்ளற்பாற்று.

## அதர்வ வேதம்

அதர்வம் இருபது காண்டங்கள் கொண்டது. காண்டம் ஒவ்வொன்றும் சூத்திரங்களாகவும், மந்திரங்களாகவும் நிறைந்துள்ளது. இதில் நோய் போக்குதல், வராது காத்தல், நாட்டமைதி, அரசன் புகழ், வெற்றி முதலியவை பெறல், திருமணம், சீவன் முத்திநிலை (வீடு பேறு) தீக்கனவுக்கொரு கழுவாய், வைதிகச் சிறுவன் இரு பிறப்பாளனும் பொழுது கூறும் நீடூழி வாழ்த்து, பிரேதகருமம், பிதிர்கருமம், என்றின்னோரன்னவற்றிற்குரிய மந்திரங்கள் மலிந்து காணப்படுகின்றன. இறுதியில் புருடசகுணமும், சோமயாகக் குறிப்புகளும் இதன்பாற் காணப்படும். தீயசெயல்களுக்குத் தேவதைகளைப் பயன் படுத்தும் மந்திரங்களும் இதன்கண் உள்ளன.

## வேதாங்கங்கள்

வேதம் நான்கும் ஆறுவகைப் பொருள் கொண்டுள்ளது கண்டு ஆறு உறுப்புக்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை யாவன, நியாயம், தருக்கம், ஆயுள் வேதம், கந்தருவ வேதம், வில்வேதம், பொருள் நூல், என்பனவாம்.

"மிருதிநூல் புராணத் தொகை வேதநூல் அங்கம்
இருவகைப்படு நியாயம்ஆ யுள்மறை எழிற்கந்
தருவ வேதம்வில் வேதமோ டருத்தநூல் இவற்றின்
பொருளின் உண்மைமற் றிதுஇது வெனத்தனி புகன்றான்"

என்று காஞ்சிப்புராணம்,சார்ந்தாசயப் படலத்தில் காணப்படுகின்றது.

"அங்கமிருவகைப்படும் நியாயம்" என்ற தொடரில் **இருவகைப் படும்** என்பது இரட்டுற மொழிதல் எனக் கொள்ளவே அங்கம் இரு வகையவென்பதும், நியாயம் இருவகையவென்பதும் புலனாகும்.

முதல் ஆறங்கமாவன:- சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என்பனவாம். இவை ஆறும் வேதத்திலுள்ள பொருளுணர்தற்கான கருவிகள் என்பர்.

வேதத்தில் பேசப்படும் பொருள் இவையென வகுத்துக் காட்டிய அறுவகைப்படும் உறுப்புக்களே வேதாங்கங்கள் எனப்படுத லால் அவைபற்றிய குறிப்புக்கள் காணத்தகும்.

1. **நியாயம்** (வழக்கு): இஃது உலகியலிற் காணப்படும் பொருளும்,பொருளின்நிலையும், தன்மையும், செயலும் நிகழ்வதுகண்டு, அதனை எடுத்துக் காட்டுவதே வழக்கில் காணப்படுவதென்பதாம், உதா ரணம்,குருவி இருந்தது பனம் பழம் விழுந்தது என்பது வழக்கு.இதனைக் காக தாலிக நியாயம் என்பர். குயில் காக்கையின் கூட்டில் முட்டை யிடுவதென்பது வழக்கு. இதனைப் பிகாண்ட நியாயம் என்பர்.

2. **தருக்கம்** (கேள்வி பதில்): இஃது உண்மை உணர்தற்குக் கருவியாகும். ஐயம் முதலிய வகைப்படுவினாக்கள் எழுப்பி விடை யறிந்து உண்மை உணர்தலாம்.

3. ஆயுள் வேதம் (**ஆயுள் மறை**): இஃது உடல்வளநலனும் உயிர்வளநலனும் பெற்று ஆயுள் நீடிப்பதற்கு உள்ள வழிவகை உணர்த்துவது; மருத்துவமுறை விளக்குவதுமாம்.

4. கந்தருவ வேதம் (**யாழோர் மறை**); இஃது நரம்புக்கருவி வழி இசையெழுப்பிப் பயிலுதலும் யாழோர் இயலும் எடுத்து விளக்குவது

5. **தனுர் வேதம்** (வில் மறை); இஃது வில் வழி ஏவும்படைக் கலம் முதலாக விடுபடையென்றும் விடாப்படையென்றும் வகைப் படுத்தும், உணர்வுடைய படை, உணர்வில்லாத படையெனவும் வகுத்தும் காட்டப்பட்டுள்ளன. போர் முறையும், அணிவகுப்பும் பெரிதும் இதன் கண் விளங்கும்.

6. **அருத்தம்** (பொருள்): நாட்டின் பொருளாதார நிலை இவ்வாறு அமைந்திருத்தல் வேண்டுமென்று நன்கு விளக்குவது.

**ஆறங்கங்களின் மற்ருெரு விளக்கம் பின்வருமாறு:-**

1. **சிட்சை** *(பயிற்சி):* இஃது வேதம் ஓதுங்காலே எழுத்து அசைந்து சீராவது போல எழுத்தோசையை வழுவாது காக்கும் முறையினை (உச்சரிக்கும் முறை) எடுத்துக் கூறும். வேதத் தொடக்கம் வேதமந்திரங்கள் மாறுபாடின்றி வழங்கிவருவதன் காரணம், மந்திரங்களை அவற்றிற்குரிய ஓசையளவில் பிறழ்ச்சியின்றி உச்சரிப்பதுவே யாகுமென்பர். எமக்கு உயிர்ப்பு இன்றியமையாதது போல வேத புருடனுக்கு இஃதோர் உயிர்ப்புக் கருவியாம் மூக்குப் போன்றது.

2. **வியாகரணம் (இலக்கணம்).** இஃது வேதத்திற் காணப் படும் சொல்லின் இலக்கணம் விளக்கும் ஓர் உறுப்பாகும். சொற்களைப் பகுத்துப் பகுதி இது, பகுதியின் விகுதி இது என்று விளக்கி நிற்பதால் இதற்கு வியாகரணம் எனப் பெயராயிற்று. இப்போது வடமொழியில் வழங்கி வரும் சொல்லிலக்கண நூல்களில் கிடைத்த அளவில் பாணினி இயற்றியதே பழைமையானது. என்ருலும் பாணினியின் முன்னர் பல ஆசிரியர் வடமொழிச் சொல்லிலக்கணம் யாத்து இவ்வுலகினுக்கு அளித்துள்ளனர் என்பது நன்கறியப்படும். ''வாய்'' என்னும் சொல் இன்மையால் இதனை இடவாகுபெயராய் முகம் என்று கொண்டு வேதபுருடனின் முகம் எனத் திகழ்வது என்பர்.

வேத உண்மைகளை ஒருவன் நன்கு உணர்ந்து, தான்பயின்று ஓதுதற்கும், பிறருக்கு ஓதுவித்தற்கும் வியாகரணப் புலமை, இன்றியமையாதது. அங்ஙனம் உண்மைப் பொருளைப் பிறரும் நன்குணர்ந்து அறியச் செய்யவே சிவாலயங்களில் வியாகரண தான மண்டபம் அமைத்து வந்தனர். திருவொற்றியூரில் இத்தகைய வியாகரணதான மண்டபம் சிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**நிருத்தம்** (வேத நிகண்டு) இஃது வேதச் சொற்களுக்குப் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் இதுவெனவும், ஒருபொருள் குறித்த பல சொல் இவையெனவும் விளக்குவதாகும். மொழிப் பொருட் காரணம் இதுவெனவும் நிருத்தம் கூறும். சொற் பொருளுணர்ச்சி இல்லாதவன் வேத நூற் பொருளை யாதெனத் தேறமுடியாதவனுகின்ருன் என்பது இதனுல் அறியப்படும்.

**சாதிடம் (கோள்நூல்):** இஃது நாள் (நக்ஷத்திரம்) பக்கம் (திதி) கோள் (கிரகம்) நிலை அறிந்து வரும் பயன் விளக்கி உரைப் பதற்குண்டாம் நெறியும் முறையும் பகர்வது. மதி மறைவு, கதிர்

மறைவு (மறைவு = கிரகணம்) என்னும் இவை நிகழுங்கால் எளிதில் அறிவதற்குரிய கணிதப் பகுப்பும் உடையது. சுருங்கக் கூறின் வான நூற் கணிதமும், கோள்நிலை தருபயனும் நன்கு விளக்குவது. கணிதத்தையும் கோள்களையும் பற்றிய செய்தி கூறுவது சித்தாந்தம் என்றும், மக்களின் இன்ப துன்பச் செய்தி கூறுவது சாதகம் என்றும் இரு பகுதியினவாம். வேள்வி, மணம், சடங்கு முதலியன இயற்றுதற்குரிய காலம் ஒரை இவற்றைக் கணிக்கும் முறையினையும் சோதிடம் குறிக்கும். இஃது வேத புருடனுடைய கண் என்பர். கண்ணொளியானது ஒரு பொருளைக் கதிரவனது ஒளிவழிச் சென்று பற்றி உற்று நோக்கி அறிவது போன்று, யாம் நன்குணர்ந்து உறுவது காண்பதற்குச் சோதிடமானது ஓங்கி உயர்ந்து ஆழ்ந்து அகன்று விளங்கும் விசும்பிடையே இயங்கும் நாள்மீன் கோள்மீன் இவையே அன்றித் தோன்றும் ஏனைய விண்மீன் ஆகியவற்றின் நிலையும் தன்மையும் பற்றி விளக்குவதுமாம். கரணம், யோகம், வாரம் என்பன பின்னர்த் தோற்றுவிக்கப்பட்டன என்பர். இம்முறையினுள்ளும் வாரம் என்பது உரோமாபுரியினின்றும் தோன்றிப் பிறநாடு சென்று பரவுங்கால் கொண்டதேயன்றிப் பண்டு அச்சொல்லே (வாரம் = ஏழுநாள்) இந் நாட்டில் இருந்ததில்லை என்று பேராசிரியர் கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் விளக்கி நிறுவியுள்ளார்கள்.

**கற்பம்:** இஃது இலெளகிகம், வைதிகம் என்று இருவகைப் படும். கருமங்கள் செய்யும் முறை பற்றிக் கற்பிப்பதால் கற்பம் எனப் பட்டது போலும். "அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே', என்றபடி வேதம் பயின்று நாள்தோறும் நினைவு கூர்ந்து எழுத்தோசை அளபினை எண்ணி உச்சரித்து உணர்ந்து, பின்னர் வியாகரணம் முறையே பயின்று சொல்லும் பொருளும் தேர்ந்து தெளிந்து ஆற்றுங் கருமங்கள் ஆற்றவேண்டிய காலம் அறிந்து கொள்வதன் பயன் நல்ல கருமங்கள் நல்லதொரு குறித்த வேளையில் செய்வதே ஆகும். எந்த எந்த வருணத்தவர் எந்தஎந்தக் காரிய கருமங்கள் செய்தல் வேண்டும் என்றும், எந்த எந்த ஆசிரமத்தவர் எந்தஎந்தக் காரிய கருமங்கள் செய்யத் தக்கவர் என்றும் கூறுவதோடு, ஒவ்வொரு கருமத்துக்கும் உரிய மந்திரம், தேவதை ஆகியவற்றையும், இன்னோரன்ன பிறவும் கூறுவது கற்பமேயாகும். ஒரு செயலாற்றப் புகுங்கால் ஒருவனுக்குக் கை எவ்வாறு இன்றியமையாது வேண்டப் படுமோ அவ்வாறே வேத புருடனுக்கு இது கையாகும்.

**சந்தோவிசிதி (சந்தசி):** இஃது வேத மந்திரங்களுக்குச் சிறப்பாக அமைந்துள்ள அளபெடை ஓசை (சந்தஸ்) கற்பிப்பதால் சந்தோவிசிதி எனப் பெயர் பெறலாயிற்று. ஒவ்வொரு மந்திரத்திற்கும் தனிப்பட வேறு பட்டியலும் சந்தசும் உண்டு. நிறைமொழி மாந்தர் பலராலும் அவர் அவர் அவ்வப்போது எமக்களித்த மறைமொழியாகிய மந்திரங்கள் எம்மால் ஆளப்படும் போதெல்லாம் அவற்றினை எமக்கு உதவிய அம்முனிவர்தம் பெயரினை நினைவுகூர்தற்பொருட்டு அவர்தம் பெயர்களும், மந்திரங்களின் அதிதேவதைகளின் பெயர்களும், மந்திரங்களில் இடம் பெற்றுள்ளன. மந்திரங்களில் வேண்டியவாறு கூட்டியும் குறைத்தும் எமது இசைவுக்கேற்ப மாறுபாடு இழையாதவாறு என்றும் காத்து நிற்பது இச்சந்தசு ஒன்றேயாகும்.

மந்திரம் சொல்லி வைக்கப் பெற்றவர்கள் மந்திரத்தைத் தனியாக ஓரிடத்திலிருந்து நினைவு கூர்ந்து பயிலும்போது அம்மந்திரத்தைக் கண்டு எமக்குப் பண்டே தந்தருளிய முனிவரின் பெயரை நினைந்து சொல்லித் தலையின் உச்சியை முதலில் தொடுதல், மந்திரத்தின் சந்தசைச் சொல்லித் தன் மூக்கைத் தொடுதல், மந்திரத்தின் அதி தேவதையை நினைந்து பெயரைச் சொல்லி நெஞ்சைத் தொடுதல் மரபு என வகுக்கப்பட்டுள்ளது. சந்தசு, மந்திரங்கள் ஒரே படித்தாய் நிலைபெறுதற்கு ஆதாரமாகத் தாங்கி நிற்பதால் அதனை வேத புருடனின் கால் என்பது பெருவழக்கு.

மேற் கூறியவற்றால் வேதம் நான்கினும் பரவலாகப் பொதிந்து கிடக்கும் பொருள்களை வகைப்படுத்தியதன் காரணமாக, நியாயம் தருக்கம், ஆயுள்வேதம், கந்தருவம், தனுர்வேதம், அருத்தம் எனப் பெயரிய வேதாங்கங்கள் ஆறு என்பதும், அவற்றினும் வேறாய் வேதத்திற் சொல்லப்படும் பொருளை இற்றெனக் கண்டு தெளிதற்கு ஏதுவாய் வகைப்படுத்திய சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம் கற்பம், சந்தோவிசிதி என்னும் ஆறு உறுப்புக்கள் அமைக்கப் பெற்றதால் அவற்றையும் உடன் கொள்ள வேதாங்கங்கள் இரு வகைப்படும் என்பதும் அறியப்படும்.

"அங்கங்களும் மறைநான்குடன் விரித்தான்" என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் தரும் திருவாக்காகும். இதனால் வடமொழியில் வேதம் நான்கும் தோற்றுவிக்கும் முன்பிருந்த தமிழ் மறை ஒன்றே நால்வகைப்படு பொருளும் (அறம் பொருள் இன்பம் வீடு என்பன) தன்னுள்ளே கொண்டியங்கினவென்பதும்; அந்நால்வகைப் பொருளுங்கொண்டு மிளிர்ந்த தமிழ் மறை விளங்கும் காலத்திலேயே அதனுட் பேசப்படும் பல்வேறு பொருளும் உடன் கலந்து அமைந்துள்ளமை கண்டு, அவற்றை "நேர்படு மணியை நிரல் பட வைத்தாங்கு" வகைப்படுத்தித் தொகுத்த கூறுகளே வேதாங்கங்கள் ஆவன என்பதும் தெளிவாகும். பின்னர்க் கூறிய ஆறு உறுப்புக்களும் வடசொல் வேதம் ஆக்கிய பின்னரே தோற்றுவிக்கப் பட்டிருந்தல் வேண்டும். பண்டைத் தமிழ் மறையின் எழுத்தோசை வேறுபாடு தானே இயல்பாய்ப் பொருந்த அமைந்துள்ளதென்றும், மந்திரங்களுக்கு அம்மந்திரங்கள் இயங்குதற்குக் கருவியாய் இயலும் எழுத்தோசையினை அளபு கொடுத்து உரைக்கப் பட்டுள்ளதென்றும் உள்ள உண்மையினைத்தான் தொல்காப்பியனார் "அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே" என்று கூறியிருத்தல் வேண்டும். எனவே . வடசொல்வாணர் தாம் வேதம் தோற்றுவிக்கும் காலத்தே தாம் புதியதாய் ஆக்கிய எடுத்தல், நலித்தல், படுத்தல் என்றின்னோரன்ன குறிக்கும் எழுத்தினது தன்மை இதுவெனக் காட்டும் பொருட்டே சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என்னும் ஆறு அங்கங்களும் முறைப்படத் தொகுத்து வேதாங்கங்கள் என்ற பெயருஞ் சூட்டியிருத்தல் வேண்டும் என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

# 2. சமயம் - சைவம் - சைவசித்தாந்தம் - சிவம்

## சமயம் என்றால் என்ன?

பசி மனிதனுக்குள்ள ஒரு நோய். இந்தப் பசிநோய் உணவினு லன்றித் தீராது. எனவே பசி நீங்க உணவை உட்கொள்ள வேண்டும். பசி நீங்கினால் சோர்வு நீங்கிப் பலம் உண்டாகும். அஃதாவது சுகம் உண்டாகும். இதனால் உடற் சுகம் வேண்டினால் உணவு வேண்டு மென்பது பெறப்பட்டது. இஃது உடம்பிற்கான சுகசெய்தி. இவ்வாறே பிறவிநோய் வாய்ப்பட்டிருக்கும் உயிருக்கு வேண்டுவது பிறவா இன்ப மாகும். உயிருக்கு இப்போது இருப்பது முடிவில்லாப் பிறப்புக்களால் ஏற் பட்ட இளைப்பு. இந்த இளைப்பு நீங்க வேண்டும். நீங்குவதற்கு உதவி யாய் இருப்பது ஞானம். இந்த ஞானம் எப்படிக் கிடைக்கும்? சாப்பாடு எப்படிக் கிடைக்கிறது? அதனை அறிந்தோர் ஆக்கி அளிக் கின்றனர். அவ்வண்ணமே ஞான நெறி அறிந்தார் ஞானத்தைத் தெளிவிப்பர். இவ்வாறு ஞானமுதிர்ச்சி பெற்றவர்கள் மற்றவர் களுக்குப் பயன்படும் வண்ணம் ஞான முறைகளை நுங்கு உரைக் கின்றனர்.

'போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்கு மதுபோல்
புருஷர் பெறுதர்மாதி வேத முடனாகமம்
புகலுமதி னுலாம் பயன்
ஞானநெறி, முக்கியநெறி காட்சியனு மானமுத
லுறைவிதங்க டோர்ந்து
நானு னெனக் குளறு படைபுடை பெயர்ந்திடவு
நான்குசா தனமுமோர்ந்திட்(டு)
ஆனநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற்(று)
அணுபக்ஷச சம்புபக்ஷம்
ஆமிரு விகற்பமு மாயாதி சேவையு
மறிந் திரண் டொன்றென் னுமோர்
மானத விகற்பமற வென்றுநிற் பதுநமது மரபு''

(சித்தாந்த சைவ மரபு)

—தாயுமானவர்

இவை கால தேசங்களுக்கு ஏற்பக் கூடும், குறையும். எனினும் அடிப்படையில் கூடுதலோ குறைவோ இராது. இவ்வடிப் படை ஞான நிலையே சமய நிலை எனப்படும். எனவே ஞானமே சமயமாம். சமயமே ஞானமாம்.

ஒளி இல்லையெனில் இருள் நீங்காது. ஞானம் இல்லையெனில் அறியாமை இருளால் ஏற்படும் துன்பம் விலகாது. நமக்கு இருப்பது துன்பம். இத்துன்பத்தைக் கட்டறுப்பது சமயம் எனப்படும். எனவே சமயத்தின் நோக்கம் இன்னதென்பது வெளிப்படை. "The aim of religion is to get rid of nature's Control over us" என்பது ஒரு ஆங்கிலப் புலவரின் வாக்கு. அஃதாவது சமயத்தின் நோக்கம் எங்கள் மீதுள்ள இயற்கையின் ஆதிக்கத்தைக் கட்டறுப்பது என்ப தாகும். இதனையும் நாம் சிந்தித்தல் வேண்டும்.

ஓர் ஊருக்குச் செல்ல வழி உதவுவது போன்று பிறவா இன் பத்தை எய்தச் சமயம் உதவுகின்றது.

சமயம் நம்மை யாரென உணர்ந்து கொள்ள உதவுகிறது. நமக்குள்ள துன்பங்களை உணர்த்துகிறது. துன்ப நீக்கத்திற்கு வழிகளைக் சொல்கிறது. அவ்வழிச் சொல்வோரை அடைவிக் கிறது. அவ்வழியிற் செல்வாரோடு கூட்டுகிறது. முடிவிலா இன் பத்தில் மூழ்க வைக்கிறது. தன்னை அறிதல், தலைவனை அறிதல் தடையை அறிதல், தடையை அறுத்தல், நன்மை தலைப்படுத்தல் என்ற இவற்றையும் இவை போன்றவைகளையும் படிப்படியாக ஆக்கி அளிக்கிறது சமயம்.

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே" என்றும்

தன்னை அறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளா லன்றே"

என்றும் திருமந்திரம் கூறுவது சிந்திக்கற்பாலது, இம்மையில் சமுதாய நலத்துக்காவன யாவும் சமயத்தால் அமைவனவேயாம். இதனாலேயே நாத்திகமும் ஒரு சமயமாக ஒரு சாரரால் கொள்ளப்படுகிறது.

சமயத்தின் அடிப்படை, ஞானம். ஞானத்தைத் தருபவன் கடவுள். கடவுள் அருள் கொண்டு அருளியவையே வேதாகமங்கள். இவைகள் ஞானசாதனங்கள். இவ்வழி வந்த யாவும் ஞானநூல்கள் எனவும் தத்துவ நூல்கள் எனவும் கூறப்படும். இத்துணையவை யெல்லாம் தெரிவிக்கும் வழிகளே சமயக் கொள்கைகள் எனப்படும். இக்கொள்கை வழி நடப்பதுதான் சமயாசாரம் என்பதாகும். இவ்வழி, தாமும் நடந்து பிறரையும் நடத்துவோரே ஞானுசாரியர்கள்.

மருந்தளித்தலும் பத்தியங் கூறலும் வைத்தியரின் உதவிகளாம். மருந்தை உட்கொள்ளலும் பத்தியங் கடைப்பிடித்தலும் நோயாளியின் கடமையாகும். இவற்ருல் விளைவது உடற்சுகமாம். இங்ஙனமே சமயநெறி நிற்றல் மக்களின் கடமை. இதன் விளைவே பூரண சுகமாகும். கண்ணில்லையென்ருல் எதனையுங் காணல் இயலாது. ஒளியிருந்தும் பயனில்லையாய் முடியும். ஆதலால் சமயம் இல்லையெனில் உணர்ச்சி ஏற்படாது. இவ் வுண்மைஉணர்ச்சியில்லையேல் பிறப்பால் பயனில்லை, எனவே சமயம் உயிர்நாடி போன்று உதவுவது என்பது வெளிப்படை.

**சைவ சமயம்**

மக்களாகப் பிறந்தோர் ஈடேறுவதற்குச் சமயம் இன்றியமையாதது என்பதை ஆரம்பத்தில் அறிந்து கொண்டோம். இவ்வுலகில் சமயங்கள் பலவுண்டு. ஒவ்வொரு சமயமும் தான் தான் சிறப்பு மிக்கது எனக் கூறுகின்றது. இது அந்த அந்தச் சமயத்தவர்களின் கருத்தாகும். மனிதராகப் பிறந்தவர்களின் அறிவு, குணம், நிறம், தோற்றம், முதலியன ஒரு படித்தாயில்லை. ஆகலின் அவரவர் பண்பாடுகட்கேற்பக் கொள்கைகளும் பலவாயின. இவ்வாற்ருல் சமயங்களும் பலவாயின. ஒவ்வொரு சமயமும் ஏதாவதொரு கொள்கையை வற்புறுத்திச் சொல்லும். எல்லாச் சமயங்களின் எல்லா நல்ல கொள்கைகளும் வேண்டியவையே. ஒரு மேல் மாடத்துக்கு இட்டுச் செல்லும் படிகள் பல உண்டு. ஒவ்வொன்றும் அதன் அதன் உயரத்துக்கு ஏற்றும். இங்ஙனமே எல்லாச் சமயங்களும் உதவுகின்றன. எல்லாச் சமயங்களும் ஓரிடத்தை அல்லது ஒரு பொருளையே அடையச் செய்கின்ற முறையில் பாடுபடுகின்றன. எனினும் மக்களின் கருத்து வேற்றுமைகளால் கடவுளும் பலராகக் காட்டப் படுகின்ருர். உண்மையில் கடவுள் ஒருவரேயாவர். கடவுளுக்கு வழங்குகின்ற எல்லாப் பெயர்களும் ஒரே கடவுளையே சுட்டுகின்றன. எல்லாப் பொருள்

களையும் தன்னுள் அடக்கி யாவற்றையுங் கடந்து நிற்பது கடவுளுடைய ஒரு தன்மையாகும். இவ்வாறு புறத்தே வியாபித்திருத்தலோடு அமையாமல் எல்லாப் பொருள்களின் உள்ளேயும் தங்கி இருப்பதும் கடவுளின் இன்னொரு தன்மையாகும்.

கடந்திருத்தல், உள்ளிருத்தல் என்ற இரண்டும் கடவுளின் இயல்புகளாம். இதனுலேயே **கட** எனவும் **உள்** எனவும் **உள்ள** இரு சொல்லையும் சேர்த்துக் **கடவுள்** என்ற ஒரு பெயரை நம் தமிழ் முன்னோர் இட்டு வழங்கினர். இன்னும், எல்லாவற்றையும் இயக்குவது என்னும் கருத்தில் **இயவுள்** என்றும் அழைத்தனர். மேலும் எக்காலத்தும் நிலைத்திருப்பது என்னும் பொருளில் **இறைவன்** என்றும் அவர்கள் பெயரிட்டு வழங்கினர். இவை தமிழ் மொழியில் காணப்படும் மிகவும் பழைமையான சொற்கள் என்பதும் இங்கு எண்ணத்தக்கது.

**சிவன்** என்ற சொல்லுட் **சிகாரம்** கடந்து நிற்றலைக் குறிப்பதாகும். **வகாரம்** உள்ளீடாய் நிற்றலைக் குறிக்கும். **கடவுள்** என்ற சொல்லும் **சிவ** என்ற சொல்லும் ஒரே கருத்துடையன என்பது பெறப்படும், எனவே இரு சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பன என்பது மிக மிகத் தெளிவு.

சிவம் வியாபகமுடையது. வியாபகமாவது கடந்தும் கலந்தும் நிற்றலாகும். ஆகலின் சிவம் எனினும் கடவுள் எனினும் ஒன்றேயாம்.

சிவத்தினும், மேம்பட்ட ஒரு பொருள் பிறிதில்லை. யாவும் இப்பொருளுள் வியாப்பியமாகும். யாவற்றையும் தன்னுள் வியாப்பியமாகக் கொண்டுள்ள சிவத்தைப் பற்றி (கடவுளைப்பற்றி) உரைப்பதே சைவம் எனப்படும்.

சிவசம்பந்தம் சைவம் என்ப. சிவத்தின் மேம்பட்ட பொருள் வேறில்லை. ஆகலின் சைவமே யாவற்றினும் சிறந்தது. சைவத்தின் மேம்பட்டது வேறொன்றில்லை.

மரம் என்றதும் அதன் கிளை, பூ, காய், முதலிய எல்லா உறுப்புக்களும் அடங்கும். மனிதன் என்றதும் அவனது கண், காது, கை, கால், வயிறு முதலிய எல்லா அவயவங்களும் அடங்கும். இவ்வாறே

சைவம் என்ற பொழுதே எல்லாச் சமயங்களும் அதனுள் அடங்கும். எதிர் காலத்தில் வேறொரு புதுச் சமயம் ஏற்பட்டாலும் அதுவும் சைவத்தேயல்லாது புறத்தே நிற்கமாட்டாது. இது பற்றியே அருணந்திசிவாசாரியார்,

"ஓதுசமயங்கள் பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் (அச்சமயம்) பொருள் நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்லதெனும் பிணக்கதின்றி
நீதியினால் (முறைமையினால்) இவையெல்லாம் ஓரிடத்திற் காண
நின்ற தியாதொருசமயம் அதுசமயம் பொருள், நூல்''

எனக் கூறிப் போந்தார்.

அஃதாவது:-

ஓது சமயங்கள் - சொல்லப்பட்ட சமயங்களும், பொருள் உணரும் நூல்கள் - அச்சமயப் பொருள்களை உணர்த்தற்கேது வாகிய நூல்களும், ஒன்றோடொன்றொவ்வாமல் உள பலவும் — மாறுபட்டனவாகவுள்ளன பலவுமான, இவற்றுள் சமயம் யாது, பொருள் நூல் யாது இங்கு என்னின்—இவற்றுள் (முதன் மையான) சமயம் யாது அச்சமயப் பொருளை உணர்த்தும் நூல் யாது இவ்விடத்தென்னின், இது ஆகும், அது அல்லது எனும் பிணக்கது இன்றி—இது பொருந்தும், அது பொருந்தாது என்னும் பிணக்கின்றி, நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண நின்றது யாதொரு சமயம் — முறைமையான இவையனைத்தும் ஒருங்கே காணப்பட்டு நின்றது எச்சமயமோ, அது சமயம் பொருள் நூல்—அதுவே (முதன்மையான) சமயமும் அச்சமயப் பொருளை (உணர்த்தும்) நூலுமாதலின்.

உலகில் உண்மை நெறி காட்டும் சமயங்கள் பல உள. இவை யாவும் அந்த அந்தக் காலங்களுக்கும், இடங்களுக்கும், உயிர்களின் பக்குவங்களுக்கும் ஏற்ப அந்த அந்தச் சமயங்களுக்கு ஏற்ற தலைவர் களைக் கொண்டு ஆக்கப்பட்டவையாகும். இது பற்றியே சிற்சில சமயங்கள் அவ்வச்சமயத் தலைவர்கள் பெயரால் அழைக்கப்படு கின்றன.

## சைவ சித்தாந்தம்

எல்லாச் சமயங்களின் உண்மை நுண்மைகளையும் எக்காலத்துக்கும் எவ்விடத்து உயிர்களுக்கும் ஏற்ற கொள்கைகளையுங் கொண்டு அமைந்தது சைவ சமயமாகும். இஃது இறைவனே கண்டருளியது ஆதலின், சைவம் எனச் சிவசம்பந்தப் பெயராலே தொன்று தொட்டு வழங்கி வருகின்றது.

(இப்போது இச்சைவ சித்தாந்த சமயம் சம்பந்தமாக ஒரு புதிய பெயர் வழங்கி வருவதையும் இங்குக் குறிப்பிட்டேயாக வேண்டும். அது **இந்து** சமயம் என்பதாகும். **இந்து** எனின் அச்சொல் **சிந்து** என்பதன் திரிபேயாம். இது இடவாகு பெயராய் நின்று சிந்து நதிபாயும் வெளிப்பரப்பில் தங்கிய மக்களைக் குறிப்பதாம். அங்ஙனம் குறிக்கும்போது அம்மக்கள் ஒழுகிய சமயம் என்றுவதே பொருத்தமும் பொருளுமாகும். ஆகவே அம்மக்கள் ஒழுகிய சமயப் பரப்பினையே எடுத்துக் காட்டும். **இந்து** என்னும் அடைமொழி சைவ சித்தாந்தத்திற்குப் பொருந்தாது, என விடுவதே சாலும். இதைச் சைவ சித்தாந்த சமயத்தினர் மனத்திற் கொள்ளல் வேண்டும்.)

சைவசமயம் முடிந்த முடிபாகத் தெளிவாகக் கூறுகின்ற கொள்கையே சித்தாந்தம் எனப்படும். சித்தாந்தம் என்பது 'சித்த + அந்தம் என்ற இரண்டும் சேர்ந்த சொற்றொடர். **சித்த** என்பதன் முடிவில் **அ** இருக்கின்றது. **அந்தம்** என்பதன் முதலிலும் **அ** இருக்கின்றது. இவ்விரண்டும் உயிர்கள். உயிர் உயிருடன் சேர்வதில்லை. மயிலும் சேவலுமாக இரண்டு உயிர் சேர்ந்து முருகப் பெருமானிடத்திலே இருக்கின்றன. வேறு எங்கும் இல்லை. எனவே சித் என்றால் **கிடைத்த** என்று பொருள் கொண்டு பல நூல்களிலும் ஆராய்ந்து முடிவாகக் கிடைத்த முடிபே சித்தாந்தம் என்று கொள்வதே சாலும். இன்னும் சித்தம் + அந்தம் = சித்தாந்தம் என்றும் கொள்வதோடு சித்தமாக, தயாராக, உறுதியாக, நிச்சயமாக முடிந்த முடிபாக உள்ள மெய்யறிவே சித்தாந்தம் என்றும் கூறுவர். மேலும் சித் என்பதற்குச் சிற்சத்தி, பரை, அருள், ஆணை, பராசத்தி அறிவு எனவும் பொருள் உண்டு. இதனால் சித்தாகிய அருளறிவின் அந்தம், சத்தாகிய மெய்ப்பொருளேயாகும் சித்தாந்தம். ஆகலின் சித்தாந்தம் மெய்ப்பொருள் விளக்கம், உண்மைப் பொருளறிவு என்றுகும். உண்மையே உள்ள பொருள், பரம் பொருள், அதுவே பொருளாம். சத்தாகிய உண்மைப் பொருளும் சித்தாகிய சத்தியும்

கூடி ஆனந்தமயமாகவிருந்து, எங்கும் நிறைந்து, ஐந்தொழில் நடத்தும் உண்மையைச் சித்தாந்தம் விளக்கும். அந்த உண்மையறிவின்பப் பொருளைச் சித்தாந்தம் **சிவம்** என்னும் செம்பொருளாக விளக்கும்,

சிவம் தனது அருட் சத்தியால் உலகாக விளையாடி, ஆன்மாக் களைப் பாசமறுத்து ஆட்கொள்ளும் கருணைத் திறத்தையே சித்தாந் தம் உறுதியாகக்கூறும் என்ப. மேலும் கூறுவதாயின், ஆணவம் கன்மம், மாயை ஆகிய அழுக்கேறிய ஆன்மாவைக் கருணைத் தாய் போன்று எடுத்துக் கழுவி, மாசகற்றிச் சுத்த ஆன்மாவாக்கித் திருவருள் பொழிந்து, ஞானக்கண் திறந்து, சிவமாகிய மெய்ப்பொருளோடு உடனாய், ஒன்றாகாமல், இரண்டாகாமல், ஒன்றுமிரண்டும் என்றாகாமல் பிரிவறியாது நிற்கும் நற்கதியைத் தருவதே சைவசித்தாந்தமாகும்.

"கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுள்ளோர் சைவசித் தாந்தரே"

என்பது திருமந்திரக் கூற்றாகும்.

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

—சித்தியார்.

# 3. வேததரிசனங்கள் (காட்சிகள்)

## சங்கிதைகள் - பிராமணங்கள் - உபநிமிடதங்கள்

தரிசி (காண்) என்ற வினைச் சொல்லடித் தோன்றிய சொல்லே தரிசநம் என்றுயிற்று. வேத நூற்கருத்தை நுண்ணிதின் ஆய்ந்து தேர்ந்து அவ்வழி பற்றி ஒழுகிப் பலகாலம் தவம் கிடந்து தம் தவத்தின் அளவே விளக்கமுறும் நுண்ணறிவால் அறிவர், பலரும் தாம் தாம் கண்டு அவ்வப்போது உரைத்த உண்மைகளே தரிசனங் களாகும். இவற்றை ''வேதக் காட்சி'' என்பர்; கந்தபுராணம் தமிழிற் பாடியருளிய ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியாரும் பிறரும் அம் முனிவர்தம் அநுபவக் காட்சி என்றுங் கூறுவர்.

பெரியனவாயும், சிறியனவாயும், நேரானவையாயும் வளைந் தோடும் இயல்புள்ளனவாயும் ஒடுகின்ற ஆறுகள் பலவாயினும் அவை யெல்லாம் இறுதியில் ஒரே கடலிற் சென்று கலத்தல் போலவே தரிசநங்கள் பலவாயினும் பரம்பொருளை அடைதற் குரிய நெறியையே காட்டுவனவாம் என்பர் வைதிக ஒழுக்கமுடையார். அறியாதார் போலும்.

ஆறுகள் எங்கு நோக்கி ஓடிச் செல்லினும் இறுதியாகக் கடலில் சென்று கலத்தல் உண்மையேயாயினும், அவற்றுள்ளும் சில பல ஆறுகள் இடையே இற்றெழுகி யறுந்து கடல் செல்லாது காய்ந்து வறுநிலமாய் விளங்குதலும் வெளிப்படையே. அது போன்று, தவத் தளவே, தாம் பெற்ற விளக்க நுண்ணறிவால் (ஞானத்தால்) கண்ட காட்சியும் அமையும் என்க. அங்ஙனம் ஓரிடத்து இற்று ஒழிந்த காட்சியாதலின்

''வேதக் காட்சிக்கும் உபநிடதத்(து) உச்சியில் பழுத்த
போதக் காட்சிக்கும் காண்கலன்''

என்று இம் மூவகைக் காட்சிக்கும் அப்பாற்பட்டு விளங்குவதால் ''காண்கலன்'' என்றது நோக்குக.

**தரிசநங்கள்**

பூர்வம், உத்தரம் (முற்பகுதி, பிற்பகுதி) என்னும் இருவகை மீமாம்சங்களும், சாங்கியம் யோகம், நியாயம், வைசேடிகம் என் பனவுமாகத் தரிசநங்கள் ஆறு என்பர். இவை வேதத்தின் அடிப் படையாம். உண்மைப் பொருள்களைத் தவம் கிடந்து கண்டு கண்ட வாறே உரைப்பதால் தரிசநங்களாம்.

**பூர்வ மீமாம்சம் (மீமாஞ்சை எனவுங் கூறுவர்)**

பூர்வ மீமாம்சம் என்பது வேதத்தின் கண்ணே கரும காண்டம் எனப்படும் முதற்பகுதியாய் அமைந்துள்ளது. ஒவ்வொருவனும் பிறந்து வளர்ந்து அறிவும் வளரவே தான் உறையும் சூழ் நிலையை ஒட்டி அமைந்த தன்னுடைய இன்றியமையாத தொழில்களைக் கடைப் பிடித்து ஒழுகி வாழ்தல் வேண்டும் என வலியுறுத்திக் கூறுவதாம். இதனை இயற்றிறவர் ஜைமினி என்னும் முனிவர்.

**உத்தர மீமாம்சம்**

உத்தர மீமாம்சம் வேதத்தின் பிற்பகுதியாய் அமைந்துள்ள ஞானகாண்டமேயாதல் துணிபு. ஆக்கல், காத்தல், அழித்தல், என்னும் மூவகைப்படும் தொழில் நிகழ்ச்சிகளுக்கும் உலகிலுள்ள சித்து(அறிவுப் பொருள்)அசித்து (சடப் பொருள், அறிவு இல்பொருள்) என்பவற்றிற்கும் மூலகாரணமாய் விளங்கும் ஒரு பொருளாம் பிரமம் எனப்படும் பெரும் பெயர்க் கடவுளை அடைதலே பிறந்த இப்பிற வியின், பெருநோக்கும், பயனுமாம் என வற்புறுத்தி உரைப்பதாய் இது அமைந்துள்ளது. இதனையே பிரமமீமாஞ்சை எனவும் வேதாந்தம் எனவும் கூறுவர். இதனை வகுத்தவர் வேதவியாசர் எனப்படும் வாத ராயணரே ஆவர் எனும் தவமுதிர் செல்வர் என்றால் மிகையாகாது. வாதராயணமுனிவராம் இவர் யாத்த பிரம்மசூத்திரத்துக்குப் பொருள் கண்டவர்களும் நால்வரேயாவர். அவர்தாம் சங்கரர், இராமாநுசர், மாத்வர், நீலகண்டசிவாசாரியார் என்ப. இத் தரிசநம் ஜைமினி முனிவரால் ஆக்கப்பட்டதென்பாருமுளர்.

**சாங்கியம்**

சாங்கியம் என்பது நிரீச்சுரவாதம் (உலக முதல்வனும் பெரும் பெயர்க் கடவுள் இல்லை என மறுத்துரைப்பது) பற்றி நிகழ்த்துவ தாகும்; ஆன்மாவாகிய உயிர் தன்னை அறிந்து தன் சித்துநிலையிலே நிற்கின்ற செய்தியாம் கைவல்லியத்தைக் கூறுவதாகும். ஆன்மா ஒன்றல்ல. பலவே, ஆன்மா சித்துருவானது, செயலற்றது, பற்றற்றது; பிறப்பு மூப்பு பிணி இறப்பு என்ற இன்னல்கள் அற்றது; ஆனால் மாயை என்றதோர் சடப் பொருள் ஆன்மாவைத் தன்செயல் வலையில் சிக்கவைத்து விடுகிறது; அதனால் ஆன்மாதானே, செயலைச் செய்வது போல எண்ணித் தவிக்கிறது; தானல்லச் செய லாற்றுவது என்ற உண்மையினை அறிந்து பிரகிருதி (மூலப்பகுதி) யாம் மாயையினின்றும் தன்னைப் பிரித்துத் தனியாய்த் தன் சித்து நிலை யிலே நிற்பதுதான் கைவல்லியம் என நிறுவுவதாகும். இதனை ஆக் கியோன் கபிலர் எனப்படும் முனிவர் என்ப. திருத்தொண்டர் புராணத்தில் பேசப்படும் சாக்கிய நாயனார் இச்சாங்கியமென்னும் தரிசனத்தைப் பின்பற்றி ஒழுகி வந்தவராவர் என்பது குறிப்பிடத் தக்கது.

**யோகம்**

யோகமுறை பற்றி இஃது விளக்கிச் சொல்லுவதால் யோகம் எனப் பெயர் பெற்றது. சாங்கிய தரிசநத்திற் கூறிய அடிப் படைக் கொள்கைகளைப் பின் பற்றிச் சாதன மார்க்கம் (பயிற்சிநெறி) முற்கூறிய கைவல்லியத்தை அடைவதற்கான யோக அப்பியாசம் உணர்த்துவதாம். இதனை ஆக்கியோன் பதஞ்சலி எனப்படும் மாமுனிவர் ஆவர்.

**நியாயம் (நையாயிகம்)**

நியாயம் என்பது உலகியலிற் காணப்படும் நிகழ்ச்சி வழக்கினை எடுத்துக் காட்டுவதாகும் (நியாயம்=வழக்கு). உலகைப் படைப்பான் ஒருவன் உளதாதல் வேண்டும், எனத் தன் அறிவின் முதிர்வால் ஆய்ந்து உரைப்பதாகும். உலகை அறிவில்லாத பொருளாகிய மாயை எனும் மூலப்பகுதி படைக்காது. பிரகிருதி (மூலப்பகுதி) யைச் செயற்படுத்தி உலகைப் படைத்தற்கு முதல்வன் ஒருவன் இன்றியமையாது வேண்டப்படுவான். சிற்றறிவு உடைய உயிரால் முடியாமைக்கு வேண்டும் நியாயங்களை எடுத்துக்காட்டி, கடவுளை-பெரும்பெயர்க் கடவுளை-ப் படைப்பின் முதல்வனாக ஏற்ப உரைப்பதே இத்தரிசநத்தின்பாற் காணப்படும். இதனை வகுத்தவர் கௌதமன் எனப்படும் மாமுனிவராவர். அக்கபாதன் என்னும் முனிவனே இந் நூலை ஆக்கியோன் எனவுங் கூறப்படுகிறது.

### வைசேடிகம்

பரம்பொருள் உண்மையைக் கடாவிடையொடு தருக்கநெறியால் முறையே நிறுவி உரைப்பதால் இஃது வைசேடிக தரிசநம் எனப்பட்டது. ஐந்து பூதங்கள், மனம், ஆன்மாவாம் உயிர், காலம் முதலிய தத்துவங்களால் (அழிவில் பொருள்) உலகம் ஆனது என்னும் உண்மையினை ஆய்ந்து காட்டுவதாம். இதனை வகுத்தவர் கணாதர் என்னும் மாமுனிவர்.

மேற் கூறிய அறுவகைப்படும் தரிசநங்கள் வடமொழி வேதத்தைத் தழுவி எழுந்தனவாதல் வெளிப்படை.

### சங்கிதைகள்

சங்கிதை அல்லது சம்கிதை என்னும் இச் சொல்லின் பொருள் சேர்க்கை அல்லது தொகுப்பு என்பதாம். வேதங்களிலே சொல்லப் படும் கரும காண்டப் பகுதியில் பற்பல தேவர்களுக்குரிய மந்திரங்களும் பிராமணங்களும் அடங்கியுள்ளன. அவற்றுள் மந்திரங்களை வகைப்படுத்தி ஒருங்கே அமையத் தொகுத்துள்ள தொகைகளைச் சங்கிதைகள் எனப் பெயரிட்டனர். மந்திரங்கள் ஒழுங்கின்றி வேதங்களில் ஆங்காங்கே கலந்து பரவலாய்க் கிடந்தவற்றை அவ்வத் தேவர்களுக்குரிய மந்திரங்களாய் வகுத்து ஒழுங்குபடுத்திய காலத்தையே சங்கிதைக் காலம் என்பர். அக்கினி, வருணன், இந்திரன், சூரியன், சந்திரன் பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய தேவர்களுக்குரிய மந்திரங்களைப் பிரித்து எடுத்து வகைப்படுத்தித் தொகுக்கப் பட்டுள்ளன காண்க.

## இருக்குவேத சங்கிதை

இருக்குவேத சங்கிதை பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன்கண் காணப்படும் மந்திரங்கள் 3339. இவைகள் பல தேவர்களின் பண்பினைக் கூறுகின்றன. மூன்று உலகங்களிலும் சென்று உலாவி வரும் ஆற்றல் வாய்ந்தவர்கள் இந்திரன், அக்கினி என்று சில மந்திரங்கள் பாராட்டுகின்றன. தேவர்களிற் சிறப்புடையவர்களாக அக்கினி, சோமன், வருணன் இந்திரன், விஷ்ணு, உருத்திரன், ரிபுக்கள் முதலியோரையே இதன்பாற் காணப்படும் மந்திரங்கள் போற்றி வருணிக்கின்றன. இதன்கண் உள்ள மந்திரங்

களைக் கண்டு எமக்குதவிய முனிவர்கள் பெரும் புலமை மிக்க கவிஞர் (பவிநர்)களாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும், ஆதலால் நுண்கருத்த றியக் காவியம் பயில்வோன் எவ்வாறு அக்காவியச் சுவையில் ஈடு பட்டிருப்பானோ, ஈடுபட்டிருத்தல் வேண்டுமோ அவ்வாறே மந்திரங் களின் உட்கருத்தை அறிய முயல்பவன் அம்மந்திரங்களில் திளைத்தல் வேண்டும். காலப் போக்கில் வேத காலத்துள்ள பழக்க வழக் கங்கள் மாறுபட்டுள்ளன. ஆதலால் இக்கால வழக்கத்தைக் கொண்டு அக்காலத்திய மந்திரங்களுக்குப் பொருள் காணமுயலுத லாகாது. மந்திரம் தோற்றுவித்த இடமும் காலமும் வழக்கும் ஒருங்கே உணர்ந்தறிந்தாலன்றி உண்மை காணல் இயலாது. மந்திரங்களைப் போற்றவோ தூற்றவோ செய்யாது நடுநின்று ஞமன்கோல் அன்ன சீர்மைத்தாய் அறிய முயன்றால் உண்மை நன்கு புலனும். சங்கிதையிற் காணும் மண்டலப் பிரிவே வரலாற்று முறை அறியப் பொருத்தமானதென்றும் அம்மண்டலங்களுள் பல ஒரு காலத்துத் தனித்தனிக் குடும்பங்களில் அத்தியயனம் செய்யப்பட்ட மந்திரங் களைக் கொண்டு விளங்குபவை என்றும், பிற்காலத்திலேயே அவை தொகுக்கப்பட்டுள்ளன என்றும் ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர்.

### யசுர்வேத சங்கிதைகள்

யசுர்வேதத்தில் காணப்படும் சங்கிதைகள் காடகம், மைத்தி ராணியம், தைத்திரீயம் என்னும் மூன்றேயாம். இவற்றுள் காடக சங்கிதை நான்கு காண்டங்களே உடையது. மைத்திராணிய சங் கிதை நான்கு காண்டங்களைக் கொண்டது. தைத்திரீய சங்கிதை ஏழு காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் காணப்படும் மந்தி ரங்கள் யாகங்களில் ஆற்ற வேண்டிய கிரியைகளுக்கு உரியனவாய் உள்ளன. வேதத்தைத் தாயாகக் கொண்டு அதனைத் துதித்தால் ஆயுள், புகழ், செல்வம் முதலியன மிகும் எனவும் உடலை விட்டு நீங்கிய (இறந்த) உயிர்களை மாதலி, இயமன், பிருகற்பதி எனும் மூவரும் பிதிர் உலகத்துக்கு அழைத்துச் செல்வார்கள் எனவும் கூறப் படுகின்றன. ஆவினம் எருது என்பவற்றின் பயனைப் பாராட்டியு ரைக்கும் பகுதியும், மரணச் சடங்குகளைப் பற்றிக் கூறும் பகுதியும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

ஒருவன் தேவ காரியங்களைச் செய்யும் போது உபவீதி (இடது தோளில் பூணூலையிட்டு மார்பிலிடுதல்) யாகவும் பிதிர் காரியங் களைச் செய்யும் போது பிராதிநாவீதி (வலத் தோளில் பூணூலையிட்டு

மார்பில் விடுதல்) யாகவும், மனிதர் காரியங்களைச் செய்யுங் காலத்தில் (மலம் நீர் கழித்தல் போகம் செய்தல் முதலியன) நிவீதி (கழுத்தில் தொங்கும் வண்ணம் பூணூலை அணிதல்) யாகவும் இருத்தல் வேண்டுமென யசுர்வேத சங்கிதைகள் கூறும். உலகத்திலுள்ள சமய சாத்திர ஆராய்ச்சிக்கும், சமயங்களில் தேவத்தியாநம் இன்றியமையாதது எனக் கொள்ளுதற்கும் இச்சங்கிதைகள் மிகவும் பயன் தரவல்லனவெனப் புலமைமிக்கோரால் கருதப்படுகின்றன.

## சாமவேத சங்கிதைகள்

இசையோடு சார்ந்த இருக்கு வேதச் செய்யுள்களே சாம வேதமாம் என்பது முன்னர்க் கூறப்பட்டுள்ளது. கானம் செய்யப் படும் இருக்குகளுக்குச் (பாட்டுக்கள்) சந்தம் பலவாய் அமைந்திருப் பதால் பல வேறுபடு சந்தம் கொண்ட பாக்கள் சாமவேத சங்கி தைகளில் காணப்படுகின்றன. இச்சங்கிதையில் பிரகிருதி (மூலம் அல்லது முதல்) பாகம் என்றும், விகிருதி (இறுதி) பாகம் என்றும் இரு பிரிவுகள் உள்ளன. இவற்றுள் பிரகிருதிப் பாகத்தில் உள்ள மந்திரங்கள் அத்தியயனம் (நினைந்து கூறுதல்) செயற்கு உரியன. விகிருதி பாகத்தில் உள்ள மந்திரங்கள் யாகங்களில் ஓதக் கூடிய இசையுடன் பொருந்தியன என்று கூறப்படுகின்றன. பிரகிருதி பாகத்துச் சாமங்களின் பாக்கள் பூர்வாச்சிகம் என்னும் நூலிலும் விகிருதி பாகத்துச் சாமங்களின் பாட்டுக்கள் உத்தரார்ச்சிகம் என்னும் நூலினும் உள்ளன. பூர்வார்ச்சிகத்தில் பன்னிரண்டு பதி கங்கள் அக்கினியையும் முப்பத்தாறு பதிகங்கள் இந்திரனையும் பதி னொரு பதிகங்கள் சோமனையும் பாராட்டுகின்றன. தேவர்கள் இசை யில் மிகவும் விருப்பங் கொண்டவர்கள் என்பது அறியப்படும்.

## அதர்வவேத சங்கிதை

இஃது இருபது காண்டங்கள் கொண்டது. அக்காண்டங்களி லுள்ள மந்திரங்களில் பெரும்பாலானவை நாட்டின் அமைதி பற்றி யும், மன்னனின் வெற்றியினைக் குறித்தும், மக்களுக்கு உண்டாம் நோய்களைப் போக்கும் வகை குறித்தும் நோய் வராது காக்கும் வகை குறித்தும் கூறப்படுவனவாம். திருமணம், உபநயனம், சாந்தி, பிதிர்கருமம் முதலியவற்றிற்குரிய மந்திரங்களும் இதில் காணப்படு கின்றன. ஆறும் காண்டத்தில் யாகத்தில் பிழைபாடு நேரிடின் அது தீர்த்தற் பொருட்டுச் செய்யப்படும் பிராயச்சித்தம் (கழுவாய்)

சொல்லி அதற்குரிய மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன. பிரேதங்களுக்குப் புதுத்துணி போர்த்தல், அவற்றை ஆசந்தி (மூங்கிலால் ஏணி போலச் செய்யப்படுவது) கட்டி ஏற்றிக் கிடத்தித் தோளின் மேல் ஏற்றிச் சுமந்து கொண்டு போதல், இரட்டை மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லுதல், தீயிட்டு மூட்டி எரித்தல், மண்ணிற் புதைத்தல் என்னும் வழக்கங்களையும் உலகியல் உண்மைகளையும் விளக்கிக் கூறும் பகுதிகள் இதன்பால் உள்ளன.

யாகங்களைக் குற்றமறச் செய்விக்கும் பொறுப்பு வாய்ந்த பிரமாவுக்கே அதர்வவேத சங்கிதையில் உள்ள மந்திரங்களை அறியக் கூடிய ஒரு தனிப் புலமை உண்டென்றும் கூறுகின்றனர் ஆய்ந்த அறிவினவர். யாகங்களை முற்றுச் செய்ய வொட்டாது அழிக்க வரும் மாற்ருரை அழிக்க வல்ல மந்திரங்களையும், யாகம் செய்பவருக்கு வரும் நோய்களைப் போக்குதற்குரிய மந்திரங்களையும் அதர்வ வேதப் புலமையினுல் பிரமா பெற்றிருந்தார் என்றும் புலமிக்கவர்கள் புகன்றுள்ளார்கள்.

மக்கள் கவலையின்றி வாழ்வதற்கு நாடு அமைதி பெற்றிருத்தல் வேண்டும் என்றும், அமைதியை நிலைநாட்டுவோன் அரசனென்றும், மக்கள் அரசனுக்கு உதவியாய் அமைந்திருத்தல் வேண்டும் என்றும் அதர்வவேத சங்கிதை கூறும். அன்றியும் நாட்டில் அமைதியும் மக்கள் உடல் வலிமையும் பொருந்தி இருப்பதால் மட்டும் முன்னேற்றங் காண முடியாது. குடும்பத்தில் கணவனும் மனைவியும் மனம் ஒத்தவராய் அமைந்தொழுகி வாழவேண்டும். 'இருதலைப் புள்ளின் ஓருயிர்' போல மனமொன்றி வாழ்வாங்கு வாழ்கின்ற மக்கள், மேலாம் வாழ்வு வாழ்ந்து நாட்டை நன்னிலைப் படுத்துவார்கள் என்னும் உண்மையும் இதன்பாற் பரக்கக் காணலாம்.

## பிராமணங்கள்

வேதத்தின் கருமகாண்டப் பகுதியில் உள்ள மந்திரங்களை வகைப்படுத்தித் தொகுத்த தொகுப்பே சங்கிதைகள் என அறிந்தோம். அங்ஙனம் தொகைப் படுத்திய மந்திரங்களின் பொருளுரையே பிராமணம் எனப்பட்டது. பிராமணம் உரைநடையில் இயங்கிச் செல்வது. இஃது மந்திரங்களின் பெருமை, சிறப்பு, பயன் முதலானவற்றைக் கூற எழுந்ததேயன்றி அம்மந்திரங்களுக்குரிய அதிதேவதைகளைப் பற்றி வருணிக்க அல்ல என்பதும் அறியப்படும். எனவே மந்திரங்களின் பொருளும், அவற்றை வழங்க வேண்டிய

மரபும் தெளிவாய் அறியப்பட்ட பின்னரே பிராமணங்கள் தோன்றி யிருத்தல் வேண்டும் என்பதே துணிபு. ஆகவே சங்கிதைகளில் பேசப்படும் மந்திரங்களுக்குப் பொருள் அறிந்த பின் பிராமணங்கள் ஆக்கியவற்றைத் தொகுப்பித்துள்ளதால் அக்காலம் பிராமண காலம் என்றாயிற்று, பிராமண காலம் அறிய முற்பட்டாரும் பலராவர். அவர்தம் கூற்றும் முரண்படலாயிற்று. அவரெல்லாம் பிராமண காலம் கி. மு. 2000 - 1000 ஆண்டுகளுக்குள் என்பர்.

பிராமணங்களின் முதற்பகுதி மந்திரங்களின் பொருள் மரபு ஆகியவற்றைக் கூறுவதாகும். இரண்டாம் பகுதி ஆரணியவாழ்வு (வானப்பிரஸ்தநிலை) மேற் கொண்டார்க்கு உரிய ஒழுக்கம் (தருமம்) விளக்கும். ஆனதால் இப்பகுதி ஆரணியகம் எனப் பெயர் கொண்டது. மூன்றும் பகுதி; ஒருவன் வீடுபேறு அடைவதற்கு உதவும் நல்லாசிரியனை அடைந்து உயிரின் (ஆன்மா) தனி நிலையை உள்ளவாறுணர்ந்து தெளியும் வகை இயம்பும். வேதத்திலுள்ள மந்திரங் களுக்கே பொருள் உரை செய்வதால் பிராமணமும் வேதத்தின் பாற்பட்டதுகொண்டு வேதம் என்றே கூறற்பாற்று. பிராமணத் தைக் கடைப்பிடித்தொழுகுவதால் பிராமணன் ஆகிறான் என்று கூறப்படுதலும் காண்க.

## சங்கிதைகளிலுள்ள மந்திரவடிவங்கள்

நான்கு வேதங்களின் சங்கிதைகளிலும் மந்திரங்கள் நிறைந்துள்ளனவாயினும் இருக்கு வேதசங்கிதையிலும், அதர்வவேதசங்கிதைகளிலும் உள்ள மந்திரங்களிற் பெரும்பாலானவை செய்யுள் வடிவமாகவே அமைந்துளன. யசுர்வேத சங்கிதை உரை நடையிலும், சாமவேத சங்கிதை இசை நடையிலும் இயல்கின்றன. பிராமணங்கள் கிரந்தம் (Samskrit) தேவநாகரி (Sanskrit) என்னும இருலிபிகளிலும் உள்ளன.

## இருக்குவேதப் பிராமணங்கள்

இருக்கு வேதப் பிராமணங்களில் இரண்டே இப்போது வழக்கில் காணப்படுவன. அவை ஐதரேயம், கௌஷீதகீயம் என்பனவாம்.

## ஐதரேயம்

ஐதரேயப் பிராமணம் நாற்பது அத்தியாயங்கள் கொண்டது. இதனுள் வேள்வி இலக்கணங்களும் அவற்றை ஆற்றும் முறைகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. 360 நாள்களைக் கொண்டது ஒரு வருடம்

என்பதும், புலமை வாய்ந்தோர் எஞ்ஞான்றும் எவ்விடத்தும் உண்மையே கூறுதல் வேண்டுமென்பதும், பிரசாபதி இவ்வுலகத்தைப் படைத்தார் என்பதும் இதன்பால் அறியபபடும்.

## கௌஷீத கியம்

சௌஷீத கியப் பிராமணம் முப்பது அத்தியாயங்கள் கொண் டது. வேள்வி ஆற்றுதலால் அடையும் பேறுகளும், மந்திரத்தால் தேவதைகளைக் கூவி அழைக்கும் முறைகளும் இதன் கண் இடம் பெற்றுள்ளன. வசிட்டனும் கோசிகனும் (விசுவாமித்திரன்) உடன் பாடு உடையவராயிருந்தனர் என்பதும், அச்சுவினர் என்றழைக்கப் படும் தேவ மருத்துவர் இருவர் இருந்தனர் என்பதும், இருக்கு, யசுர், சாமம் எனப்படும் வேதங்கள் மூன்றுமே உள்ளன என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இதனைச் சாங்காயநம் என்பர். இப்பிரா மணத்தின் கண்ணே பேசப்படும் வசிட்ட விசுவாமித்திர முனிவர் இரு வருக்கும் உறவு பேசப்படுவது கண்டு, சோழகுலத்து வேந்தன் அரிச் சந்திரன் காலத்தும் அதன் முன்பும் பின்புமாக அவ்விரு பெரும் முனிவரும் இருந்தனர் என்ற வரலாற்றையும் ஒப்பு நோக்குவோ மாயின் இப் பிராமணம் தோன்றிய காலத்தில் இவ்விருவருமே உளதாதல் வேண்டும். எனவே இக்காலத்து மேலை நாட்டுப் புலமை மிக்க ஆராய்ச்சியாளர் கூற்றும், அவர் தம்மை ஒட்டியோ அன்றி வெட்டியோ அவர் கூறும் கால எல்லைக்குள் அமையத் தங்கருத்தினைக் கூறும் ஆராய்ச்சியாளர் தம் முடிபும் எங்ஙனம் பொருந்தும் என்று கருதி அச்சுறுவது தவிர வேறு காணக் கூடவில்லை;

## யசுர்வேதப் பிராமணங்கள்

யசுர்வேதத்தில் தைத்திரீயம், காண்வம், சதபதம் என்னும் மூன்றே பிராமணங்கள் உள்ளன.

## தைத்திரீயப் பிராமணம்

தைத்திரீயப் பிராமணம் இருபத்தெட்டு அத்தியாயங்கள் கொண்டது. விசாப்பி, அவிசாப்பி, விசாதி, அவிசாதி என நால் வகையான நரகங்கள் உள்ளன என்பதும், காலையிலும், மாலையிலும் கதிரவனையே பிரமா எனக் கொண்டு தியானம் செய்யும் பிராமணன்

எல்லா நன்மைகளையும் அடைந்து பிரமமே (பெரும் பெயர்க் கடவுள்) ஆகின்றான் என்பதும் ஐம்பெரும் வேள்விகளின் இலக்கணங்கள் யாவை என்பதும் இதன்பால் விளக்கமுறுகின்றன.

**காண்வசாகீயப் பிராமணம்**

காண்வசாகீயப் பிராமணம் வேள்விகளின் வகையும் சிந்து, கங்கை, தொழுனை (யமுனை) எனும் ஆறுகளின் கரையோரங்களில் ஆற்றப்பட்ட வேள்விகளின் சிறப்பும் எடுத்துக் கூறுவதாகும்.

**சதபதப் பிராமணம்**

இஃது நூறு அத்தியாயங்கள் கொண்டு மிளிர்வதால் சதபதப் பிராமணம் என்றாயிற்று. (சதம் நூறு கூறு) இதில் ஆரியர்கள் தொடக்கத்தில் சரசுவதியாற்றின் மேல் பாற் கரையிலிருந்து சதாதீர ஆற்றின் கரையோரம் வரை வந்து, பின்னர் அதைத் தாண்டிக் கடந்து கீழ்நாட்டினை வந்தடைந்தனர் என்பதும், மனிதனுகப் பிறந்தவன் தேவர்கடன், முனிவர்கடன், பிதிரர்கடன், மனிதர்கடன் என இந்நான்கு கடன்களும் உடையவனுகின்றான் என்பதும், குண திசை தேவர்களுக்கும் குடதிசை பிதிரர்களுக்கும் உரியவாதலால் அத்திசைகள் நோக்கிப் பாயல் கொள்ளக்கூடாது என்பதும் கூறப்பட்டுள்ளன.

**சாமவேதப் பிராமணங்கள்.**

சாமவேதத்தில் தலவகாரம், தாண்டியம், சட்விம்சம், சாம விதாநம், ஆர்சேயம், தைவதம், வம்சம், சம்கிதோபநிடதம், சாந்தோக்கியம் என ஒன்பது பிராமணங்கள் உள்ளன.

**தலவகாரப் பிராமணம்.**

ஆரணியவாழ்க்கை (வானப்பிரஸ்தம்) உற்றோர் ஒழுக்கம் விரித்துரைக்கின்றது. சுக்கிரன் அசுரர் செய்த யாகத்தின் தலைவனுய் அமைந்ததும், தேவரும் அசுரரும் தம்முள் மாறுபட்டதும் தொடக்கத்தே வேதங்கள் மூன்றே உள்ளதும், அதர்வ வேதம் பின்னர்த் தோன்றியதும் இதன்கண் அறியப்படும். இதற்குச் சைமிநீயம் என மாற்றுப் பெயரும் உண்டென்பர்.

### தாண்டியப்பிராமணம். (பஞ்சவிம்சம்)

இஃது முப்பத்தாறு அத்தியாயங்கள் கொண்டது. சரசுவதி, யமுனை எனும் இவ்விரு ஆற்றங்கரை வெளியில் ஆற்றிய வேள்விகளைப் பற்றிய செய்தி இதன் கண் காணப்படும். சுக்கிரன் அசுரர்களுக்கு ஆசான் என்பதும் தேவரும் அசுரரும் பிரசாபதியின் புதல்வரே என்பதும் இதில் பேசப்படுகின்றது. இதனைத் தண்டயப் பிராமணம் என்பர் சிலர்.

### சட்விம்சப் பிராமணம்

இதில் காலை மாலை ஆற்ற வேண்டிய சந்திக்கடனும் அற்புத மாகிய சாந்தியும் விளக்கப்பட்டுள்ளன.

### சாமவிதாகப் பிராமணம்

இஃது மனிதன் செய்த பாவங்களைப் போக்கும் கழுவாய் (பிராயச்சித்தம்)களும் அவற்றின் அங்கமான ஓமங்களும் கூறும்.

### ஆர்சேயப் பிராமணம்

இஃது சங்கிதையில் கூறப்பட்ட சாமங்களுக்கு (இசைப் பாட்டு) உரிய சுவை முதவியவற்றைத் தெளிவாகக் கூறுகின்றது.

### தைவதப் பிராமணம்

இதில் தேவதைகளைப் பற்றிக் கூறப்படுகின்றது.

### வம்சப் பிராமணம்

இது சாமவேத அத்தியயனம் (பயிற்சி) செய்யும் ஆசிரியர் பரம்பரையை விளக்கிக் கூறும்.

### சங்கிதோபநிடதம்

சங்கிதைகளின் வேற்றுமை அவற்றின் கண்ணுள்ள மந்திரங்களின் வேற்றுமை ஆகியவைபற்றி விளக்கம் கூறுவது சங்கிதோபநிடதம்.

### சாந்தோக்கியப் பிராமணம்

இது சாமகானம் பயிலும் முறைபற்றிய யாவும் செவ்வனே எடுத்துரைப்பது. சாமகானப் பயிற்சியுடையோர் சந்தோகர் எனப் படுவர் என்பதும் இதன்கண் அறியப்படும்.

### அதர்வவேதப் பிராமணம்

அதர்வ வேதப் பிராமணமே கோபதப் பிராமணம் எனப்படும். இதன்கண் வேள்விகளில் பிரமா அதர்வவேத வழி ஒழுகும் வேதிய ஞய் இருத்தல் வேண்டுமெனவும் அதர்வம் அறிந்தவன் யாவும் அறிந்தவன் எனவும் சொல்லப்படும்.

### உபநிடதங்கள்

உப நிடதம் வேதத்தின் ஈற்றில் விளங்கும் ஞானகாண்டப் பகுதியை ஊன்றி ஆய்வதால் இப்பெயர் பெற்றது. ஞானம் வேத முடிவேயாதலால் உபநிடதம் வேதாந்தம் எனச் சொல்லப்படும். வேத சிரசு எனவுங் கூறுவர் பெரியோர். உபநிஷத் என்னுஞ் சொற் றொடர் சிரத்தையோடு அருகிருத்தல் என்றும் பொருள் தரும் என்பர் ஒருசார் அறிஞர். பிறிதொருசார் அறிஞர் உப + நி + ஸத் (ஸாயதி) எனப் பகுத்துச் சமீபம் தவருமல் கூளகிறது என்பர்,

உபநிடதத்திற் கூறப்படும் தத்துவக்கொள்கைகளைத் தழுவிப் பின்னர் எழுந்த நூல்களுக்கும் வேதாந்தம் எனவே பெயரிடப்பட்டு வழங்கலாயிற்று. வேதாந்தம் எனக் கூறப்படும் உபநிடதக் கருத் துக்களாம் தத்துவக் கொள்கைகளினைத் தழுவிச் சைவசித்தாந்தக் கொள்கைகள் எழுந்தன என்றும் கூறுவர் ஒரு சார் அறிஞர். அங்ஙனம் அற்றென்பதன் உண்மை உணர்த்தவே, கந்தபுராணத் தின்கண் பேசப்படும் சநகாதி நால்வருக்கும் மற்றும் தேவர்க ளுக்கும், முதன்மை தரும் வேதம் நான்கும் உலகுயிர்க்குத் தலைவஞ வான் யாவன் என எளிதில் எவரும் உணரமுடியாவண்ணம், அமைந்துள் ளது கண்டு அந் நால்வரும் அத்தலைமைப் பொருள் தேராது மயங்கி, இறுதியில் தக்கிணமூர்த்தி எனப்படும் ஞான குருவினுல், மூன்று பொருள்கள் உள்ளன எனவும், இவற்றுள் முதல்வஞவான் ஒருவன் உளனெனவும், அம் முதல்வனே ஏனையவை சார்தற்குரிய பொரு ளாவான் எனவும் எடுத்துரைக்கப்பட்டது என்க.

மேலே கூறிய உண்மையினையே குமரகுரு பரசுவாமிகள் எடுத்து எமக்கு விளக்கியுள்ளனர்; "ஒரும் வேதாந்த மென் றுச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி" என்பது அவர் கூற்று. எனவே வேதாந்தம் எனப்படும் மரத்துச்சியில் "தீராவேட்கை" என்றுங்கு "ஆராஇன்பம்" தரப்பழுத்தது, அருங்கனியேயன்றி அக்கனிதான் தன் சாரமாகிய தேனை ஒழுக்குவில்லையே என்பது புலனாகும்.

ஆதலால் அன்றோ அக்கனி மிக்க அருமையாயினும் காரியமில்லை என்பதனை ஓர்ந்து, அக்கனியை நன்றாய் இறுகப் பிழிந்து கொண்ட சாரமாகிய தேன் சைவ சித்தாந்தம் என்றார். "அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தத்தேன் அமுது" என்பதாம்.

இங்ஙனம் அக்கனியைப் பிழிந்து அதன் சாரமாகிய தேன் அமுதைப் பெறும் பொருட்டே எழுந்தன சிவாகமங்கள் என்பர். அச் சிவாகமங்களும், யாவும் வல்ல இறைவனாலேயே மகேந்திரம் எனப் படும் மலையின்கண் எழுந்தருளித் தோற்றுவிக்கப் பட்டது என்பர். "மன்னு மாமலை மகேந்திர மதனிற், சொன்ன ஆகமம்" என்பது மணிவாசகப் பெருமானார் திருவாக்காகும்.

வேதத்தினுள் அடங்கிய உள்பொருள் (பொருளுண்மை) உண்மையினை எளிதில் உணரமாட்டாமை காரணமாக, அதனை நன்கு உணர்ந்து யாம் உய்யும் பொருட்டுச் சிவாகமங்கள் உரைக்கப்பட் டுள்ளன. எனினும் அதனை உணர்வார் என்றும் ஒரே ஒரே படித் தாய் உணர்வார் என்றும், உணர மாட்டார் என்றும், உணரா ரென்றும், அவர், வேதம் வேறு, ஆகமம் வேறு கற்பிப்பதென்றும் கொண்டு வேற்றுமை காண்பர் என்றும் திருமூலர் எடுத்துக் காட்டி யுள்ளார்.

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே" —திருமந்திரம்

(பொது நூல் அன்பியலை (உலகியலை) மிகுதியாகவும் அருளிய லைப் (வீட்டியல்) பொதுவாகவும் கூறுவது. சிறப்பு நூல் அருளியலை மிகுதியாகவும் அன்பியலைப் பொதுவாகவும் கூறுவதாகும்)

எனவே உபநிடதங்கள் யாவும் வேதத்தின் அந்தமாம் ஞான காண்டப் பகுதியை ஆய்ந்துரைப்பனவேயாம். அவற்றுள் சடம் எனப்படும் அறிவில் பருப் பொருள் பற்றியும் அப் பருப் பொருளை ஆயும் போது அவற்றுக்கு முதலாம் நுண்ணிய தன்மையாம் பொருள் பற்றியும், அந்நுண்பொருள் தோன்றுவதற்கும் முதலா யுள்ள காரணப் பொருள் பற்றியும் ஆய்வுரைகள் பல வகையிலும் காணப்படுகின்றன. இம் மூன்று நிலையும் தூலம், சூக்குமம், காரணம் என முறைப்படுத்திச் சொல்லப்படும். காரணமாம் மூலகம் (Element) அல்லது மூலப் பொருளினது இயல், ஆற்றல், தொழில் முதலியன பற்றியும் இவற்றின்கண் ஆயப்பட்டுள்ளன. இறுதியாய் அம்மூலப் பொருள் தம்இயல் மாறுபட்டும், ஆற்றலிழந்தும், தொழிற்பாடற்றும் அறிவில் பொருளாய் அமைந்து விளங்குவனவென்றும் கூறும்.

அவையே அன்றியும், இங்ஙனம் தொழிற்படும் மூலப் பொருள் தொழிற்பாடற்று, அறியாமைக்கொரு படித்தாம் பொருள் காரண மாகவுள்ளது என்றதோர் ஏதுவும் எடுத்துக் காட்டும் இதனில் உள்ளதென்றால் மிகையாகாது. முடிபு ஒருங்கொத்து விளங்காதாயி னும் பொருளுண்மை அறிதற்கு நல்ல வாயில்களாய் அமைந்து விளங்குவனவே உபநிடதங்கள் எனக் கொள்ளற்பாற்று.

''தத்துவமசி'' ''அகம்பிரமாஸ்மி'' என்ற இவ்விரு மகாவாக் கியங்களுக்கும் உள்பொருள் உண்மை ஆராயும் பொருட்டே உபநிட தங்கள் யாவும் எழுந்தனவாம் என்பர் பெரியோர்.

''சேய்மைச் சுட்டாம் பெரும் பெயர்க் கடவுள் உண்மையினைப்
பிரம்மம் என்பதும் ''அது'' வேயாமென்ப.
பரமான்மா எனப்படும் அண்மைச் சுட்டாம் பெரும் பெயர்
இயவுள் உண்மையினை ஆன்மா என்ப.

உபநிடதக் கருத்துக்கள் மொகலாய மன்னன் ஔரங்கசீப் என்பவனது முன்னோன் தாராசிகோ என்பவனால் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் பாரசீக மொழியில் முதன் முதலாக மொழிபெயர்க்கப் பட்டன. பின்னர் மேலை நாட்டவரும் தாம் தாம் மொழிபெயர்த் துப் போற்றினர்; பொருள் ஆய்வும் செய்ய முற்பட்டனர். அவர் தம் ஆராய்வின் விளைவே நம்மை இன்று இவ்வுலகத்தில் அணுவுலக வாழ்க்கையின் முன்னேற்றங் காணச் செய்தது என்றால் உபநிடதக் கருத்துக்களை யாமும் ஆயும் கடப்பாடுடையோமன்றோ?

இன்று உலவும் உபநிடதங்கள் பலவாகும். ஆன்றோர் கூறுவ தெல்லாம் உபநிடதம் நூற்றெட்டு என்பவேயாம். அவற்றுள்ளும் பதின்முன்றே நம்மவரால் போற்றப்படுவன. அவற்றுள் ஈசம்,கேநம் கடம், பிரச்நம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம், ஐதரேயம் சாந்தோக்கியம், பிருகதாரண்யகம், என்னும் இப்பத்தும் சங்கராச் சாரியர் முதலியவர்களால் உரை செய்யப்பட்டுள்ளன. இவையே அன்றியும் மைத்திரேயணியம், சுவேதாச்வதரம், கௌஷீதகீயம் என் பனவும் பாராட்டப் பெற்றுள்ளன. இன்னும் மகாநாராயணம், அதர்வசிரசு, பஸ்மஜாபாலம், உருத்திராஜாபாலம் என்பன சைவ சித்தாந்தச் சார்புடையன என்றும் பெரியோர் கூறுவர்.

## இருக்குவேத உபநிடதங்கள்

இருக்கு வேதத்தின் வழித்தோன்றினவாய்,ஐதரேயம், கௌஷீத் கீயம் எனும் இரண்டு உபநிடதங்கள் காணப்படுகின்றன.

## யசுர்வேத உபநிடதங்கள்

கிருஷ்ணயசுர் வேதத்தில் கடம், தைத்திரீயம், மைத்திரேய ணீயம், சுவேதாச்சுவதரம், என்னும் நான்கு உபநிடதங்களும் சுக்கிலயசுர் வேதத்தில் ஈசாவாசியம், பிருகதாரணியகம் என்னும் இரண்டு உபநிடதங்களும் நிலவுவனவாயின.

## சாமவேத உபநிடதங்கள்

சாமவேதத்தில் கேநம், சாந்தோக்கியம் எனும் இரண்டு உப நிடதங்கள் உள்ளன.

## அதர்வவேத உபநிடதங்கள்

அதர்வவேதத்தில் பிரச்நம், முண்டகம், மாண்டூக்கியம் என்னும் மூன்று உபநிடதங்கள் உள்ளன. மேலே கூறிய பதின்மூன்று உப நிடதங்களும் பெரும்பெயர்க் கடவுள் நிலையினை அது (பரமான்மா) என்றும், பெரும்பெயர் இயவுள் நிலையினை, தான் (சிவான்மா) என்றும், எனவே 'அதுவேதானே' என்றும் அறைகூவுவனவாம். இவ்வுண்மையி னையே, மேலை நாட்டவரும் கீழை நாட்டில் சுவாமி விவேகானந்தரும் இன்னும் சச்சிவோத்தம, சர் சீ. பி. இராமசாமி ஐயரவர்களும் சர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களும் பிறரும் உலகெங்கும் பரப்பினர்.

# 4. தருமசாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள்.

**தருமசாத்திரங்கள் (ஒழுக்க நூல்கள்)**

வேதநூற் கருத்துக்களை ஐயம் திரிபு இன்றி அறியும் இயல்பினர் அருகி விளங்குதல் கண்டு, வேதநூலில் காணப்படும் ஒழுக்கலாற்றினை ஒருங்கே திரட்டி மக்களுக்குத் தரப்பட்டுள்ள நூல்களே தரும சாஸ்திரங்களாயின. இவற்றை ஸ்மிருதி நூல் என்றும் கூறுவர். இவை வைதிகர்களுக்கேன்றே தொகுக்கப்பட்டனவாம். மநுஸ்மிருதி பராசரஸ்மிருதி, வசிஷ்டஸ்மிருதி, சங்கஸ்மிருதி, லிகிதஸ்மிருதி, அத்ரிஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி, ஹாரீதஸ்மிருதி, யமஸ்மிருதி, அங்கிரசஸ்மிருதி, உசன்ஸ்மிருதி; சம்வர்த்தஸ்மிருதி, பிரகஸ்பதிஸ்மிதி, காத்யாயனஸ்மிருதி, தட்சஸ்மிருதி, வியாசஸ்மிருதி, யாக்ஞவல்கியஸ்மிருதி, சாதாதபஸ்மிருதி, எனப் பதினெட்டு ஸ்மிருதிகள் உண்டு. பிரமன் முதல் தேவர் இறுதியாக உள்ளோர் பிறப்பும், மக்கட் பிறப்பும் கூறி, ஐம்பெரும் பூதங்களின் தோற்றமும், வருணம், ஆச்சிரமம், என்பவற்றின் பொதுத் தருமங்களும், சிறப்பு ஒழுக்கங்களும், பாவஞ்செய்வார் அடையுந் துன்பங்களும், அப்பாவங்களைப் போக்குதற்குரிய கழுவாய்களும், (பிராயத்சித்தங்களும்) அரசநீதியும் இவற்றில் விளக்கப்பட்டுள்ளன. மநுவின் விதிகள் கிருதயுகத்திற்கும், கௌதமரின் விதிகள் திரேதா யுகத்திற்கும், சங்கஸ்மிருதி, லிகிதஸ்மிருதி ஆகியவற்றின் விதிகள் துவாபரயுகத்திற்கும், பராசரரின் விதிகள் கலியுகத்திற்கும் பொருந்துமென மநுஸ்மிருதியிலேயே கூறப்பட்டுள்ளது. ஆனால் மநுஸ்மிருதி நிரம்பவும் விரிவானதாகவும் தெளிவானதாகவும் இருப்பதால், அது ஏனைய ஸ்மிருதிகளின் ஆசிரியர்களினாலும், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களினாலும் பெரிதும் மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. திருக்குறள் உரைகாரருள் ஒருவராகிய பரிமேலழகரும், "அறமாவது மநுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம்" என்று விதந்தோதியுள்ளார்.

**புராணங்கள்**

புராணம் என்பது தொன்றுதொட்டு அவ்வப்போது உலகத்தில் நிகழ்ந்த பற்பல பெருநிகழ்ச்சிகளைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவது. வேதங்களில் ஆங்காங்கே கூறப்படும் திரிபுரம் எரித்த

வரலாறு, தேவாசுரப்போர், மூவடியால் உலகளந்தமுறை முதலிய இன்னோரன்ன பலவற்றை எடுத்தியம்புவது. இராமாயணம் மாபாரதம் போன்றதன்று. அன்றியும் வேதத்திற்காணும் பெருவரலாற்றினை விளக்குங்கால், இடையிடையே பலகலையிலும் காணும் உண்மையினை ஆங்காங்கு மறைபொருள் விளக்கும் (Allegory) போன்று உருவகப்படுத்திக் கூறிச் செல்வது. புராணம் என்னும் சொல் அதர்வ சங்கிதையிலும் காணப்படுகின்றது. எல்லாம் வல்ல இறைவனையே புராணன் என்றழைப்பது பழைமை நோக்கியேயாகும். அதுவே போன்று தெய்வசம்பந்தங் காட்டும் பெருவரலாற்றினைக் கூறுவதாலேயே புராணம் எனப்பட்டது. சொல்லப்படும் புராணங்கள் யாவும் வாதராயணப் பெயர்பெற்ற வேதவியாசமாமுனிவரே, வேதத்திற் காணப்படும் வரலாற்றினைத் திரட்டித் துறைப்படுத்தி வடமொழியில் ஆக்கியோரராவர்.

## பதினெண் புராணங்கள்

பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிடியம். நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கிநேயம், பிரமகைவர்த்தம், இலிங்கம் வராகம், காந்தம், வாமநம், மச்சம், கூர்மம், காருடம், பிரமாண்டம், என்பனவே பதினெண் புராணங்கள் என்பர், அவற்றுள் சிவபுராணம் பத்து, விட்டுணு புராணம் நான்கு, பிரம புராணம் இரண்டு, அக்கிநி புராணம் ஒன்று, சூரியபுராணம் ஒன்று என்ப.

## சிவபுராணங்கள் (சைவபுராணம்)

சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமநம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்ற சிவபுராணங்கள் பத்தும் இரண்டு லட்சத்து அறுபத்தெண்ணாயிரம் வடசொற் கிரந்தங்கள் கொண்டவை என்ப.

## விட்டுணு புராணங்கள்

காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், எனப்படும் விட்டுணு புராணங்கள் நான்கும் ஐம்பத்தையாயிரம் கிரந்தங்கள் கொண்டனவென்ப.

### பிரம புராணங்கள்

பிரமம், பதுமம், எனப்படும் பிரமபுராணங்கள் இரண்டும் அறுபத்தையாயிரம் கிரந்தங்கள் கொண்டவை என்ப.

### ஆக்கிநேய புராணம் (அக்கினி)

ஆக்கிநேய புராணம் எண்ணாயிரங் கிரந்தமுடையது.

### பிரம கைவர்த்த புராணம் (சூரியன்)

பிரமகைவர்த்தபுராணம் பன்னீராயிரம் கிரந்தங்கள் கொண்டது என்ப.

சிவபுராணங்கள் சாத்விகம் படைத்தன என்றும், விட்டுணு புராணங்கள் தாமசம் படைத்தன என்றும், பிரம புராணங்கள் இராசதம் படைத்தன என்றும் முக்குண வேறுபாடு கற்பிக்கப்பட்டுள்ளது, ஆக்கிநேயமும் பிரமகைவர்த்தமும் முக்குணங்களும் கொண்டமைந்தன என்பர்.

சிவபுராணம் பத்தும் சாத்விகம்; ஆகவே சத்துவ குணம் வெண்ணிறமுடையதென்றும், சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடம் என்றும், சிவபெருமான் யோகிகளுக்கு ஞானம் போதிக்கும்போது தெளிபளிங்கு வடிவினராய்த் திகழ்வார் என்றும் பெரியோர் வெளியிட்டுள்ளனர். விட்டுணு புராணங்கள் நான்கும் தாமசகுணங்களாம்; தமோகுணமெனவும் கூறுவர். தமோகுணம் கரியநிறம் உடையதென்றும் உதாசீன ரூபமும் (ஒருசெயலினும் ஊன்றி நில்லாத் தன்மை) கூடக் கிருத்திய சமர்த்தமும் (தான் கரவாயிருந்து கொண்டே பிறரை மாறுபடச் செய்தல்) உடைமையும், சோம்பல் வஞ்சனை முதலியன கொண்டனவுமாம் என்பர். ஆதலால் விட்டுணு கருநிறமுடையவர், ஆதிசேடன் என்னும் பாம்பணையிற் கிடந்து அறிதுயிலமர்ந்து அன்பர்களைத் தன் மீது மோகம் கொள்ளும்படி செய்வர் என்பர்.

பிரமபுராணங்கள் இரண்டும் இராசத குணம் உடையன. இராசதகுணம் செந்நிறமாய்த் திகழ்வது, துக்கத்துக்கு இடமாகும் சஞ்சலரூபம் பொருந்தியது என்பர். பிரமா செந்நிற ரூபியாய்ச் சஞ்சலமே வடிவாயும் இருப்பர் என்பர்.

சிவபுராணம் பத்தினுள்ளும் கந்தபுராணத்தில் பேசப்படும் சநற்குமார சங்கிதை, சங்கரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கார சங்கிதை எனவரும் ஆறுசங்கிதைகளுள்ளும் சங்கர சங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள் முற்பட்ட சிவரகசிய கண்டத்திற் காணப்படும் வரலாற்றுண்மையினை மறைபொருள் விளக்கத்தோடும் கச்சியப்ப சிவாசாரியரால் தமிழாற் பாடப்பட்டு, முதலாறு காண்டங்களைக் கொண்டு விளங்கும் கந்த புராணம் ஒன்றே இன்று தமிழகம், ஈழம் முதலிய நாடுகளிலுள்ள சைவசித்தாந்த சமயத்தவர் பலராலும் பயிலப்பட்டும், கேட்கப் பட்டும், வருகின்றது. யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் அனைவரும் சிறுவர், சிறுமியர். வரையிலும் கந்தபுராணம் பயில்வதிலும் கேட்பதிலும் பரம்பரையாக மிக்கார்வம் உடையவராய்த் திகழ்கின்றனர் என்றால் மிகையாகாது. மேலும் சுருக்கமாகச் சொல்லுவதானால், உலகின் நெருக்கடியான கட்டங்களில் ஒழுக்கக் கட்டுப்பாட்டினையும், ஆன்மிக நிலையினையும் நிலைநிறுத்தும் பொருட்டுக் கடவுள் எடுக்கும் வெவ்வேறு உருவங்களையும், அவர் கையாளும் வெவ்வேறு வழிகளையும் புராணங்கள் விரித்துக் கூறுகின்றன. மோட்சத்தை அடையும் பொருட்டுச் செய்யப்படும் தவவழிகளையும், பத்தி முறைகளையும் புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

பெரும்பாலும் பல்வேறு தெய்வங்களின் பெருமைகளைப் பற்றிக் கூறும் பதினெட்டு உபபுராணங்களும் உண்டு.

நமது சமய நூல்களின் முக்கிய பகுதிகளுள் புராணங்களும் அடங்கும்.

## இதிகாசங்கள்

இதிகாசம் என்பது இராமாயணமும் பாரதமும் என்பர். இவை மக்கள் வரலாறு கூறுவதால் புராணம் எனப்படாதே இதிகாசம் எனப்பட்டன. குறித்த ஓர் இடத்தில் நிகழ்ந்த நிகழச்சி பற்றி எழுந்தன இதிகாசங்களாம். இன்றைய ஆராய்ச்சியாளர் சிலர், சோழர் மரபில் தோன்றிய சீராமனைப்பற்றி எழுந்தது இராமாயணம் என்பர். மாபாரதம் என்பது தமிழாரியர் வழித்தோன்றிய கௌரவ பாண்டவர் எனப்படும் தாயத்தார் இருவர் வரலாற்றினைக் கூறுவது என்பர்.

வெவ்வேறு ஆட்களுடன் பழகும்போது அவரவர் கருமத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முறையை எங்ஙனம் ஒழுங்குடன் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை இராமன் சீதை ஆகியோரின் கதையின் வாயிலாக இராமாயணம் போதிக்கிறது. சீதையின் மூலம் பெண்ணுக்குரிய தர்மத்தை மிகத் துலாம்பரமாகக் கூறுகிறது இராமாயணம். எவ்வாறு மகன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், எங்ஙனம் உடன் பிறப்புக்கள் ஒருவரை ஒருவர் அன்புடன் நேசிக்க வேண்டும், எவ்வாறு மனைவி கணவனுக்கு அடங்கி நடந்து கொள்ள வேண்டும், எங்ஙனம் வேலையாள் தலைவனுக்கு மதிப்புக்காட்ட வேண்டும், எங்ஙனம் நண்பர்கள் ஒருவருடன் ஒருவர் நட்புக் கொண்டு ஒருவருக்கொருவர் உதவியாக உழைத்தல் வேண்டும், மென்மை அன்பு என்னும் நல்லியல்புகள் கொண்ட பெண்களும் ஆண்களும் ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டும், முதலிய இன்னோரன்ன பிறவற்றையும் சீராமன் சீதை ஆகியோர்கள் மூலம் இராமாயணம் வற்புறுத்துகின்றது. பிறப்புக்காக மட்டுமே இல்லாது ஒழுக்க மேன்மைக்காகவே மக்களைப் போற்றல் வேண்டும் என்பதையும், பக்தியுடன் கூடிய பிராணிகளையும் மதித்து அவற்றிற்கும் தொண்டு செய்தல் வேண்டும் என்பதையும் இராமாயணம் வற்புறுத்துகின்றது. அனைத்துக்கும் மேலாக இராமாயணம் ஒரு சரணாகதி சாஸ்திரம் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பின் பொருட்டு உண்மையுடன் எம்மை நாடுவோரைக் கைவிடக் கூடாது என்னும் சைவசமயத்தின் அடிப்படைக்கொள்கையினையும் இராமாயணம் அறிவுறுத்துகின்றது. கடவுளின் கருணையை வேண்டி மக்கள் ஒரு தடவையாவது அவரைச் சிந்தை மொழி மெய்களினால் வணங்கினால் கூடக் கருணாமூர்த்தியாகிய கடவுள் அவர்களைக் காப்பாற்றி அருள் புரிவார் என்னும் உண்மையினையும் இராமாயணம் விளக்குகின்றது. சிவலிங்க வழிபாடு, சிவவழிபாடு ஆகியவற்றின் சிறப்பையும் துலக்குகின்றது இராமாயணம். உலகில் கெடுதல் மலிந்து நிறையும்போது நல்லவர்களைக் காப்பாற்றவும், தீயோரை ஒழிக்கவும் எம்பிரான் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றார் என்னும் கருத்தினையும் கூறிச் செல்வது இராமாயணம். தவறான வழியில் இருந்து நல்ல வழிக்குத் திருப்புவதே தண்டனையின் நோக்கமாதலால், தண்டனையும் ஓர் அருட்செயலேயாகும். இதனாலன்றோ "நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்லக் கொல்ல வல்லப் பொல்லா வினைபோக்க" என்ற உலக வழக்கும் எழுந்ததாகும்.

அருட்செயலாம் தண்டனை மற்றோர் இதிகாசமாகிய மகா பாரதத்தினுல் மேலும் சிறப்பாக விளக்கப்படுகிறது. உண்மையுட னிருத்தல், தெய்வநம்பிக்கை, மகளிர் கற்பு, இரந்து கேட்பவனிடம் கருணை, அவனுக்குக் கேட்டது கொடுத்தல், பொறுமை, தவம் முதலான இன்னோரன்ன பிறவற்றையும் ஏராளமாக மகாபாரதத்தில் காணலாம். இதனுலேயே அது ஒரு தர்ம சாஸ்திரம் என்றும், ஐந்தாவது வேதமென்றுங் கூடச் சொல்லப்படுகின்றது. அதில் கதையின் போக்கில் ஆங்காங்கே தருமத்தைப் போதிப் பதற்கென முழு அத்தியாயங்கள் எழுதப்பட்டுள்ளன. மோட்ச தருமம், விதுரநீதி, சனத்சுஜாதியம், அனுகீதை ஆகியவை அத்தகைய சிறந்த பகுதிகளாகும்.

ஆனுல் இவற்றுள் ஞாலம் முழுவதும் புகழ்பெற்றிருப்பதும், பதினெட்டு அத்தியாயங்களில் சுமார் எழுநூறு சுலோகங்களில் அமைந்திருப்பதும் பகவத்கீதையாகும். மகாபாரத இதிகாசத்தில் பகவத்கீதை ஓர் சிறு பகுதியேயாயினும் அதில் பொதிந்திருக்கும் மிக உயர்ந்த போதனைகள் காரணமாக அதற்கு ஒரு தனிப்பெருமை உண்டு. மாபெரும் பாரதப் போரின் ஆரம்பத்தில், தான் பின்பற்ற வேண்டிய வழிகுறித்து அருச்சுனனுக்கு ஐயம் எழுகிறது. அச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு அவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி அவனுக்கும், அவன் மூலமாக உலக மக்களுக்கும் உணர்த்தப்படுகின்றது. முதல் ஆறு அத்தியாயங் களில் கரும யோகமும் இரண்டாவது ஆறு அத்தியாயங்களில் ஞான யோகமும் கடைசி ஆறு அத்தியாயங்களில் பக்தி யோகமும் மிக விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளும் எங்கள் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் இந் நூலில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எத்தகைய நெருக்கடி யான நிலையிலும் எவரும் கடமையிலிருந்து வழுவக் கூடாது, எந்த வடிவத்திலாயினும் கடவுளை அகத்தூய்மையுடன் வழிபடுவோர் நிச்சயமாகக் காப்பாற்றப் படுவர் என்னும் உண்மையினையும் பகவத் கீதை எடுத்து விளக்கிச் செல்கின்றது. கடவுளின் அருளே மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து காப்பாற்ற வல்லது என்பது போன்ற பகவத் கீதையின் உபதேசங்கள் காரணமாக எல்லாச்சமயத்தினருக்கும் உரிய பொது நூலாக அது கருதப்படுவதோடு உலகம் முழு வதும் ஏற்றுக் கொள்ளும் பெருமையும் அதற்குக் கிடைத்திருக் கின்றது. எனினும் பகவத் கீதையை முற்ற முழுக்கச் சுத்தாத்து வித சைவசித்தாந்திகள் ஏற்றுக் கொள்வதில்லை. பகவத் கீதைக்குக் கணக்கற்ற உரைகளும் மொழிபெயர்ப்புக்களும் உண்டு.

# 5. ஆகமங்கள்

ஆகமங்கள் வேதம் போன்று பொதுநூலாய் அமையாது சிறப்பு நூலாய் அமைந்தவையாகும். வைதிக சமயங்களாகிய சைவம், சாக்தம், வைணவம், முதலியவற்றுக்கு வேதம் பொது நூல் என்பர். ஆகமங்களில் சிவவழிபாடு கூறுவதைச் சிவாகமம் (சைவாகமம்) என்றும், விட்டுணு வழிபாடு கூறுவதை வைணவாகமம் என்றும், சக்திவழிபாடு கூறுவதைச் சாக்த ஆகமம் என்றும் கூறுவர். சிறப்புச் சமய நூலாய் முறையே சைவம், வைணவம், சாக்தம், எனும் சமயத்தார்க்கு இவைகள் விளங்குகின்றன. ஆகமம் என்னுஞ் சொல்லை ஆ + க + ம எனப்பகுத்து ஆ என்பது ஞானத்தையும் க என்பது மோட்சத்தையும், ம என்பது மலநாசத்தையும் குறிப்பதா மென்பர். தந்திரம் எனவும் ஆகமத்தைக் கூறுவர்.

சிவாகமத்தின்மூலம் சிவனே பரம்பொருள் என்பதும் சாக்த ஆகமத்தின்மூலம் சக்தியே பரம்பொருள் என்பதும் வைணவஆகமத் தின்மூலம் விட்டுணுவே பரம்பொருள் என்பதும் முறையே உணர்த் தப்படுகின்றன.

### சிவாகமங்கள் (சைவ ஆகமங்கள்)

யாவும் வல்ல இறைவன் ஐந்து முகங்கொண்டு முனிவர் ஐவருக்குச் சிவபேதம் உருத்திரபேதம் என இருவகைப் படுத்திக் கூறியருளியவைகள் சிவாகமங்கள் என்பர். அவற்றுள் சிவபேதம் கூறுவன பத்து. உருத்திரபேதம் கூறுவன பதினெட்டாம். ஆகவே சைவாகமங்கள் இருபத்தெட்டு என்பர்.

அவையாவன:- காமிகமம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், என்னும் இவ்வைந்தும் கௌசிகன் என்னும் முனிவனுக்குச் சிவபெருமான் தமது ஐம்முகங்களிலொன்ருகிய சத்தியோஜாதம் முகத் தால் சொல்லியருளப்பட்டன. தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமாந், சுப்பிரபேதம் என்னும் இவ்வைந்தும் காசிபமுனிவனுக்கு வாமம் என்னும் முகத்தால் அருளப்பட்டவை.

மேற்கூறிய பத்தும் சிவபேதம் பற்றி விளக்குவன.

இனி விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம், வீரம் என்னும் ஐந்தும், பாரத்துவாசமுனிவனுக்கு அகோர முகத்தால் அருளப்பட்டன.

இரௌரம், மகுடம், விமலம், சந்திரஜானம், முகப்பிம்பம் என்னும் ஐந்தும் கௌசிகன் என்னும் முனிவனுக்குத் தற்புருட முகத்தால் அருளப்பட்டவை.

புரோற்கிதம், இலளிதம், சித்தம், சந்தாகம், சர்வோக்தம் பாரமேச்சுரம், கிரணம், வாதுளம் என்னும் எட்டும் அகத்திய முனிவனுக்கு ஈசான முகத்தால் அருளப்பட்டவை.

இப்பதினெட்டும் உருத்திர பேதம் பற்றி விளக்குபவையாம். இவை இருபத்தெட்டும் மூல ஆகமங்களாம்.

இவையேயன்றி இரு நூற்றெட்டு உபாகமங்களும் உண்டென்பர். திருமூலர் ஒன்பது ஆகமங்களைக் குறிக்கின்றார்.

"பெற்றநல் ஆகமம் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர் சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே". திருமந்திரம்.

இங்குச் சற்றே விளக்கம் வேண்டும். வேதம், அறம் பொருள், இன்பம் வீடுபற்றி அறியத் துணையாவது. ஆகமம், உணர்வு நூலாகும். அதாவது, அறிந்ததை அநுபவிக்கத் துணைசெய்வது. வடமொழி அறியாதவர்கள் தொல்காப்பியம், திருக்குறள், நால்வர் தமிழ் ஆகியவற்றை வேதமாகக் கொள்ளலாகும் என்பர். திருமந்திரம் மெய்கண்டார் வழிவந்த நூல்கள் முதலியவற்றை ஆகமமாகக் கொள்ளல் தகும். ஆகமம் பதி, பசு, பாசம் பற்றி அறிவிக்கும் நூல்கள் என்பர். அன்றி மலத்தை நாசம் பண்ணி ஞானத்தை உதிப்பித்து முத்தியைத் தரும் நூல்கள் எனவும் கூறுவர். மேலும் ஆன்மாக்களுக்கு வேண்டும் மெய்யுணர்வை நிறைய அளிப்பது என்றும் பொருள் உரைப்பர். எவ்வாறு கொள்ளினும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை உணர்த்தும் நூல்கள் ஆகமங்கள் என்பது தெளிவு. எக்காலத்தும் எந்த நாட்டிலும் பெரியோர்கள் விரும்புவது மெய்யுணர்

வுக் கல்வியாகிய முப்பொருளுண்மையேயாகும். இதனைத் தொல்காப்பியம் "வேண்டிய கல்வியாண்டும் மூன்று இறவாது" என உறைப்பாகக் கூறுகின்றது.

ஒவ்வோர் ஆகமத்திலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பிரிவுகள் உள்ளன. இந்த நான்கையும் நான்குபடிகள் அல்லது பாதங்கள் என்பர்.

சரியாபாதம் சமய ஆசாரங்களையும், பூசனைக்குரிய உபகரணங்களையும் பற்றியும், நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் கூறும்.

கிரியாபாதம் வருணுச்சிரமதருமங்களையும், தீட்சை வகைகளையும் நித்திய, நைமித்திக காமிய பூசைகளையும் திருவிழாக்கள் முதலியவற்றையும் பகரும்.

யோகபாதம், பிராணயாமம் முதலியவற்றின் இலக்கணங்களையும் ஆன்மசுத்தி அந்தர்யாகம் முதலியவற்றையும் விளக்கும்,

ஞானபாதம் பசு (உயிர்) பதி (இறை) பாசம் (தளை) என்னும் முப் பொருளுண்மை, அவற்றின் இலக்கணம் ஆகியவற்றைப் போதித்து அருள் வழிப்படுத்தும்.

மக்கள் யாவருக்கும் (எந்தச் சமயத்தவருக்கும்) இப்பிறப்பிலே சமயம் புகுதல் இரண்டாவது பிறப்பாகக் கருதப்படும் கடமையாதல் பற்றிச் சிவ (சைவ) சமயத்தவர் சிவதீட்சை பெற்றுக்கொள்வர். சிவதீட்சை பெற்றுக் கொண்டு வழுவாது ஒழுகிவருவோரே சிவாகமம் பயிலும் தகுதி உடையார் என்பர்.

தந்திரங்கள் எனப்படுபவை சமயத்தின் செய்ம்முறையினை விவரிக்கும் நூல்களாகும். அர்ச்சைவ வடிவங்களையும் (உருவங்களையும்) யந்திரங்களையும் வழிபடுவது, மந்திரங்களை உச்சரிப்பது, உபாசனைகள் புரிவது ஆகியவை மூலமாக மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி, வளர்த்து, கடவுளைக் உணர்ந்தறிவதற்கான வழிவகைகளைத் தந்திர நூல்கள் எடுத்துரைக்கின்றன.

ஆகமங்களைப் பின்பற்றியே சமயக் கொள்கைகள் நிலவுகின்றன. இவற்றைத் தொகுத்து முந்தையோர் அறுசமயம் என்பர். இவை தனித்தனி அறுவகைப் பட்ட புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் சமயங்களில் நிற்போரைக் குறிக்கும் என்பர்.

அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்
கறிவினி லருளால் மன்னி யம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம் - சித்தியார்

இவற்றின் விளக்கம் சித்தியாரில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**சாக்த ஆகமங்கள்**

சக்தியே முதற் பொருள் என்னும் கொள்கையே சாக்தசமயக் கோட்பாடாகும். இதனை அடிப்படையாகக் கொண்ட சமயத்தின் பெயர் சாக்தம் எனப்படும். இச்சமயச் சார்புடையோர் சாக்தர் ஆவார். ஈச்சுவர தத்துவத்தில் மணியும் அதன் ஒளியும் பிரிக்க வொண்ணுது அமைந்துள்ளது போன்று விளங்குவதால் அதனைச் சக்தியாகவும் உலகமாதாவாகவும் கருதி வழிபடும் சாக்த சமயம் வேதகாலம் தொடக்கம் வழக்கின்கண் உள்ளது. மொகஞ்சதாரோ என்னும் இடத்தில் புதைபொருள் ஆய்வாவாளர் அகழ்ந்து எடுத்த பெண்பாற் தெய்வ உருவங்களே சாக்த வழிபாடு பற்றி வேதத்திற் கூறியுள்ளவற்றிற்கொரு சான்ருகத் திகழ்கின்றன. சைவ சமயச் சிறப்பு நூல் போன்றே சாக்த ஆகமங்களும் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பிரிவுகள் கொண்டனவாம். இவற்றைத் தந்திரங்கள் எனவும் புகல்வர். இவற்றிற் காணும் தந்திர பேதங்கள் அறுபத்து நான்கு வகைப்படுவன என்பர். அவற்றுள் உருத்திராயமலம், தந்திரராஜம், பிரபஞ்சசாரம், வாமகேசசுரம், தந்திரா லோகம், ஸ்ரீ வித்தியார்ணவம், ஞாநார்ணவம், திரிபுர ரகசியம், மகாநிர்வாணம், யோகினிஹிருதயம், குலசூடாமணி, ஸ்ரீ நேத்திரம், சாரதா திலகம், சதுமசதி, காமகலா விலாசம் எனப் படுவன தந்திரம் என அழைக்கப்படலாயின. இவை சாக்த ஆகமங்கள் என்பர்.

சாக்த ஆகமங்கள் வாமை எனப்படும் சக்தி வழிபாடு கூறுவதால் இவ்வழிபாட்டு முறை வாமாச்சாரம் எனப்படும். இவை எந்திர பூசை, ஓமம், செபம், தர்ப்பணம், இவற்ருேடு உயிர்ப்பலியும் விதிக்கின்றன.

பொதுவாக இறைவன் தேவிக்கு உபதேசித்தவை ஆகமம் எனவும், தேவி இறைவனுக்கு உபதேசித்தவை நிகமம் எனவும் வழங்கப் பெறுதல் மரபு என்பர்.

## வைணவ ஆகமங்கள்

வைணவ ஆகமங்கள் விஷ்ணுவின் தத்துவமும் வழிபாட்டு முறையும் எடுத்து விளக்குவன. இவற்றை (தத்துவ வழிபாடு) விளக்கும் ஆகமங்கள் நூற்றெட்டு என்பர். இப்போது எவ்வாறே இராமாயண காவியம் பெருகியது போல வைணவ ஆகமங்களும் இரு நூற்றுக்கு மேலாகப் பெருகியுள்ளன. இவை சங்கிதைகளாகவும், தந்திரங்களாகவும், இருவகையாய் வகுக்கப்பட்டுள்ளன. இவ்விருவகையும் முறையே தொகையென்றும் முறையென்றும் கூறப் படும். சங்கிதைகளிலும், தந்திரங்களிலும் கூறப்படுவன யாவும் வேத நூற் கருத்துக்களேயாகும். ஆதலால் இவ்விரு கூற்றுண்மைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் பொருட்டு எழுந்ததே பாஞ்சராத் திரம் என்றழைக்கப்பட்டது. பாஞ்சராத்திரம் என்பது நாராயணனால் நாரதமுனிவனுக்கு ஐந்து இரவில் உபதேசிக்கப்பட்ட ஐந்து சங்கி தைகளாம். அவை முறையே அகிர்ப்புத்திநியம், ஈச்சுவரம், பௌட் கரம், பரமம், பாத்மம் என்பனவாம். இவை ஏனைய சைவ ஆகமங்கள் போன்று ஆலய வழிபாட்டுமுறை போதிப்பனவாம். பஞ்சசம்ஸ் காரம் என்பது தாபம், புண்டரம், நாமம், மந்திரம், யோகம் ஆகிய கடமைகளையும், தந்திரம், மந்திரம், ஆகமம், தேகமம், ஆத்மம் எனப்படும் பஞ்சகலைகளையும் எடுத்துரைப்பனவாம். இறைவன் பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சரூபங்களில் தன்னை வெளிப் படுத்தி அருளுவான் என்பதே பாஞ்சராத்திரத்தின் முடிந்த முடிபு.

# 6. நால்வகைப் புருஷார்த்தங்களும் வருணுசிரமதர்மமும்

பொதுவாக உலகிலுள்ள எல்லாச்சமயங்களும் அவற்றின் தத்துவங்களும் மோட்சத்தையே அல்லது வீடுபேற்றையே தத்தமது அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டுள்ளன. இக்கொள்கைக்குச் சுத்தாத்துவித சைவசித்தாந்தமும் விதிவிலக்கல்ல. எனினும் அது அதற்கு முரண்படாத, வீடுபேற்றை விளைவிக்கத்தக்க வேறு மூன்று பேறுகளையும் மிக விளக்கமாகக் குறிப்பிடுகின்றது அவை அறம் (தர்மம்) பொருள் (அர்த்தம்) இன்பம் (காமம்) என்பனவாம், இவை மூன்றும் வெறுமனே இலட்சியங்களாக மட்டுமன்றி ஈற்றில் வீடுபேற்றை அடைவதற்கான சாதனங்களாகவும் அமைந்துள் ளன.

வீடுபேற்றை அடைவதற்கான நடைமுறை வழிவகையே அறம் அல்லது தர்மம் எனப்படும், அறத்தைக் கடைப் பிடிக்கும் ஒழுக்கத்தை உடையவன் வீடு பேற்றை அடையும் குறிக்கோள் உடையவனுவான். உலகில் இன்பங்கள் அழியுந் தன்மை உள்ளவை. நித்தியமான இன்பம் வீடுபேருகும். வேள்விகளினுலும் தவத்தினுலும் கூட ஒருவன் பெறும் இன்பங்கள் நித்தியமானவையல்ல. எனவே நித்திய இன்பத்தை ஒருவன் அடைய வேண்டுமென்ருல் அவன் தனது புலன்களைக் கட்டுப்படுத்தித் தன்னை உணர்ந்தறிய வேண்டும். அறத்தைப் பின்பற்றுவதால் இது சாத்தியமாகிறது. அறத்தைக் கடைப் பிடிக்கும்போது ஒருவன் வேறு நோக்கங்களின்றி அறத்திற்காகவே கடைப்பிடித்து ஒழுகிவரல் வேண்டும். அதாவது அறத்தை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் வகையில் அதைக் கடைப்பிடித்தல் வேண்டும். அப்போதுதான் அது நமக்கு நன்மை உதவும். அறமென்பது ஒழுக்க விதிகளை மட்டுமன்றி, பண்புக் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. முந்தியதைவிடப் பிந்தியதே முக்கியமானது சிறந்த பயனைத் தருவது. பண்புக்கொள்கைகள் இல்லாவிட்டால் ஒழுக்க விதிகளினுல் எதுவிதமான பயனுமில்லை.

அறம் அல்லது தருமம் என்பது வாழ்க்கையின் சமய சமூக அரசியல் மற்றும் சுகாதாரக் கூறுபாடுகள் அனைத்திலும் ஒரு மனிதனின் ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

தமிழ் வேதமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலிய தமிழ்ச் சான்றோர்களாலும், மற்றையோராலும் அன்றும், இன்றும், போற்றப் பட்டு வரும் திருவள்ளுவப் பெருந்தகை தந்துள்ள திருக்குறளுக்கு மிகமிகச் சிறந்த உரை தந்துள்ள பரிமேலழகர் அறம் பற்றித் திருக் குறள் உரைச்சிறப்புப் பாயிரத்தில் கூறியவற்றை இங்குச் சற்றே நினைவு கூர்வாம்:-

"இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமிலின்பத் தழிவில் வீடும், நெறியறிந்து எய்துதற்குரிய மார்ந்தர்க்கு உறுதி யென உயர்ந்தோராெனடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் அறம், பொருள், இன்பம், வீடென்பவற்றை வடநூலார் முறையே தருமம், அருத்தம் காமம் மோக்ஷமென்பர். வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப் படுவன ஏனைய மூன்றுமேயாம்."

"அவற்றுள் அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப்படும்."

"அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று (நிலை = ஆசிரமம்) அவ்வவற்றிற்கோதிய அறங்களில் வழுவாதொழுகுதல். (ஒழுக்கம், வழக்கு, தண்டம் மென்பவற்றை வடநூலார் முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பர்)

"வழக்கமாவது, ஒரு பொருளைத் தனித்தனியே எனதென தென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேற்சொல்வது. அது கடன் கோடன் முதற் பதினெட்டுப் பதத்த தாம். (அவற்றை விவகாரபதம் பதினெட்டென்பர்) அப்பதினெட் டாவன:- கடன் கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல் காமை, ஒப்பிப் பணி செய்யாமை, கூலிகொடாமை, உடையனல்

லான் விற்றல், விற்றுக் கொடாமை, கொண்டுள்ள மொப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு, மாதராடவர் தருமம், தாய பாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக் கொடுமை, சூது' ஒழிபு எனவிவை)

"தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்ப நாடி அதற் குத்தகு வொறுத்தல்"

"இவற்றுள் வழக்குந் தண்டமும் உலக நெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம் போல மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானுந், தேயவியற்கையானும், அறியப்படுதலானும், அவற்றை யொழித்து, ஈண்டு தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப் புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது."

**தர்மம்** (அறம்): சரம் அசரம் ஆகிய முழுவதையும் ஆட்டிப் படைக்கும் (ஆளும்) அழிவில்லாத சட்ட நியதியே தர்மமெனப் படும்.

**அர்த்தம்** (பொருள்) : தர்மப்பிசகு இல்லாமல் ஈட்டப்படும் பொருளே அர்த்தமாம்.' தீவினைவிட்டீட்டல் பொருள்' ஒளவையார். ஒருவனுடைய சுய இச்சைகளை மாத்திரம் பூர்த்தி செய்வதற்காக மட்டும் பொருளை ஈட்டலாகாது. இதுவே இந்துமத தர்மசாஸ்திர விதி. சாகியம் முழுவதின் நன்மைக்காக அறநெறி நின்று பொருள் ஈட்டப்படல் வேண்டும், இந்து சமயம் ஆன்மிகப் பொதுவுடைமை யிலேயே அமைந்திருக்கிறது. ஒவ்வொருவரும் தத்தமது நன்மைக் காக மாத்திரம் வாழாமல் தம் சாகியத்தின் கூட்டுநன்மைக்காகவும் வாழுதல் வேண்டும். ஒவ்வொரு கிருகஸ்தனும் தினமும் பஞ்சயக்ஞங் களையும் தவறுது செய்து வருதல் வேண்டும் என்னும் வேத ஆக்ஞையே இம்மகத்தான உண்மையை நிதர்சனமாக விளக்குகிறது.

பஞ்சயக்ஞங்களாவன:-

1. பிரமயக்ஞம்: வேதாத்தியயனமும் பிரம்மத்தியானமும்
2. தேவயக்ஞம்: தேவஆராதனை
3. பிதிர்யக்ஞம்: இறந்த முன்னோருக்குச் செய்யும் சிராத் தம் ஆகிய பிரார்த்தனை.

4. பூதயக்ஞம்:- மனிதரல்லாதோருக்குக் கொடுக்கும் நிவேதனம்

5. மனுஷயக்ஞம்:- விருந்தினரை உபசரித்தல் அல்லது அதிதி பூசை.

இவ்வைந்து யக்ஞங்களையும் தவறாது செய்து வருபவனது மனதில் சகல சீவராசிகளையும் நேசிக்கும் ஒரு தோழமை உணர்வும் ஒருமைப்பாடும் ஏற்பட்டு வாழ்க்கையின் கண்ணோட்டத்தை விசாலமடையச் செய்யும்.

**காமம் (இன்பம்)** 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்,' இது சிற்றின்பம். பேரின்பந்தரும் காமமென்பது அறத்தாறு நின்று இன்பந் துய்தலாம். சகல சுகாநுபவங்களும் புலன்நுகர்ச்சிகளும் கட்டுப்படுத்தப் பட்டு மனிதனுக்கு மனச் சாந்தியும் திருப்தியும் உண்டாகும்படி மனவெழுச்சிகளனைத்தும் புடமிட்டுச் சுத்திகரிக்கப்படல் வேண்டும். பாரமார்த்திக (ஆத்மிக) சம்பூரணமே வாழக்கையின் நோக்கமாகும். ஒவ்வொருவரினது செயல்கள் யாவும் இறுதியில் முத்திப் பேற்றை அடையத் தக்கதாக அமைதல் வேண்டும்.

**மோட்சம்** (முத்திப்பேறு) :முத்தியென்பது ஆன்மா தான் பந்தப் பட்டு நிற்கும் பிறவியினின்றும் விடுதலை பெற்று இறைவனோடு அத்துவிதப்படுதலாம். பரனை நினைத்து தர்ம அர்த்த காமத்தை விட்டதே பேரின்ப வீடு எனவும் கூறுவர். அத்துவிதப் படுதல் பற்றிப் பல்வேறு கருத்துக்களுள் இரண்டு முக்கியமானவை. அவை பற்றி ஆராயப் புகுமுன் வருணாசிரம தர்மம் பற்றிச் சிறிது நோக்குவோம்.

## வருணாசிரமதர்மம்

மேற்குறித்த புருஷார்த்தங்களைக் கடைப்பிடிப்பதற்குச் சமூக வாழ்க்கையில் ஓர் ஒழுங்கு முறைமையும், அதன் அடிப்படையிலே வாழ்க்கையைப் படிநிலைகளில் அமைத்துக் கொண்டு ஒழுகும் வகையும் இன்றியமையாதனவாகும். முன்னர் நாம் எடுத்துக் காட்டிய தர்ம சாத்திர நூல்கள், சிறப்பாக மநுதர்ம சாத்திரம் (மநுஸ்மிருதி) இவ்வொழுங்கையும் படிமுறையையும் ஒன்றிணைத்து 'வருணாசிரம தர்மம்' என்று விரித்துப் பேசுகின்றது.

வர்ணம் என்ற வடசொல்லுக்கு நேர்பொருள் நிறம் என்பதாகும். ஆதியில் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவினுள் வந்து கங்கைச் சமவெளியிற் குடியேறிய ஆரியர், தாம் சிவந்த நிறம் உடையோராய் இருந்தமையால் தம்மிலும் வேறுபட்ட கருநிறச் சுதேசிகளை வேறுபடுத்திப் பிரிக்க வர்ணப் பிரிவினையைக் கடைப்பிடித்தனர் என ஆய்வாளர் உரைப்பர். இந்நிறபேதப் பாகுபாடு காலகதியில் நால்வகை வருணங்களாக, சாதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வருணத்தினர்க்கும் அவ்வவர்க்குரிய கடமைகளும் வகுக்கப் பட்டன. இவை வருணதர்மம் ஆயின.

இருக்கு வேதத்தில், புருஷ சூத்திரத்தில் விராட் புருடனின் முகத்திலிருந்து பிராமணனும், தோள்களிலிருந்து க்ஷத்திரியனும், தொடைகளிலிருந்து வைசியனும், கால்களிலிருந்து சூத்திரனும் தோன்றினர், என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் வேதகாலத் தொடக்கத்திலே தொழில் அடிப்படையிலே சாதிப் பாகுபாடு விதிக்கப்பட்டிருக்கவில்லை என்றே தெரிகின்றது. இருக்குவேத பாசுரம் ஒன்றில் "நான் ஒரு புலவன், என் தந்தை வைத்தியர், என் தாய் கூலம் அரைப்பவள். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலினைப் பூண்டோம்'' என்று கூறப்பட்டிருப்பதாக, வியத்தகு இந்தியா என்னும் நூலில் ஏ. எல். பசாம் கூறுவது கவனிக்கற்பாலது.

மநுஸ்மிருதியிலே ஒவ்வொரு வருணத்தினருக்குமான தருமங்கள் இவை இவையென வகுக்கப்பட்டுள்ளன. ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன பிராமணனுக்குரிய தருமங்கள். மக்களைக் காத்தல், நீதி வழங்கல், இறைகொள்ளல், பகைத்திறம் ஒட்டல், தருமசாத்திரநெறி முறையை மக்கள் கடைப்பிடிக்க அவர்களை நெறிப்படுத்தல் முதலாயின க்ஷத்திரியனுக்குரிய தருமங்கள். பொருள் ஈட்டல், ஈட்டியதைத் தருமவழிச் செலுத்தல், தொகுத்தல் விவசாயம், ஆநிரைக் காப்பு முதலியன வைசியனுக்கான தருமங்கள். இவர்களுக்கு ஊழியம் செய்தலே சூத்திரனுக்கு விதிக்கப்பட்ட தருமங்கள்.

ஆரியர் தந்தைவழிச் சமூகத்தினர் (Patriachal Society). ஆண் மகனே குடும்பத் தலைமை பெற்றான். எனவே வருணக்காப்பானது, ஆணின் தலைமைப்பாட்டிலேயே தங்கியிருந்தது. பிராமணன் ஒருவன் தனது வருணத்தில் மட்டுமன்றித் தனக்குக் கீழ் உள்ள வருணப் பெண்களையும் (க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பெண்ணையும்) மணக்கலாம். இம் மண உறவினால் பிறக்கும் மகன் தந்தையின்

வருண தருமத்திற்கு உரியவனுகவே கொள்ளப்பட்டான். இவனே அநுலோமன் என அழைப்பர். இதுபோன்றே க்ஷத்திரியன் தனது வருணத்திலும் வைசிய சூத்திர வருணத்திலும் பெண் கொள்ளலாம். வைசியனும் தன் வருணத்தோடு சூத்திர வருணத்திலும் பெண் கொள்ளலாம். இம் மண உறவுகளால் பிறப்போர் தந்தைமாரின் வருணத்தவராகவே - அநுலோமராகவே - கொள்ளப்பட்டனர். ஆனல் உயர் வருணப் பெண் தன்னிலும் தாழ்ந்த வருண ஆணை மணந்தால் பிறக்கும் பிள்ளை சண்டாளனுகச் சாதியிலிருந்து தள்ளப் பட்டான். இவனைப் பிரதிலோமன் என அழைத்தனர். இவ்வாறு காலப்போக்கில் நான்கு வருணங்களும் பல உபவருணங்களாகக் கிளை விட்டுப் பிற்காலத்தில் சாதி வேறுபாடுகள் பல்கிப் பெருகக் காரண மாயின. இன்று இப்பிரிவினைகள் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உண்டாக இடமளிப்பதால் வருணதருமம் தனது பழைமையான மேன்மையும் பெருமையும் இழந்து விட்டதெனலாம்.

வள்ளுவர்செய் திருக்குறளை மனுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மறுவாதி ஒருகுலத்துக் கொருநீதி

—மனேன்மணீயம்

ஆசிரமம் என்பது வாழ்க்கை நிலையாகும். முன் குறித்த புருஷார்த்தங்களுள் இறுதியும் உச்சமுமான வீடுபேற்றினை அடைய ஒவ்வொருவனும் தனது வாழ்க்கையை நான்கு படிநிலைகளாக வகுத்துக் கொள்ளல் வேண்டும் என்று ஸ்மிருதி விதிக்கின்றது. இந்நான்கினுள் முதற்படி நிலை பிரமசரியம். திருமணத்திற்கு முன் புலக்கட்டுப் பாட்டுடன் பிரமத்தை அடைவதற்கான ஞானத்தினை அடைவதற்கு அடிப்படையான கல்வியைக் கற்கும் காலமே பிரமசரிய காலமாகும். குருவை அடுத்து எளிமையும் ஒழுக்கமும் கீழ்ப்படிவும் பூண்டு கற்க வேண்டியவற்றைக் கற்பவனே உண்மைப் பிரமசாரி என்று கொள்ளப் பட்டான். பிரமசரிய ஒழுக்கத்தினை நன்கு கடைப்பிடித்த பின் தனது தருமத்திற்குத் துணையாக வாழ்க்கைத் துணைவி ஒருத்தியை அடைந்து நடத்தும் ஆசிரமம் கிருகஸ்தம் எனப்படும். இதனைத் தமிழில் இல்லறம் என்பர். இல்வாழ்க்கையை அறத்தின்வழி நடத்தித் தன் தருமத்தைத் தொடர்ந்து நடத்தும் புதல்வனைப் பெற்ற பின்னர், அப் புதல்வனும் இல்லறத்தில் அமர்ந்து பிள்ளைப் பேறடைந்ததும் கிருகஸ்தனவன் தன் மனைவியோடு வனம் சென்று மனைவி பணிவிடை செய்யச் செபம், தவம், தியானம் புரிதலே வானப்பிரஸ்தம் ஆகும். மனையாள் இறந்தபின்னர் அல்லது இருவரும் ஒத்த மனத்தோடு துறவு மேற்கொள்வது சந்நியாசமாகும். இவ்வாறு வாழ்க்கையைப் படிப்படியாக உயர்த்திச் சென்று வீடுபேற்றை அடைதற்கான வழியில் நடத்தலே ஆசிரம தருமமாகும். கிருகஸ்தமாகிய இல்லறம் பற்றியும் சந்நியாசமாகிய துறவு பற்றியும் திருவள்ளுவரது திருக் குறளிலும் பரிமேலழகரது உரையிலும் விரிவாகக் காணலாம்.

# 7. சைவ சித்தாந்த தத்துவ விளக்கம்

## முகவுரை

தென் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள தமிழர்களால் பின்பற்றப்படும் அதிமுக்கியத்துவ தரிசனம் சைவசித்தாந்தமேயாம். சைவம் வேதகாலத்திற்கு முந்திய சமயமாயினும் இன்று நடைமுறையிலிருக்கும் சைவ சித்தாந்தம் கி. பி பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவரது உபதேசங்களைப் பின்பற்றியதாகும். இச்சாரார் மெய்கண்ட நாயனரது சிவஞான போதத்தையும் அதை முதனூலாக வைத்து அவரது சீடராகிய அருணந்தி சிவாசாரியாரால் விபரமாக விளக்கி எழுதிய சித்தியாரையும் முதனூலாகக் கொள்வர். சைவ சித்தாந்திகள் தம் கோட்பாடுகள் அனைத்திற்கும் ஆகமம் இருபத்தெட்டையும் மேற்கோளாகக் கொள்வர். அவர்கள் நான்கு வேதங்களையும் இருபத்தெட்டு ஆகமங்களையும் பன்னிரண்டு திருமுறைகளையும் பதினன்கு மெய்கண்ட சாத்திரங்களையும் பிரமாண நூல்களாகக் கொள்வர்.

## பதியிலக்கணம்:

**சொரூபலக்கணம்** : வேதம், ஆகமம், அவற்றின் வழிநூல், சார்பு நூல் ஆகிய எல்லாவற்றினும் உள்ள கருத்து, பதி, பசு,பாசம் என்னும் முப்பொருளின் இயல்பைத் தெரிவித்தலாம். அவற்றுள் பதியாவது ஏனை இரண்டுக்கும் மேலாயிருப்பதொன்றும். அந்தப் பதி தான் அருவமும் உருவமும் அற்றதாய், குணமுங் குறியும் இல்லாததாய், மலத்திற் பொருந்தாததாய், ஒன்றுய், அழிவில்லாததாய், அளவில்லாதனவாகிய உயிர்களது அறிவுக்கு அறிவாய், சலனமற்றதாய், கண்டிக்கப்படாததாய் ஆனந்தமே சொரூபமாய் மாறுபட்ட உணர்விறுற் சென்றடைய அரிதாய், வழிபட்டவர்கள் சென்றடையும் முத்திநிலையாய், அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய் விளங்குவதாம். அதனை அறிவாற்றெளிந்தோர் சிவம் என்பர்.

**தடத்தலக்கணம்:** நிலைபெற்ற மேலான சிவசத்தி தனது வியாபகத்தால் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் சத்திகளைத் தர அந்தச் சத்திகளை நின்மலனாகிய சிவன் பொருந்தி மதித்தற்கரிய திருவருளே திருமேனியாகக் கொண்டு நாதம், விந்து முதலிய தத்துவங்கள் வந்து கூடுகின்ற பிரகாசம் மிகுந்த சுத்தமாயையைப் பொருந்தி வேதம் ஆகமம் முதலிய பலகலைகளையும் அருளிச்செய்து, அசுத்தமாயை பிரகிருதிமாயைகளில் கொடிய வினைகளைக் கொண்டிருக்கின்ற தநு கரண புவன போகங்களைப் பெருமைபெற அதிட்டானவாயிலாகப் படைத்து நிறுத்தி அவற்றைத்தோன்றிய முறையிலே ஒடுங்கச்செய்வன், அவற்றை ஆக்கி ஒடுக்குந் திருமேனி மேலாய் விளங்கிய நிஷ்களம், நிஷ்கள சகளம், சகளம் (அருவம் அருவுருவம் உருவம்) என்னும் தன்மையனவாம்.

**குறிப்பு :-** உயிர்களுக்கு அநுக்கிரகம் மாத்திரம் குறித்துப் பொதுவகையால் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே சிவசத்தியின் சொருபமாம். அதுவே பராசத்தி எனப்படும். அப் பராசத்தி உயிர்களுக்கு மலபாகம் வருதற்பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையால் வியாபரிக்குங்கால் இச்சா ஞானக்கிரியை என முத்திறப்படும். இச்சத்திகளைச் சிவன் பொருந்திய பொழுது சத்தி காரியமான அருட்டிருமேனி உண்டாம். அஃதாவது சிவன் அச்சத்திகளுள் ஞானசத்தியைப் பொருந்திய பொழுது நிஷ்களத் திருமேனி உண்டாகும். அந்நிலையில் அவன் சிவம் என்றும் சத்தர் என்றும் இலய சிவன் என்றும் பெயர் பெறுவன். சிவன் ஞான சத்தியையும் கிரியாசத்தியையும் சமமாய்ப் பொருந்தும் பொழுது நிஷ்கள சகளத் திருமேனி உண்டாம். அம்மூர்த்தி சதாசிவன், உத்தியுத்தன், போகசிவன் என்றும் நிஷ்கள சகள சிவன் என்றும் பெயர் பெறுவான். ஞான சத்தி குறைந்தும் கிரியாசத்தி ஏறியும் இருக்கும் அவதரம் சகளத் திருமேனியாம். அம்மூர்த்தி மகேசுவரன், பிரவிருத்தன் அதிகாரசிவன் சகளசிவன் என்றும் பெயர் பெறுவன்.

சிவம், சதாசிவம் மகேசுவரம் ஆகிய இவை மூன்றுக்கும் தம்முட் பேதமில்லை. சத்திகளின் தொழில் வேறுபாட்டால் இப்பேதங்கள் உண்டென்று உபசாரமாகச் சொல்லப்படும்.

சதாசிவமூர்த்தி தமது ஐந்து திருமுகங்களுள் தற்புருடம், அகோரம், வாமதேவம் சத்தியோசாதம் என்னும் நான்கு திருமுகங்களிலிருந்தும்இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் ஈசான முகத்திலிருந்து காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளிச் செய்தான். அவற்றினின்றும் புராண சாஸ்திரங்கள் தோன்றின. இவை சொற் பிரஞ்சமுமாம். (மந்திரம், பதம், வன்னம்)

சுத்தமாயையை ஞானசத்தி பொருந்துதலால் நாதமும், கிரியாசத்தி பொருந்துதலால் விந்துவும், ஞானமும் விந்துவும் சமமாகப் பொருந்துதலால் சாதாக்கிய தத்துவமும், கிரியை ஏறி ஞானம் குறைந்து பொருந்துதலால் ஈசுவர தத்துவமும், ஞானம் ஏறிக் கிரியை குறைந்து பொருந்துதலால் சுத்த வித்தையுந் தோன்றும். இவை பொருட் பிரபஞ்சமாம். (தத்துவம், புவனம், கலை)

இத் தத்துவங்களுள் அதிகாரத்தானமாகிய ஈசுவரதத்துவத்தைப் பொருந்தி நிற்கும் மகேசுவரன் அநந்தேசுரரை அதிட்டித்து அவர் வாயிலாக அசுத்தமாயையிற் படுந் தநு கரண,புவன, போகங்களை உயிர்களது வினைக்கீடாகத் தோற்றுவித்து நிறுத்துவன். அநந்தர் சீகண்டரை அதிட்டித்துப் பிரகிருதி மாயையிற் படுந் தநு, கரண, புவன போகங்களைப் படைத்து நிறுத்துவர்.

சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சம் என்னும் இரண்டினையும் ஒடுக்கும் திருமேனி நிஷ்களம் என்றும் தோற்றும் திருமேனி நிஷ்கள சகளமென்றும் சகளமென்றும் சொல்லப்படும். இவை மூன்றும் இறைவனது தடத்த வடிவமாம். (தடத்தம் அயலிடத்திருப்பது)

**பொழிப்பு** :- தன்னிடத்து அநாதியே அபின்னமாய் விளங்கும் பராசத்தி இச்சா ஞானக் கிரியைகளாக வியாபாரிக்க அவைகளை நின் மலனுகிய சிவன் பொருந்தித் திருவருளே திருமேனியாகக் கொண்டு நாதம் விந்து முதலிய தத்துவங்கள் தோன்றுகின்ற சுத்தமாயையைப் பொருந்தி வேதம், ஆகமம் முதலிய பல கலைகளை அருளிச்செய்து, அநந்த தேவரை அதிட்டித்து அசுத்தமாயையிற் படுந் தநு, கரண, புவன போகங்களையும் சீகண்டரை அதிட்டித்துப் பிரகிருதி மாயையிற் படுந் தநு, கரண, புவன போகங்களையும் படைத்து நிறுத்தி ஒடுக்குவன். இச் செயல்களைச் செய்யுந் திருமேனிகள் அருவம், அருவுருவம், உருவம் என முத்திறப்படும்.

பரமசிவன் சுட்டியறியப்படும் பொருள்களுக்கெல்லாம் அப்பாற்பட்டிருக்கும் இயல்புடையவனுய்த் தோற்றம் நிலை இறுதிகளும் இல்லாத சத்துப் பொருளாய் உள்ளவன்; ஞானசொரூபி; தன்னியல்பு பிறரால், அறிதற்கரிய அதி சூக்கும சித்தாயிருப்பவன்; விருப்பு வெறுப்புக்களில்லாத ஆனந்த சொரூபி; ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாயுள்ளவன். இங்ஙனம், அசத்தும் தூல சித்துமாகிய பசுபாசங்களினின்றும் வேறுபட்ட இயல்புடைய சச்சிதானந்த சொரூபியாய் நிற்றலின் ஐந்தொழிலுஞ் செய்யுமிடத்துத் தான் நினைத்ததொரு வடிவத்தைத் தானே நிறுத்திக்கொள்வன்.

**பதியுண்மைக்குப் பிரமாணம்:-**

உலகங்களெல்லாம் ஆண் பெண் அலியென்னும் அவயவப்பகுப்புடையனவாய்த் தோன்றி, நின்று, ஒருகாலவெல்லையில் "ஒடுங்குந் தன்மையுடையன. ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறு நில்லாது மீளவும் உதிக்கும். பின் உதிப்பது ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவமலம் நீக்கும் பொருட்டாம். ஆன்மாக்கள்எடுக்குந் தேகங்கள் நல்வினை தீவினைகளுக்கேற்றபடி மாறிமாறித் தோன்றுவதும் அழிவதும் சுவர்க்க நரகங்களிற் செல்வதுமாயிருத்தலானும், அத்தேகங்களை மாயை தருமெனில் மாயை செயலற்ற சடமாயிருத்தலானும் ஆன்மாக்களே அத்தேகங்களை எடுக்குமென்னில் தேகங்களெடுக்குமுன் உள்ள கேவல நிலையில் அவ்வான்மாக்களுக்கு அறிவின்மையானும், தேகம் ஒரு சேதனனுடைய தொழிலை வேண்டி நிற்றலானும், நின்மலனாகிய சிவனே அநாதி முத்த சித்துருவாய் நிலைபெற்று நின்று தநுகரண புவனபோக வடிவாயுள்ள உலகங்களெல்லாவற்றையும் தோற்றுவிப்பன் என்க

**படைத்தல் முதலாய ஐந்தொழில்கள்**

பௌராணிகரும் பாஞ்சராத்திரிகளும் சிருட்டித்தொழில் பிரமாவுக்கும் திதித்தொழில் விட்டுணுவுக்கும் சங்காரத்தொழில் உருத்திரனுக்குமுரியன என்பர். பிரமாவும் விட்டுணுவும் விசேட புண்ணியத்தாற் சிவனுடைய உயர்ந்த அதிகார சத்தியை அச்சிவனுடைய அருளாற் பெற்றுடையர்.அத் தொழில்கட்கு அவ்விருவரும் சுதந்தரரல்லர். முத்தொழிலுஞ் செய்வதற்குரிய சுதந்தரம் சிவனுக்கே உரியது; ஆயின் அவன் முத்தொழிலுஞ் செய்வது பற்றி விகாரங்கள் பொருந்தான்.ஆகாயத்தில் விளங்கும் ஆதித்தன் சந்நிதியிலே தாமரை ஒன்று அலரும்; ஒன்று அலர்வதற்குப் பக்குவமான அரும்பாயிருக்கும்; ஒன்று வாடி உலரும் இப்படி ஆதித்தன் சந்நிதியில் தாமரை முத்தொழிலும் படினும் ஆதித்தன் விகாரமடையாத முறைமை போலப் பிரபஞ்ச மெல்லாம் சிவசந்நிதானத்தில் சிவன் நிர்விகாரியாயிருக்க முத்தொழிலும்படும்.

இங்கே சொல்லிய முத்தொழில்கள் பிரகிருதி மாயையின் கண் மத்திம சிருட்டியிலே நிகழ்வனவாம். இதன் மேல் அசுத்தமாயையில் நிகழ்வது மகா அவாந்தர சிருட்டி. சுத்த மாயையில் நிகழ்வது மகா சிருட்டி. பதியினால் நேரே செய்யப்படுவது மகா சிருட்டி. சுத்த

மாயையில் நிகழும் ஐந்தொழிலையும் பதி தாமே செய்தருளுவர். அசுத்த மாயையிற் படுங்கிருத்தியம் ஐந்தையும் தனது கிரியா சத்தியால் அநந்த தேவரை அதிட்டித்து அவர் வாயிலாகச் செய்வர் பிரதிருதி மாயையிற்படும் முத்தொழிலையும் அவ்வநந்ததேவர் வாயிலாகச் சீகண்ட உருத்திரரை அதிட்டித்து நின்று செய்வர். இந்த உருத்திரரிடத்து செநறி, ரோதயித்திரி, ஆரிணி என்னும் சிவசக்திகள் பதிந்து நின்று முத்தொழிலையும் செய்யும். அச்சத்திகளுள் செநறி பிரமனிடத்து நின்று செலுத்தும், ரோதயித்திரி விட்டுணுவினிடத்து நின்று செலுத்தும். இவை நேராகவும் அதிட்டானவாயிலாகவும் நடத்தலால் எத்தொழில்களும் சிவசக்தியின் தொழில்களேயாம். செநறி உற்பத்திக்குக் காரணமாய் சிருட்டி அதன் தொழில். ரோதயித்திரி போகங்களில் நியதி செய்வது. திதியும் திரோதானமும் அதன் தொழில். ஆரணி பரமசிவத்தின் சங்கார சாமர்த்தியத்தையுடையது. சங்காரமும் அநுக்கிரகமும் அதன் தொழில்.

**சிவன் ஐந்தொழிலுஞ் செய்வதற்கு காரணம் :**

ஐந்தொழிலையும் பரமசிவனது திருவிளையாட்டென்று சொல்லுவர், அன்றி ஆன்மாக்களைத் துன்பகரமான செனன மரண சாகரத்தினின்றும் எடுத்து அருள்புரிதல் காரணமாம் என்றுங் கூறுவர். அருள் புரிதல் காரணமென்பது எவ்வாறெனின் அழித்தல், பிறப் பிறப்பிற்பட்டு வருந்திய ஆன்மாக்களுக்கு இளைப்பு நீக்குதலாம். படைத்தல் ஆன்மாக்களைப் பந்தித்த மலத்துக்குப் பக்குவம் வரச் செய்தலாம். காத்தல் வினைப்போகங்களை உண்பித்து வினைகளை ஒளித்தற் பொருட்டாம். மறைத்தல் அவ்வினைப் போகங்களில் அழுந்தச் செய்தலாம். உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தலாகிய அருளேயாம். ஆதலால் இந்த அருள் மாத்திரமன்றிப் படைத்தல் முதலியவைகளும் அருட்டொழில்களேயாம்.

**2. மாயையின் இலக்கணம்**

பிரபஞ்சமெல்லாந் தன்னிடத்து வந்து ஒடுங்குவதற்கும் தன்னிடத்து நின்று தோன்றுதற்கும் காரணமாயுள்ள பொருள் மாயை எனப்படும். மாயா என்னும் வடமொழி தமிழில் மாயை என விகாரமாயிற்று. மா = ஒடுங்குதல், யா—வருதல்.

மாயை ஒன்றுதானே, சுத்தமாயை, அசுத்தமாயை என இரு வகைப்படும். மலகன்மங்களோடு விரவாது சுத்தமாயிருத்தலின் சுத்த மாயை எனப்படும். குடிலை என்பது சுத்தமாயை. இது விந்துவெனவும் மகா மாயை எனவும் பெயர் பெறும்.

இத் தத்துவங்களே யன்றிச் சாந்தியதீதை, சாந்தி, வித்தை பிரதிட்டை, நிவர்த்தி முதலிய பஞ்ச கலைகளும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களும் தோன்றும். கலை, தத்துவம், புவனம் என்னும் மூன்றும் பொருட்பிரபஞ்சமாம்.

மேற் சொல்லிய பொருட் பிரபஞ்சமேயன்றி முன்சொன்ன விந்துவிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குக்களுந் தோன்றுமே அன்றி எண்பத்தொரு பதங்களும் பதினொரு மந்திரங்களும் தோன்றும். வாக்குக்களாலாவது வன்னம் (எழுத்து). வன்னம், பதம் மந்திரமாகிய மூன்றும் சொற்பிரபஞ்சம்.

**அசுத்தமாயை :**

மலகன்மங்களோடு விரவி அசுத்தப்படுதலால் அசுத்த மாயை எனப்படும்; அசுத்தமாயை காரியப்பாட்டிலே தநுகரணபுவன போகம் என்னும் நால்வகைப் பொருட்களாம். ஒன்றுக் கொன்று ஒவ்வாத தூல சூக்கும இயல்பினையுடைய தத்துவங்களாய்க் காரண ரூபத்தில் நித்தமாய், ஒன்ருய் எப்பொழுதும் அருவமாயிருப்பதாய், கன்மம் நீங்குமளவும் ஆன்மாக்களுக்கு மயக்கம் செய்வதாய், சடமாய், சலனமற்றதாய், தன்னிடத்தினின்றும் விரிந்த காரியப் பொருள்களில் தான் வியாபித்து நிற்பதாய், அக்காரியங்களெல்லாம் விரிந்து தோன்றச் செய்த முறையில் அவை பொருந்தி ஒடுங்க வருகிற சங்கார காலத்திலே ஆன்மாக்கள் எல்லாம் பொருந்கியிருத் தற்கிடமாய், மும் மலங்களுள் ஒன்ருய், சிவத்தினது திரோதான சத்தியாற் காரியப்படுவதாய் நிலைபெறும்.

**குறிப்பு:** தநு: பஞ்சபூதங்களின் காரியமான பௌதிக தேகம்.
கரணம்: புறக்கரணம், அகக் கரணம்.
புவனம்: உயிர்கள் இன்ப துன்பம் அநுபவிப்பதற்கிடமாகிய உலகம்.

போகம்: இன்ப துன்பங்கள் அநுபவிப்பதற்கேதுவாகிய மாயையிலிருந்து கலைமுதற் பிருதுவி ஈருகத் தோன்றும் தத்துவங்களால் தநுகரணபுவன

போகமாகிய இவைகளுண்டாம். கலை முதற் பிருதுவி ஈறுகிய தத்துவங்கள் ஒன்றுக்கொன்று தூல சூக்குமமாய் நிற்கும்.

பஞ்சபூதங்கள்: பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். தன்மாத்திரைகள், சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்.

ஒடுங்கும் முறை தநுவும் புவனமும் போகமும் பூதங்களிலும் பூதம் தன் மாத்திரையிலும் தன் மாத்திரை பூதாதி அகங்காரத்திலும் கன் மேந்திரியங்கள் வைகாரி அகங்காரத்திலும், அகங்காரம் புத்தியிலும், புத்தி அவ்வியக்தத்திலும், அவ்வியக்தம் பிரகிருதியிலும், பிரகிருதி அராகம், வித்தை மூன்றும் கலையிலும், கலை நியதி காலம் மூன்றும் மாயையிலும் ஒடுங்கும்.

இந்திரியங்கள் புறக்கருவிகளாய் மட்டும் நின்று உபயோகப் படும். அந்தக்கரணங்கள் அகக்கருவிகளாய் மாத்திரம் நின்று இயங்கும். உள் அந்தக்கரணங்கள் ஆன்மாவின் அறிவு, இச்சை, தொழில்களை எழுப்பிப் புருடனைப் போகத்திற் செலுத்தும்.

பிரபஞ்சம் தநுவாதிகளாய்ப் பல தன்மையவாய்த் தோன்று வதும் ஒடுங்குவதுமாய்க் காரியப்படினும் அவற்றின் காரணமான மாயை அக்காரியப் பாடுகளின்றி நித்தமாய் ஒன்றுயிருக்கும். பிரபஞ்சம் மாயையினின்றும் தோன்றி அம்மாயையிலே ஒடுங்குதலால் அப் பிர பஞ்சம் அநித்தமென்றும் மாயை நித்தியமென்றும் சொல்லப்படும். தநுகரண புவன போகங்கள் அருவமாயும் அருவுருவமாயும் உருவ மாயுந் தோன்றி நின்று சங்கார காலத்தில் தந்நிலை குலைந்து அருவ மாய் மாயையில் ஒடுங்கும். மாயை நிலைகுலையாது என்றும் ஒரு படித்தாய் அருவமாகவேயிருக்கும். மாயை இந்தத்தநுகரண புவன போகங்களைத் தருதல் கன்மநுகர்ச்சியின் பொருட்டேயாம். கன்ம மில்லையாயின் அவைகளும் வேண்டப்படுவதில்லை. இவைகளை மெய் யென்று எண்ணுவதே மயக்கம். கன்மாநுபவத்தின் பொருட்டே இவற்றை மெய் என்றெண்ணுவதாகும். கன்மமில்லாதவரை மாயை மயக்காது.

### 3. பசுவிலக்கணம்

பசு = ஆன்மா. பாசம் பந்தித்தலால் பசு எனப்பட்டது, ஆன்மாக்கள் எண்ணிலாதனவாய், நித்தியமாய் ஆணவ இருளில் அழுந்தி நல்வினை தீவினைகளுக்கிடான சரீரங்களைக் கடவுள் அருளால் பெற்று, அச்சரீரங்கள் வாயிலாக இருவினைப் போகங்களை அருந்தும்

பொழுது, அவை வினைவயத்தால் வருகின்றனவென்று உணராமல் தமது செயலால் வருகின்றன என்று கருதி அக்கருத்துவகைபற்றி மீட்டும் இதம் அகிதம் வாயிலாகப் புண்ணிய பாவங்களைச் செய்து அவ்வினைகளுக்கேற்றபடி சுவர்க்கம், நரகம், பூமி என்னும் இடங்களிற் போக்கு வரவு உடையனவாய்ப் பிறவிச் சூழலிற் பட்டு உழலும். அப்படி உழன்று திரியும்போது ஆணவமலமானது பரிபாகமடைய, அக்காலத்திற் குருவருளால் அறிவிலே ஞானம் பிரகாசமாம், அந்த ஞானத்தில் மலவிருள் நீங்கிச் சிவத்தின் திருவடி நிழலை அடையும்.

மாயாவாதிகள் ஆன்மா ஒன்றென்பர். சைவசித்தாந்திகள் ஆன்மாக்கள் எண்ணில என்பர்.

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்னும் இந் நால்வகையில் தோன்றும் எழுவகைப் பிறவியில் எண்பத்துநான்கு இலட்சம் யோனி பேதங்களிற் (சரீரம்) பட்டு எண்ணில்லாதனவாய் விரிந்து போகின்ற சீவராசிகளில் ஒவ்வொரு சரீரத்தில் ஒவ்வோர் ஆன்மா பொருந்தி நின்று தனித்தனி வினைப்போகங்களை நுகரவும், வெவ்வேறு விதமான ஆகாமிய வினைகளைத் தனித்தனி ஈட்டவும், அறியாமை, அறிவு என்னும் இரண்டையுந் தனித்தனி அடையவும், பக்குவாபக்குவங்களையும் அவ்வாறே தனித்தனி அடையவும் போகமோட்சங்களையும் அவ்வாறே தனித்தனி வெவ்வேறாகப் பெறவுங் காண்டலால் ஆன்மா எண்ணில்லாதனவேயாம்.

நித்தமாய் : அருவம், அருவுருவம் உருவமாகிய இயல்புகளும் தோற்ற ஒடுக்கமாகிய காரியப்பாடுகளும் இன்றிச் சத்தியல்புடைய சித்துப் பொருளாய் அநாதியே உள்ளனவாய், முத்தியிலே நித்தி யானந்தத்தை அநுபவிக்கும் உரிமை உடையனவாய் இருத்தலின் ஆன்மாக்களும் நித்தியப் பொருளேயாம்.

ஆன்மா சித்துப்பொருளாயினும் சார்ந்ததன் வண்ணமாமியல் புடைய தூலசித்தாதலின், அநாதியே சகசமாயிருந்த ஆணவமல இருளில் அழுந்துவதாயிற்று. இது ஆன்மாவின் கேவலநிலை. கேவல நிலையில் ஆணவமலபந்தம் அநாதியாகவே, அம்மலம் ஏதுவாகவரும் இருவினையும் அநாதியாம். அவ்வினைத் தொடர்பால் வரும் வினைக் குத்தக்க சரீரங்களை முதல்வனே கொடுப்பன். அப்படிக் கொடுத்தல் உயிர்கள்மேல் வைத்த கருணையினாலேயாம். சரீரத்தைப் பெற்று வினைப்பயனை அநுபவித்து வரும் பொழுது ஆணவமலம் பரிபாக மடையும். சரீரத்தை அடைதல் மலபரிபாகத்திற்கும் வினைத்

தொடர்பு ஒழிதற்கும் ஏதுவாயிருத்தலால் அவ்விரண்டையும் நீக்குமாறு இரக்க மிகுதியாற் செய்யும் செயலாதலின் சரீரத்தைக் கொடுத்தல் இறைவனது அருட்செயலேயாம். முதல்வன் எல்லோர்க்கும் ஆதியில் கொடுத்த புரியட்டகாயம் என்னும் சூக்கும சரிரம் ஒருதன்மைத் தானதே. பின் ஆன்மாக்களின் வினைக்குத் தக்கபடியே நால்வகைத் தோற்றமும் எழுவகைத் பிறப்பும் 84000 யோனிபேதமான சரீரங்களும் கொடுப்பர். அதனல் ஆன்மா வினைக்கீடாக வரும் போகங்களைத் தானே அருந்துபவனென்றும் போகம் வருவதற்குத் துணையாக வரும் முயற்சியைத் தானே செய்பவனென்றும் விபரீதமாகக் கருதும். அக்கருத்து வகையால் இதம் அகிதம் வாயிலாகச் செய்யும் அம்முயற்சி ஆகாமியவினையாய் முடியும். அவை பின்பு புண்ணிய பாவமெனப் பட்டுச் சஞ்சிதவினையாய் முடியும். அச்சஞ்சிதம் சுவர்க்கம், பூமி, நரகம் என்னும் இடங்களிற் பொருந்துதலால் அங்கெல்லாம் அவ்வினைப் பயனை அநுபவிக்கும் பொருட்டு உயிர்கள் போக்குவரவு உடையனவாகும். இப்படிப் பிறந்திறந்துவரும் பொழுது மலசத்தி தேய்ந்து தேய்ந்து ஒரு காலத்தில் முழுவதும் பாகமடையும். மலசக்தி யாவும் பாகமடைந்த பின் உடம்பை நானென்றும் போக்தாவும் கர்த்தாவும் நான் என்றும் எண்ணும் விபரீத உணர்வு உண்டாகமாட்டாது. நான் என்பதும் எனதென்பதும் இல்லாதொழியும். அதுவே ஆன்ம பரிபாக குணமாம். இந்நிலையை எதிர்பார்த்திருக்கும் முதல்வன் குருவடிவாய் எழுந்தருளி வந்து சஞ்சித வினையை நீக்கி உண்மையை உபதேசிப்பன். இவ்வுபதேசத்தால் ஆன்ம அறிவிலே ஞானம் பிரகாசிக்கும். அதனல் உயிர் ஆணவ இருள் நீங்கப் பெற்றுத் திருவடி நிழலை அடையும். இதனையே பாசநீக்கமும் சிவப்பேறுமாகிய முத்தி நிலையென்று சொல்வர்.

ஆணவமலத்தால் மறைப்புண்டு மாயைகன்மங்களைப் பொருந்தி போக்குவரவுறுதலாகிய கேவல சகலநிலை ஆன்மாவுக்குப் பொது விலக்கணமாம்.

**பொழிப்பு:**

**ஆன்மாக்கள் எண்ணில்லாதனவாய் நித்தியமாய் ஆணவமல இருளில் அழுந்தி நல்வினை தீவினைகளுக்கீடான சரீரங்களைக் கடவுளருளாற்பெற்று, அச்சரீரங்கள் வாயிலாக இருவினைப்போகங்களை அருந்தும் பொழுது அவை வினைவயத்தால் வருகின்றன என்று உணராமல், தமது செயலால் வருகின்றனவென்று கருதி, அக்கருத்து**

வகைபற்றி மீட்டும் இதம் அகிதம் வாயிலாகப் புண்ணியபாவங்களைச் செய்து அவ்வினைகளுக்கேற்றபடி சுவர்க்கம் நரகம் பூமி என்னும் இடங்களிற் போக்குவரவுடையனவாய்ப் பிறவிச்சுழலிற்பட்டு உழலும். அப்படி உழன்று திரியும் பொழுது ஆணவமலமானது பரிபாகமடைய அக்காலத்திற் குருவருளால் அறிவிலே ஞானம் பிரகாசமாம், அந்த ஞானத்தினால் மலவிருள் நீங்கிச் சிவத்தினது திருவடி நிழலை அடையும்

## 4. பாசவிலக்கணம்

**ஆணவம் :** வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மை படுமாறு செய்தலினாலே ஆணவமலம் என்னும் பெயர் உண்டாயிற்று. அதாவது ஆன்மாவைச் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையதாக்குதல். ,ஆன்மாக்கள் எண்ணில்லாதனவாதல் போல் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் ஒவ்வோர் மலமாய் எண்ணில்லாதனவல்ல. மலம் ஒன்றே, அதன்சத்திகள் எண்ணில்லாதனவாம். அச்சத்திகளினாலே அது எண்ணில்லாத உயிர்களையும் மறைக்கும். உயிர்கள் ஒவ்வொன்றிலும் பல சத்திகள் பொருந்தி நிற்கும். அச்சத்திகள் பரிபாக காலத்தில் நீங்கும் இயல்பினவாம். பரிபாக காலமாவது ஆன்மாவை மறைக்க இயலாது வலிகுன்றிநிற்கும் காலம். அதன் சொரூபம் மிக இருண்ட வடிவம். அதன் செயல் ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தைச் செய்தல். களிம்பு செம்புடன் சகசமாயிருத்தல் போல ஆணவமலமும் ஆன்மாவோடு அநாதியே சகசமாயுள்ளது. (சகசம் = கூடப்பிறந்தது) இந்த மூலமலம், மாயை கன்மங்களைக் காரியப்படுத்தும்.

அதாவது மாயை தநுவாதிகளையும் கன்மம் சுகதுக்கங்களையும் தோற்றுவிப்பனவாம். மாயை கன்மங்கள் ஆகந்துவமலம் (வந்து கூடியவை) எனப்படும். வியாபகமான ஆன்மாவின் வியாபக அறிவை ஒருசிறிதும் விளங்கவொட்டாது முழுதும் மறைத்துநிற்கும்.

**திரோதாயி.** திரோதானசத்தியானது ஆன்மாக்களோடு நின்று ஆணவமலம் உயிரின் அறிவை மறைக்கும்போது அதற்கு அநுகூலமாய் நின்று, அம்மலசத்தி வலிகுன்றும்படி சுத்தமாயாகாரியங்களைத் தோற்றுவித்து, ஆன்மஅறிவை எழுப்புதலும் கலையாதிகளைத் தோற்றுவித்து அவ்வறிவுக்குவிளக்கம் செய்தலும் கன்மங்களை நுகர்வித்துக் கழிப்பித்தலும் ஆகிய இவையெல்லாம் பாகமாகும்வரை பண்ணி நிற்கும். இப்படி மலத்தோடு கூடி நின்று காரியப்படுத்தி வேண்டுமுபாயங்கள் செய்தலாற் சிவசத்தியாகிய அதனைத் திரோதான

மலமென்பர். ஆயினும் அது மலமன்று, உயிர்கள் மேல் இரங்கிச் சிவ பெருமானுடைய திருவடிகளை அடையும்படி அதற்கேற்றவகைகளைச் செய்து கொண்டு மிகுந்த பேரருளாகவே விளங்கும்.

பெத்த நிலையில் இப்படிச்செய்யினும் தானே பக்குவப் படுத்திப் பக்குவமானபின் தானே அருட்சத்தியாய் மாறி நின்று முத்தியைக் கொடுப்பதும் இச்சத்தியே, இதைமலமென்பது உண்மையன்று, உப சாரமாம். இதற்கு ஆதிசத்தியென்றும் பெயர். சிவத்தினது பராசத்தி ஐந்தொழிலுஞ் செய்தலை மேற்கொண்டு பொதுவகையால் வியாபரிக்கும் போது ஆதிசத்தி எனப்படும். இதுவே ஐந்தொழிலுஞ் செய்யும் போது சிறப்புவகையால் வியாபரித்து வியாபார பேதத்துக்கேற்ப இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப்பெயர்பெறும்.

**பொழிப்பு:-** ஆணவமலமானது ஒன்றாய், நித்தமூலமலமாய், தந்தம் பரிபாக காலத்தில் நீங்கும் எண்ணிறந்த சத்திகளைஉடைய தாய் ஆன்மாக்களோடு சகசமாய் நிற்பதாய் அழிவில்லாததாய் எல்லா அனர்த்தங்களுக்கும் காரணமாய் ஆன்மாக்களின் அறிவு தொழில் முழுவதையும் விளங்கவொட்டாது தடுத்துநிற்கும் இயல்பினதாம்.

திரோதானசத்தியானது அந்த ஆணவமலம் பரிபாகமாகும்படி உடன்நின்று அதனைக்காரியப்படுத்தும். அதனால் அதனையும் மலமென்று உபசரித்துச் சொல்லப்படும், ஆணவமலம் பரிபாகமானபின் அச் சத்தியே அருட்சத்தியாய் மாறிச் சிவபெருமானது திருவடிகளை அடையும்படி திருவருள் புரியும்.

இவைகளெல்லாம் ஒடுங்கும் சங்காரகாலத்துத்தான் தாரகமாய் நின்று உயிர் ஒடுங்கப்பெறும். உயிருக்கு இந்த நிலை கேவலமெனப் படும். இந்நிலையில் ஆணவமலமேயன்றி மாயை கன்மம் இல்லையென்பது மாயையின் காரியமான தநுகரண புவனமும் கன்மத்தின் காரியமான போகமும் இல்லையென்றபடியாம். இக் கேவலநிலையில் ஆணவம் ஆன்மாவின் அறிவு முழுவதையும் மறைத்து நிற்கும். மாயை அறிவில்லாதசடமாகையால் இவற்றையெல்லாம் காரியப்படுத்தும் தன்மை சித்தாகிய முதல்வனுக்கே உள்ளதாம்.

முதற்காரணம் மாயை, பிரமமல்ல. மாயை முதல்வனாலே தநுவாதிகளாகக் காரியப்படும். ஏனெனில் பிரபஞ்சம் அசித்துப் பொருள். பிரமம் சித்துப்பொருள். அசித்தாகிய பிரபஞ்சம் சித்தாகிய பிரமத்

தினின்றுந் தோன்றுது. சடப்பொருளின் தோற்றத்துக்குக் காரணம் சடமாகவே இருத்தல் வேண்டும். அன்றியும் தோன்றி நின்று அழி தலாகிய காரியப்பாடுறுதல் சடத்தின் இயல்பேயன்றிச் சித்தின் இயல்பாகாது. மாயை முதற்காரணமாக முதல்வன் எதன் பொருட்டு என்னின், மாயை சடமாதலால் அது சித்தாகிய முதல்வனை யின்றித்தானே தநுவாதிகளாகக்காரியப்படமாட்டாது. மாயை இன்றிப் பிரபஞ்சத்தை உண்டாக்க முடியாதாயின் முதல்வனும் வல்லமை இல்லாதவனேவெனின், தனக்கென ஒரு செயலில்லாதது சடமாகிய மாயை. அதை முதல்வன் விரித்துப் பிரபஞ்சத்தைக் காரியப் படுத்தும் தலைமை மாயை கொடுத்ததன்று.

## வினைக்கேற்ற உடம்பைக் கொடுப்பவர் கடவுள்

ஒரு முதல்வனே பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துவோனுயின் ஆன்மாதிகள் எல்லாவற்றையும் ஒருதன்மையாகப் படையாது தேவர் மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பாகவும் அவற்றுள்ளும் 84 நூறுயிர யோனிபேத மாகவும் பலபடப் படைத்த காரணம் என்னையெனின் முற்பிறவி களிற் செய்த நல்வினைகளுக்கேற்றபடியாம். வினையே பிறவிகளைத்தரு மாயின் கடவுள் எதன்பொருட்டு என்னில் வினை அறிவில்லாத சடப் பொருள். தானுகப் பிறவிகளைத் தரமாட்டாது. அவ்வினையைப் புசிக்கும்படி பிறவி பேதங்களை வினைக்கேற்ப அமைப்பவர் கடவுளே. வினைக்கேற்றபடி உடம்பை அடைவது ஆன்மாவாயின் அவ்வான் மாக்களே தத்தம் வினைக்குத் தக்க உடம்புகளை எடுத்துக் கொள்ளும். அதற்குக் கடவுள் வேண்டுமாவெனில் ஆன்மாவுக்குத் தனக்கென ஒரு செயலுமில்லை, அது சார்ந்ததன் வண்ணமாயது. வினையும் உடம்பும் சடம். அதனுல் தம்முட்கூடுந் தன்மை அவைகளுக்கில்லை, ஆதலால் கடவுளே அவர்களைக் கூட்டுவார்.

## மும்மலங்களும் அநாதி

கடவுள் உயிர்களுக்கு மாயாசரீரங்களைக் கொடுப்பது வினைப் பயன்களை அநுபவித்தற்பொருட்டாயின் வினையோ மாயையோ ஆன்மாக்களை முந்திப் பற்றியது எனில் ஆன்மா என்றுளதோ அன்றே ஆணவமலமும் சகசமாயுள்ளது. அது உள்ளதாகவே கன்மமும் மாயை யும் அன்றே உள்ளனவாம். இவை மூன்றும் நெல்லினிடத்துள்ள முளையும் தவிடும் உமியும் போல அநாதியாகவே உள்ளன. (முளை கன்

மத்துக்கும் தவிடு மாயைக்கும் உமி ஆணவத்துக்கும் உவமை) நெல்லி லுள்ள முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறு போலக்கன்ம மலமும் உயிரினிடத்துச் சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவிக்கும். தவிடு முளைத்தற்கு அநுகூலஞ் செய்து உடனிற்கு மாறு போல மாயாமலம் அச்சுக துக்கங்கள் தோன்றுதற்குத்துணைக் காரணமாய்த் தன் காரியமாகிய தநுகரணம் முதலியவற்றையும் உயிரையும் இயைவித்து நிற்கும். உமி அம்முளை தோன்றுதற்கு நிமித்தகாரணமாய் இருப்பதுபோல, ஆணவமலம் அச்சுகதுக்கத் தோற்றத்துக்கு நிமித்த காரணமாய் நின்று அவற்றை முறுகுவித்து உயிர் நுகருமாறு நிலைபெறுத்தும்.

மாயேயம் மாயாகாரியம். அவை தநுகரணபுவனபோகங்கள் தத்துவங்கள் தோன்றும் முறை:-

அசுத்த மாயையிலிருந்து கலை காலம் நியதியும், கலையிலிருந்து வித்தை அராகம் மூலப்பிரகிருதி என்பனவும் தோன்றும். பிரகிருதி யிலிருந்து குணதத்துவமும் அதிலிருந்து புத்தியும் அப்புத்தியில் அகங் காரமும் தோன்றும். அவ்வகங்காரம் தைசதவகங்காரம், வைகாரிய கங்காரம், பூதாதிஅகங்காரம் என மூவகையாம், அவற்றுள் தைசத அகங்காரத்துள்ளிருந்து சாத்துவிககுணசம்பந்தமான மனமும் செவி முதலிய ஞானேந்திரியம் ஐந்தும்தோன்றும். வைகாரிய அகங்காரத்தி லிருந்து இராசதகுண சம்பந்தமான வாக்காதி கன்மேந்திரியம் ஐந்துந் தோன்றும். பூதாதி அகங்காரத்திலிருந்து தாமதகுணசம்பந்த மான சத்தாதி தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும். அப்பஞ்ச தன்மாத்திரைகளுள் சத்தத்திலிருந்து ஆகாயமும், பரிசத்திலிருந்து வாயுவும், உருவத்திலிருந்து தேயுவும், இரதத்திலிருந்து அப்புவும், கந்தத்திலிருந்து பிருதுவியும் தோன்றும், அப்பூதங்களில் ஆகாயம், சத்தமெனும் ஒருகுணத்தையும், வாயுசத்தம் பரிசம் என்னும் இரு குணங்களையும் தேயு சத்தம் பரிசம் உருவம் என்னும் மூன்று குணங் களையும் அப்பு, சத்தம், பரிசம், உருவம், இரதம் என்னும் நான்கு குணங்களையம், பிருதுவி, சத்தம் பரிசம் இரதம் உருவம் கந்தம் என்னும் ஐந்து குணங்களையும் வியத்தமாகப்பெற்றுவிளங்கும். இந்த ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களுக்கும் முறையே சதாசிவன், மகேசு வரன், உருத்திரன் விட்டுணு பிரமா என்னும் ஐவரும் அதிதேவதை களாம். இத்தத்துவங்கள் ஒடுங்குங்காலத்துத் தோன்றிய முறை யிலேயே ஒடுங்கும்.

**கன்மம்:-**

கன்மமானது ஆன்மாக்களெடுக்கும் உடம்புகளுக்கும் காரண மாய்ப் பலவிதமான போகங்களைத்தருவது. அக்கன்மம் பிரவாக அநாதியாய், பல பேதங்களாய், ஆன்மாவை விட்டு நீங்காததாய் மனம்,வாக்குக்,காயங்களாற் செய்யப்படுவதாய்,புத்தி தத்துவம் பற்றுக் கோடாயிருப்பதால், இன்பமும் துன்பமுமாகிய பயனைத்தரும், புண்ணிய பாவவடிவாயிருப்பதாய் சங்காரகாலத்திலே மாயையைப் பொருந்துவதாயிருக்கும்.

கன்மம் நல்வினை தீவினையென இருதிறப்பட்டு அவற்றுள் ஒவ் வொன்றும் பலவிதப்படும். ஆணவமலம் ஆன்மாக்களோடு அநாதியாய் இருத்தல் போலக் கன்மமும் ஆன்மாக்களை அநாதியே பொருந்தியிருக் கும்.

கன்மம் மனம் வாக்குக் காயங்களினுற் செய்யப்படுவது. அப் பொழுது அஃது ஆகாமியமெனப்படும். பின்பு அக்கன்மம் பக்கு வமாமளவுஞ் சூக்குமமாய்ப் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயை யிற் கிடக்கும். அப்பொழுது அது புண்ணியபாவமெனவும் சஞ்சித மெனவும்படும். இப்புண்ணியபாவங்களின் பயனுகிய இன்பதுன்பங் களைத் தரும் பொழுது அது பிராரத்தம் எனப்படும். சங்காரகாலத் தில் உயிர்கள் மாயையிலொடுங்கும் பொழுது கன்மமும் அவ்வுயிர் களைவிட்டு நீங்காது அம்மாயையிலொடுங்கும்.

கன்மம் திருஷ்ட ஜென்மோப போக்கிய கன்மம் என்றும் அதிருஷ்ட ஜன்மோப போக்கிய கன்மமென்றும் அநியதகாலோப போக்கிய கன்மமென்றும் மூவகைப்படும்.

முதலாவது இந்த ஜன்மத்திலேயே செய்யப்பட்டு முன்னுள் ளவைகளோடு இம்மையிலே சேர்த்தனுபவிக்கப்படுகிறது.

இரண்டாவது இம்மையிற் செய்தவினை அடுத்து வருஞ் ஜன்மத் தில் அநுபவிப்பது.

மூன்ருவது இப்பிறப்பிலும் அடுத்தஜன்மத்திலும் பலிப்பன வாகாமல் பக்குவமின்மை காரணமாக அனுபவத்துக்கு வராது இன்ன காலத்துப் பக்குவமாமென்றும் இன்னகாலத்தில் அனுபவத்திற்கு வருமென்றும் சொல்லுதற்கு இடமின்றி, நின்று, காலாந்தரத்திற் பக்குவமுற்று ஏதேனும் ஒரு ஜன்மத்தில் அநுபவத்திற்கு வரநிற்கும் கன்மம்.

கன்மத்தின் பயன் சாதி ஆயுள் போகம் என மூன்று விதமாய் வரும். அவையும் இயல்பாக வருகின்ற தெய்விகத்தாலும், ஆதி பௌதிகம் ஆதியான்மிகங்களாகிய அசேதன சேதனங்கள் வாயிலாக வும் வரும், கன்மங்கள் ஆன்மாவிற் கூடிவருதல் பழவினையினுலாம். ஊழல்லாத வேறென்றும் ஆன்மாவிற்கு அநுபவமாய் வரமாட்டாது.

அவ்வினைகள் புத்தி பூருவம், அபுத்திபூருவம் என இருதிறப் படும். அவையும் புத்திபூர்வ நல்வினை தீவினை அபுத்தி பூர்வ நல்வினை தீவினையென நான்குவகைப்பட்டுப் பொது வகையால் புண்ணியபாவங் களாக நின்று உயிர்களை விடாதுபொருந்தும். நல்வினையால் தீவினையும் தீவினையால் நல்வினையும் அழியமாட்டாது. அநுபவித்தே ஒழிய வேண்டும். ஆயினும் வேதாகமங்களின் கன்மகாண்ட முறைப்படி பிராயச்சித்தஞ் செய்தாற் பாவகன்மம் ஓரளவு நீங்கும். ஒரு பிராயச் சித்தமும் செய்யாது வேதாகமங்களின் ஞானகாண்ட முறைப்படி நடந்தவரின் அதிகப்பற்றுன பாவங்கள்நீங்கும்.

# 8. தத்துவவிளக்கம்

**பரமசிவன்:** சர்வவியாபகராகிய பரமசிவன் இருவகைப் பிரபஞ்சங்களும் மஹா பிரளய காலத்தில் ஒடுங்கியபின் பொதுவகையில் நோக்கி நிற்பர்.

**பராசத்தி:** பரமசிவனின் சத்தி. அபின்னமானது.

**தசகாரியம்:** ஆணவமல பந்தத்தினின்றும் விடுபட்டு, இருவினையொப்பு மலபரிபாகம் பெற்று, இறைவனோடு அத்துவிதப்பட வேண்டிய ஆன்மாவின் தகைமை நிலை. இது பத்துப் படித்தரங்களை உடையது. அவையாவன: தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம்.

இவற்றுள் முதன் மூன்றும் ஆன்மா தன்னைத் தத்துவங்களினின்றும் வேறுபட்டதாக அறிந்து உணர்ந்து தெளிவு பெறுதல், சரீரம் வேறு, தான் வேறு என உணர்தல். ஆன்மரூபம், ஆன்மதரிசனம் ஆன்ம சுத்தியாவது ஆன்மா தனக்கென அறிவின்மையையும் இறைவன் அறிவித்தால் அறிவது என்பதையும் அறிந்து தேர்ந்து தெளிவுறுதல். சிவரூப சிவதரிசன சிவயோக சிவபோக நிலையில் ஆன்மா தான் வேறு, இறைவன் வேறு என்று பிரித்தறிய முடியாமல் அத்துவிதப்பட்டுச் சிவமேயாய் நிற்கும் நிலை.

தசகாரியம் என்பது மாயையின் காரியம். இத்தச காரியத்தின் உண்மை தேர்ந்தவரே மனவிகற்பம் சிறிதுமின்றி ஏகம் இரண்டென்னுத அத்துவித உண்மையை அறிவார்.

**குடிலை:** (மாயை) மாயையே உலகிற்கு முதற்காரணம். இறைவன் நிமித்த காரணம். சத்தி துணைக் காரணம். கேவலம், சகலம், சுத்தம் என ஆன்மாக்கள் மூன்று அவத்தைப்படும்: இதில் கேவலம் ஆன்மாக்கள் ஆணவ இருளில் அறிவின்றிக் கிடக்கும் நிலை. ஆன்மாவை வழிப்படுத்தி முத்தி நிலையாகிய சுத்தாவத்தைக்குச் சேர்க்கும் போது வழிப் படுத்தும் நிலையே சகலாவத்தை. இது மாயையில் நடைபெறும்.

இந்த மாயை சுத்த மாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை யென மூவகைப்படும். இவை விந்து, மோகினி,மான், எனவும் அழைக்கப்படும்.

சுத்தமாயை, நாதம் (சிவம்) விந்து (சத்தி)சாதாக்கியம் (சதாசிவம்) ஈச்சுவரம் (மகேஸ்வரன்) சுத்த வித்தையென ஐந்து தத்துவங்களைக் கொண்டது. இவை சிவதத்துவம் எனப்படும். சிவதத்துவங்கள் ஐந்தும் சிவனது சுதந்திரத்தானங்கள், ஞானமாத்திரையாய் நிற்கும்போது நாதம் சிவமாயும், கிரியை மாத்திரையாய் நிற்கும் போது விந்து சத்தியாயும் ஞானமும் கிரியையும் சமமாய் நிற்கும் போது சாதாக்கியம் சதாசிவமாயும் ஞானம் குறைந்து கிரியை ஏறி நிற்கும்போது ஈச்சுவரம் மகேசுரனாயும் கிரியை குறைந்து ஞானம் ஏறி நிற்கும்போது சுத்தவித்தை உருத்திரனாகவும் நிற்கும். இவை இறைவனின் அருவ, அருவுருவ உருவ வடிவங்களுமாம்.

**சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்தும் முறை:**

நாதம் புருடனையும், விந்து காலம் நியதி கலையையும், சதாக்கியம் மூலப்பிரகிருதியையும், ஈச்சுவரம் அராகத்தையும் (இச்சை) சுத்த வித்தை வித்தையையும் செலுத்தும். இவை பிரேரகம் எனப்படும்.

**சிவம்:** சர்வசங்கார காலத்துக்குப் பின் இருவகைப் பிரபஞ்சங்களும் மீளத் தோன்றுமாறு குறித்து ஞானமாத்திரையாய் நோக்கி நிற்பர். சூக்கும இச்சா ஞானக் கிரியைகளோடு நின்று சூக்கும ஐந்தொழில் செய்வர்.

**சத்தி:** சிவசத்தி

**சாதாக்கியம்:** தூல இச்சா ஞானக் கிரியைகளோடு நின்று இருவகைப் பிரபஞ்சங்களும் தோன்றுதற்கு மூலகாரணமாய் உள்ளவர்.

**ஈச்சுரம்:** சுத்தப்பிரபஞ்சங்களைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்துவர்.

**சுத்தவித்தை:** அயன் மாலொடு அசுத்தமாயையில் தொழில் செய்வர்.

**அசுத்தமாயை:** (வித்தியாதத்துவம்) காலம், நியதி, கலை,வித்தை, அராகம், புருடன், மாயை என ஏழுதத்துவங்கள்.

**கலை:** சத்தி கலையை எழுப்ப கலை ஆணவமலத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவின் கிரியா சத்தியை விளக்கி, வினையின் வசமாய் வரும் விடய போகங்களை அநுபவிக்கச் செய்யும்.

**வித்தை:-** வித்தை அறிவை எழுப்ப அது இந்திரியங்கள் மூலம் வரும் விடயங்களைப் புத்தி நிச்சயித்துக் கொடுக்க அவ்விடய போகங்களை ஆன்மாபொருந்தும் படி செய்யும்.

**அராகம்:** வினைப்பயனை போகத்திலே இச்சையை உண்டாக்கும்

**காலம்:-** இறந்தகால எதிர்கால நிகழ்கால வினையை அனுபவிக்கும் எல்லையை நிர்ணயிக்கும்.

**நியதி:-** அவரவர் கன்மங்களை அவரவரே அனுபவிக்கச்செய்யும்.

**புருடன்.-** வினைப்பயனால் ஆசைப்பட்ட போகங்களிலே மயங்கி நின்று பிரகிருதி போகங்களில் மயங்கும். மனம் புத்தி, சித்தம் அகங்காரம் மூலம் செயற்படும் ஆன்மா ஆன்மஅறிவு பெறுவதற்கு ஏதுவாகும் தத்துவத் தொகுதி 26 - 27 - 28 - 29 - 30 - 31 அதிகாரி அநந்தேசுவரர். பிரகிருதியின் காரியப்பொருள்களின் அதிகாரி ஸ்ரீகண்ட உருத்திரர்.

**அத்துவசுத்திமுறை:-** ஆன்மாக்கள் பக்குவமெய்திய விடத்து முதல்வன் குருமூர்த்தியை அதிட்டித்து நின்று கிரியாவதி ஞானவதி சாம்பவி என்னுந் தீக்கைகள் ஒன்றினால் அவ்வத் தீக்கை பெறுதற்குரியோருக்கு அத்துவசுத்திசெய்து மலத்தை ஒழித்து சிவம்பிரகாசிப்பதற்கேதுவாகிய ஞானத்தைத் தரிசிப்பித்துப் பிறப்பை அறுப்பன். அத்துவசுத்திசெய்தலாவது மந்திரம் முதலிய ஆறு அத்துவாக்களையும் ஒன்றினொன்று அடக்கி முடிவில் நின்ற கலையைத் திரோதான சத்தியிலும் அச்சத்தியைச் சிவத்திலும் அடக்குதலாம்.

மனம், வாக்குக், காயம் என்னும் முத்திறத்தால் உயிர்கள் செய்யுங் கன்மங்கள் துணைக்காரணமாகிய ஆறு அத்துவாக்களிலே கட்டுப்பட்டுப் பக்குவமானமுறையிலே அவற்றைப் புசிப்பித்து, தொலைத்து, ஆணவமலத்தைப் பரிபாகப்படுத்தி அதனால் அவ்வுயிர்களுக்கு அரிய பக்குவமுண்டாக, முதல்வன் குருவடிவாய் எழுந்தருளி வந்து சஞ்சித கன்மப் பயனை அநுபவியாவண்ணம் அக்கன்மக் குற்றத்தை ஒழித்து அவ்விடத்து மாயேயமாகிய அத்துவபந்தம் முழுதும் சுத்திசெய்து உடலுக் கமைக்கப்பட்ட பிராரத்துவகன்மத்தை அநுபவத்தினால் ஒழித்து, இவ்விடத்து இனிமேற் செய்யும் ஆகாமியவினையையும் அநாதி ஆணவமலத்தையும் ஞானத்தால் ஒழிப்பன்.

**அகங்காரம் -** பூதாதி அகங்காரம் வைகாரிக அகங்காரம் தைசத அகங்காரம் என மூவகைப்படும்

பிரகிருதிமாயை ஆன்மதத்துவம்

ஆன்மதத்துவங்கள் இருபத்துநான்கு.

புறக்கரணங்கள்: பூதங்கள், பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் 5
தன்மாத்திரைகள்: சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் 5
ஞானேந்திரியங்கள்: மெய், வாய், (நாக்கு) கண், மூக்கு, செவி, 5

கன்மேந்திரியங்கள், வாய், கால், கை, அபானம், குறி 5
(வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம்)

அந்தக்கரணங்கள் (அகக்கரணங்கள்) மனம், புத்தி, சித்தம் அகங்காரம் 4

**காண்டம்:** பிரேரகம், போகம், போக்கியம். சிவதத்துவங்கள் பிரேரிக்க, வித்தியாதத்துவங்கள் செயற்படுத்தி ஆன்மதத்துவங்கள் மூலம் போகங்களை அநுபவித்தல்.

**கலைகள்:** நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை. நிவர்த்தி பிரதிட்டா பிரகிருதிமாயையிலும் வித்தியாகலை அசுத்தமாயையிலும் சாந்திகலை சாந்தியதீதகலைகள் அசுத்தமாயையிலும் செயற்படும்.

**பிரபஞ்சம்:** மந்திரம், பதம், வன்னம் மூன்றும் சொற்பிரபஞ்சம் புவனம் தத்துவம் கலை மூன்றும் பொருட்பிரபஞ்சம். இவ்விருபிரபஞ்சங்களும் சேர்ந்ததே நாம்காணும் வையகம். எமது சரீரம் பூதசார சரீரம், குட்டிப்பிரபஞ்சம். இவை ஆறும் ஆறு அத்துவாக்கள் (வழி) எனவும்படும்.

**சரீரம்:** காரண சரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம், தூலசரீரம், என ஐவகைப்படும்.

**காரணம்:** பிறவி எடுத்தற்குக் காரணமாயுள்ளது.

**கஞ்சுகம்:** ஆன்மாவிற்கு ஐந்து கவசங்கள்.

**குணம்:** சாத்துவிகம், இராசதம், தாமதம் என மூன்று

**சூக்குமம்:** பஞ்சபூத சாரம், மனம், புத்தி, அகங்காரம் என எட்டு (புரியட்டகம்) இச்சரீரம் ஆன்மா முத்திநிலை அடையும் வரை நிற்கும்.

**தூலம்:** பூதசார சரீரம் (நாம்காணும் சரீரம்)

# 9. அத்துவிதம்

துவிதம் என்ருல் இரண்டு. அ + துவிதம் = அத்துவிதம் என்ருல் ஒன்றுதான் என்பது ஏகான்ம வாதிகள் போன்ற சில புறச் சமயவாதிகள் கூற்று. உண்மைப் பொருள் இரண்டே என்பர் துவைதவாதிகள். சித்தாந்த சைவர் இவற்றை ஏற்றுக் கொள்வ தில்லை. ஏனெனில் பதி பசு பாசம் அநாதி நித்தியம் என்னும் அவர்களின் அடிப்படைக் கொள்கைக்கு இது இழுக்காகும். பிரபஞ்ச மூலம் பரமாணுக்களின் கூட்டரவு என்பதே ஒன்றென்பவரின் கருத்து. இது சித்தியாரில் 'காரியம் அசைவிற் கண்டாம்' என்று கண்டிக் கப்படுகிறது. காரியம் பிரிவுபடக்கூடியது. விஞ்ஞானிகள் அணுக்களைப் பிரித்து அந்தச் சத்திகளைப் பயன்படுத்துவது சாதாரணம். பிரிவுபடக் கூடியது எதுவும் அழியும். ஆதலால் இறைவனின் நித்தியத்துக்கு இது இழுக்காகும்.

உயிர் உடம்போடு இரண்டற்று உடம்பேயாய் இருக்கும் நிலை போலவும், கண்ணொளி புறவொளியோடு ஒன்றுபட்டு இரண்டற்று நின்று உயிர் காண்பதற்கு உபகரிப்பது போலவும் இறைவன் உயிர்க் குயிராய் இரண்டற்றிருக்கும் நிலைக்கு அத்துவிதம் என்று பெயர். உயிர் உடம்போடு அத்துவிதப்பட்டு நிற்கும் நிலை அநித்தியமானது, நிலையில்லாதது. ஆனால் இறைவன் உயிரோடு அத்துவிதப்பட்டுநிற்பது அநாதி நித்தியம். இறைவன் அத்துவிதவஸ்து என்கிருர் தாயுமான வர். இன்னுமோர் விளக்கமும் தருகிருர் தாயுமானவர்.

''சந்ததமு மெனதுசெய னினதுசெய லியானெனும்
தன்மைநினை யன்றியில்லாத்
தன்மையால் வேறலேன், வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவ மிதுவே,.........''

இறைவன் ஒன்ருயும் வேருயும் உடனுயும் நின்று உயிரைச் செயலில் ஈடுபடுத்தும் போது அத்துவிதப்பட்டு வேறுபடாமல் நிற்றலையே இது குறிக்கும்.

"வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவாக எடுத்துரைக்கும்
ஒதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞானமாகும்
ஊகமணு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள்சம்மதம்
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்கநான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம் ........"

'தத்துவமசி' வட மொழிவாக்கியங்களில் முக்கியமானது, அது போலவே தென்மொழி வாக்கியங்களுள் முக்கியமானது 'உடனுதல்!

தத்துவம்: அது நான் என்னும் இரண்டிலும் அதுவாகிய இறைவன் அநாதியே, இயல்பாகவே, நான் என்னும் உயிரோடு இரண்டு பொருள் ஒன்ருய், அத்துவிதமாய் நின்று உபகரிக்கின்ருன் என்ற துவைதஞானமே பின்னுல் அதன் விளைவாகிய அத்துவித ஞானத்தைத் தருகின்றபடியால், துவைதமும் அத்துவிதமும் ஏற்றுக் கொள்ளக்கூடியவையேயாகும். ஆதலால் சரியை கிரியை யோக ஞானம் என்னும் நெறிகளில் சோபானமாக நின்று சிவோகம் பாவனை செய்யின் துவம் தத் அசி, நான் அதுவாகும் நிலை (முத்திநிலை) கிட்டும் என்பது கருத்து.

இறைவன் உயிரோடு அத்துவிதப்பட்டு உயிர்க்குயிராய் இருக் கின்ருன். உயிர் ஆணவ இருளோடு அத்துவிதப்பட்டு இருளாய் இருக்கின்றது. ஆணவ இருள் உயிரோடு அத்துவிதப்பட்டு உயிராய் இருக்கவில்லை, உயிர் இருளாய் இருக்கும் நிலை அநாதியிலேயே அமைந்தது. ஆயினும் இந்நிலை நிலையானதன்று. உயிர் ஆணவத் தோடு அத்துவிதப்பட்டு ஆணவ மயமாய் இருப்பதே உயிர் இறைவனேடு அத்துவிதப்படாமலிருத்தற்குக் காரணம். உயிர் சார்ந்த தன் தன்மையது. உயிர்க்கு இருளோ டத்துவிதம் அநாதி, அருளோ டத்துவிதம் ஆதி. ஒரு காலத்தில் உயிர் இறைவனேடு அத்து விதப்பட்டு இறைவனுயிருத்தல் கைகூடும். இதற்கு இடையூருக இருந்து தடைசெய்யும் ஆணவ இருளாய் நிற்கும் நிலையிலிருந்து

விடுதலை பெறவேண்டும். அப்படி விடுபட்டு இறைவனோடு அத்துவிதப் பட்டால் அந்நிலை நிலையானதாம். உயிர் ஆணவத்தோடு அத்துவிதப் படுதல் உயிரின்நிலை, இறை உயிரோடு அத்துவிதப்படுதலின் விளைவே உயிர் சிவமயமாதல்.

அத்துவிதத் தன்மையைப் பின்வரும் இரண்டு அநுபவ உதார ணங்களால் விளக்கலாம். ஒன்று உயிர் உடம்பு சம்பந்தம். மற்றது கண் ஒளி; புறஒளி சம்பந்தமானது.

உயிர் சித்து. உடம்பு சடம். உடம்பு தன்னை இயக்கும் உயிரை அறிவதில்லை. உயிரின் செயலை உடம்பு தன் செயலென்றே எண்ணு கிறது. அது போலவே உயிரும், உயிருக்குயிராக நின்று உபகரிக்கும் இறைவனை அறிவதில்லை. உயிருக்குச் சுயமாக அறிவுமில்லை, செயலு மில்லை, அறியுந்தன்மையும் செயற்படுந் தன்மையும் உண்டு. அறிவித் தால் அறியும்; ஆட்டுவித்தால் ஆடும். இறைவனே ஒன்றாய், வேறாய் உடனாய் நின்று இச்சை செயல் அறிவு கொடுத்துக் கண்டு காட்டுதலைச் செய்கின்றான் என்பதை அறியாது ஆணவ இருளில் உள்ள ஆன்மா தன்செயலே எல்லாம் என்று நானென்றும் எனதென்றும் அகங்கரிக் கின்றது. 'நான் எனது என்ற தற்ற இடமே திருவடி', (திருவருள் சத்தி) இறைவன்.

கண் ஒளி காணும் தன்மை உடையது. ஆனால் அது தானே காணமாட்டாது. புற ஒளியோடு அத்துவிதப்பட்டு அப்புறவொளி பரந்து கண்டு காட்டும் பொருள்களையே கண் காணும். புறவொளி அத்துவிதப்படாத விடத்துக் கண் ஒளி பயன்படாது. அப்படிப், புற வொளியோடு கூடியவிடத்தும் ஆன்மாவின் உபகாரத்தாலேயே காணும். அது போலவே இறைவன் உயிர்க்குயிராய்-உடனாய் நின்று, ஆன்மாவின் கன்மத்துக் கீடாகக் கண்டு காட்டுபவற்றையே உயிர் அறியும். இந்த இரண்டு உதாரணங்களும் இரண்டு பொருள்கள் ஒன்று பட்டு வேறற நின்று செயற்படும் விதமே அத்துவிதம் என்பதை விளக்க உதவலாம்.

ஆணவம் ஏகம், ஆனால் அது ஏக தேச வியாபகம். இறையும் ஏகம். ஆனால் சர்வவியாபி, பரிபூரணன். இருள் ஆணவ இருள், ஒளி அத்துவிதவஸ்துவாகிய இறைஒளி. இருள் ஒளியை அறியாது. ஒளி இருளை அறியாது. உயிரோ இரண்டுக்கும் இடமாய் இருக்கிறது. ஒளிப்பிழம்பாகிய இறை அத்துவிதப் பட்டிருக்கும் உயிரை இருள் மூடுவதெப்படி எனக் கேட்கலாம். 'ஒளியும் மிக இருளே' என்று

திருவருட்பயன் அதற்கு விளக்கமளிக்கின்றது. இறைசத்தி, பேரொளி. அந்தப் பேரொளியை அநுபவிக்கும் ஆற்றல் உயிருக்கில்லை. ஆகவே ஆணவ இருளுக்கு மேலே பேரொளியும் இருள் செய்து குருட்டைப் படுகுருடாக்கி விடுகிறது. அப்போது உயிர் இருளிலிருந்து விடுபட வழியில்லையாவென்றால் உண்டு. ஆணவ இருள் எப்படி இருந்தாலும் அத்துவிதப் பட்டிருக்கும் இறை ஒளி உள்ளம் எனப்படும் உயிரைத் தன்பால் ஈர்க்கும். இருள்—சடம் இறை-ஒளி சித்து, இறைஒளி உயிரைத் தன்பால் ஈர்த்தே தீரும். இறைவன் செயலிலான். அவனோடு அபின்னமாகிய சிவசக்தி கருணையேவடிவமானது. இரங்காமலிருக்கமாட்டாமை அதன் இயல்பு. காந்தம் அயலிலுள்ள இரும்பைத் தன்பால் ஈர்ப்பது இயற்கை. அது போலவே கருணையால் இரங்கும் சத்தி உயிரைத் தன்பால் ஈர்க்கும். அப்படி ஈர்க்கும் போது ஆன்ம அறிவொளி அருளொளியோடு கலந்து விழிப்படையும். அருட்சத்தி இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியாசத்தியாய் நின்று செயற்படும். செயற்படும்போது மல மாசுடைய ஆன்மாவோடு கூடநின்று செயற்பட வேண்டியிருப்பதால் அந்நிலையில் வியாபார பேதத்தால் அருட்சத்தி, திரோதானசத்தி எனப்படும். திரோதானசத்தி, அறிவொளியால் விழிப்படையச் செய்த ஆன்மாவை இச்சைகொள்ளச் செய்து கிரியா சத்திமூலம் செயலில் (கன்மத்தில்) ஈடுபடுத்தும். இம்முறையால் ஆணவவலிகுன்றும்.

உயிருக்கும் இச்சாஞான கிரியா சத்திகள் உண்டு. ஆனால் அவை இறைவனின் இச்சாஞானக் கிரியைகளுக்குச் சமமாக மாட்டா. ஆன்மா சுயமாக அவற்றை உடையதன்று. கேவலத்தில் ஆணவ மறைப்பும் சகலத்தில் கன்மத்துக்சேற்ப ஏகதேசமாய் அறியும் அறிவும், சுத்தத்தில் வியாபக அறிவும் பெற்று முத்திப் பயனையும் இறைவனின் இச்சா ஞானக் கிரியா சத்திகளின் அநுக்கிரகத்தாலேயே பெறும். ஆன்மாவின் மூன்று நிலைகளே கேவலம், சகலம், சுத்தம். ஆணவத்தோடு அத்துவிதப்பட்ட நிலை கேவலம். சகலம், பிறவி பெற்றுக் கன்மத்தில் ஈடுபடும் நிலை. சுத்தம் மலபரிபாகம் பெற்ற மூத்திநிலை.

இறைவன், ஊரிலான், குணங்குறியிலான் செயலிலான். காந்தக் கல்லோடு அவனை ஒப்பிடலாம். அவனோடு அபின்னமாகிய சிவசத்தி பேரொளி. அதைக் காந்தத்துக்கு ஒப்பிடலாம். இறைவன் சந்நிதியில் பஞ்சகிருத்தியங்களும் சிவசத்தி மூலமே நடைபெறும். இச்சிவ சத்தியின் பேரொளியை ஆன்மா நேரே கண்டு அநுபவிக்கும் ஆற்றல் இல்லாதது. அதனால் சிவசத்தி மாயாசத்தியாகிய சடசத்

தியை ஆயுதம் போலப் பயன்படுத்துகிறது. முதலில் பேரொளிப் பிழம்பைத் தணிக்கை செய்யப் பயன் படுத்துகிறது. இதைப் பயன் படுத்தும் இடமே மாயை எனப்படுகிறது. இந்த மாயை சுத்த மாயை, அசுத்த மாயை (சுத்தாசுத்த மாயை) பிரகிருதிமாயை என மூவகைப் படும். இதில் பேரொளி யைத் தணிக்கை செய்யும் சுத்தமாயை ஐந்து மடிப்புகளைக் உடை யது. நாதம், (சிவம்) விந்து (சத்தி) சாதாக்கியம் (சதாசிவம்) ஈச் சுரம், (மகேசுவரம்) சுத்தவித்தை (உருத்திரன்) என்பன அவற்றின் பெயர். அதே வேளை அசுத்த மாயையில் (உயிருக்கு உபகரிக்கும் மாயைப் பகுதி அசுத்தம் அடைகின்றது). உயிருக்கு ஐந்து கவசங்க ளையும் இட்டு உயிரின் அறிவொளி அருள் ஒளிக்கிரணத்தோடு அத்து விதப்படும்படி உபகரிக்கின்றது. மாயையின் ஒரு புறம் சுத்தம், ஒரு புறம் அசுத்தம். அருள் ஒளிக் கிரணம் ஊடுருவுவதால் சுத்தம், அழுக்கொடு பட்டு அதை மூடுவதால் அசுத்தம். அதனால் இதை அசுத்த மாயை எனவும் கூறுவர்.

பேரொளியைத் தணிக்கை செய்த பகுதிகள் சிவம், சத்தி, சதாசிவம், மகேசுவரம், சுத்தவித்தை என்பன. இவை சிவதத்து வத்தில் உள்ளன. ஆன்மாவை மூடிய கவசங்களை ஆனந்தமயகோசம் விஞ்ஞானமயகோசம் மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமய கோசம் என்பர். அன்னத்தால் பேணப்படும் இச்சரீரமே அன்னமய கோசம். கோசம்-உறை· விஞ்ஞானமய கோசத்தில் காலம்,நியதி, கலை, வித்தை,அராகம் என்னும் ஐந்து அடுக்குகள் உண்டு. இவை வித்தியா தத்துவத்தில் உள்ளன.

சுத்தமாயை சிவதத்துவம் என்றும் அசுத்தமாயை வித்தியா தத்துவம் என்றும் பிரகிருதி மாயை ஆன்மதத்துவம் என்றும் சொல்லப்படும். சிவதத்துவம் ஐந்து. சிவம் சத்தி, சாதாக்கியம், ஈச் சுரம், சுத்தவித்தை என்பன அவை. வித்தியாதத்துவம் ஏழு. காலம், நியதி, கலை, வித்தை,அராகம், மாயை, புருடன் என்பன அவை. ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு. பூதங்கள் ஐந்து.தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து.கன்மேந்திரியங்கள் ஐந்து. அந்தக் கரணங் கள் நான்கு.ஆக இருபத்து நான்கு. மூன்று தத்துவங்களும் சேர்ந்து 36 தத்துவங்கள் எனப்படும். இந்த மூன்று மாயைகளும் பிரேரகம்' போகம், போக்கியம், அதாவது சிவதத்துவம் பிரேரிக்க வித்தியா தத்துவம் அதைச் செயற்படுத்த ஆன்மதத்துவம் அநுபவிப்பது.

பஞ்சகோசங்களாலாகிய இச்சரீரம் உயிரொளி இறையொளி யோடு அத்துவிதப்படுதற்கு உபகாரமாயிருப்பது. முத்திபெறும் நிலை வரை பயன்படுவது. விடிவாம் அளவும் விளக்கனைய மாயை மயக்கமும் தரும். 'அருள் பெற்ற 'பேர்க்கெல்லாம்.' ஒளிபெற்று நிற்கு மீதருளோ அல்லாது மருளோ' தாயுமானவர். சுத்த பாகம் சுத்த அறிவைத்தர, அசுத்த பாகம் மயக்கத்தைத் தந்து விடுகின்றது.

நாம் காணும் இந்தப் பூமி மாயையில் தோன்றும் சுத்த அர்த்தப் பிரபஞ்சமாம். ஆகவே இந்தப் பிரபஞ்சம் முத்திக்கு வழி செய்யும் அத்துவா (வழி). ஆறு அத்துவாக்களில் உள்ள அர்த்த அத்துவாக்களாகிய சாந்தியதீதை சாந்தி வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்கின்ற கலைகளும் அவைகளைப் பற்றி நிற்கின்ற சூக்குமை, பைசந்தி, மத்திமை, சூக்குமவைகரி, தூலவைகரி என்கின்ற சத்தப் பிரபஞ்சத்துக்கு மூலமான வாக்குகளும், சாந்தியதீத சாந்தி கலை களைச்சேர்ந்த சிவ தத்துவங்களும் சுத்த மாயையில் உள்ளன.

மாயா தத்துவங்களில் அறிவைத் தூண்டும் தத்துவம் வித்தை. அது போல் இச்சையைப் பெருக்கும் தத்துவம் அராகம். அராகம் கர்ம மூலம். இச்சை நல்ல இச்சையாக மாறும்பொழுது முத்திக்கு வழிகாட்டும். 'இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதிநீ முன்னிய வினையே' திருமுருகாற்றுப்படை. நசை-இச்சை, இச்சை சுத்தப்படும் வரை கர்மம் விளைந்து கொண்டேயிருக்கும். கர்மவிளைவு ஆணவ வலி குன்றச் செய்வதற்கேயாம். இச்சை சுத்தப்படாத வரை பிறந் திறந்து உழலவே வேண்டியிருக்கும். நல்வினை தீவினைகளுக்கேற்ப ஆன்மாக்கள் பிறந்திறந்துழலும். மலபரிபாகம் உற்றவர்களுக்குப் பிரபஞ்சம் ஒடுங்கும். மற்றையோர்க்குத் தோன்றும். நிற்கும். பிரபஞ்சம் ஒடுங்குதற்கு நிமித்தகாரணன் இறைவன். துணைக்காரணம் மாயை, முதற்காரணம் பிரபஞ்சம். இதைக் கயிற்றரவு எனக்கூறுவர். கயிறு-இறைவன். அரவு-பிரபஞ்சம். பாம்பு போலக் கிடக்கும் கயிற் றைப் பாம்பென்னும் விபரீதக்காட்சியிலிருந்து, சவிகற்பக்காட்சியாக (உண்மைக்காட்சி) கயிற்றைக் காண்பதே முடிவு, அதாவது இப் பிரபஞ்ச ஒடுக்கத்தில் அடங்கியிருக்கும் இறைவனைக் காணமுடியும். ஆறு அத்துவாக்களாகிய இப்பிரபஞ்சம் இறைவனை அடையவழி.

உயிர் தன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் உயிர்க்குயிரோடு தானும் அத்துவிதப்படுதற்கு அறிவு பிரகாசிக்க வேண்டும். அதை அடைவ தற்கே இச்சரீர விளக்குத் தயாவான தத்துவனால் கொடுக்கப்பட்டிருக் கிறது. இச்சரீரம் கிடைக்காவிட்டால் இறையுணர்வு பெற்றுக்கடைத் தேற முடியாது.

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே'

'உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' திருமூலர்.

அறியாமை உயிர்க்குணமன்று. அது உயிரைப்பற்றியிருப்ப தொரு குற்றம். ஆணவ இருளால் ஏற்பட்டது. நீங்கக் கூடியது. இது அருளொளியின் ஊடுருவலால் சற்றே விழிப் பெற்றெழும். உயிரின் அறிவொளி இறையொளியோடு அத்துவிதப்படும் போது நீங்கும். பிரபஞ்சுத்தில் ஆறு அத்துவாக்கள் இருப்பதுபோல இச்சரீரமும் அறுவகை அத்துவாக்களின் கூட்டரவு. ஒவ்வொன்றும் உயிரொளி, அருளொளி, அத்துவிதப்படுதற்கு வழி.

சிவதத்துவம் வித்தியாதத்துவம் ஆன்மத்துவம் மூன்றினும் வித்தியாதத்துவம், உயிரை மூடியிருக்கும் பஞ்சகோசங்களில் ஆனந்த மயகோச விஞ்ஞானமய கோசங்களைக் கொண்டது. ஆனந்தமய கோசத்தை இறையொளி ஊடுருவும் போது உயிரில் ஒருவித உயிர்ப்புண்டாய்த் தான் ஒரு வஸ்து என்கின்ற கணிப்புண்டாகும்.

விஞ்ஞானமயகோசம் மிக முக்கியமானது. இக்கோசம் தனக்குள் ஐந்து உள் உறைகளைக் கொண்டது. அவை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பன. உயிரின் அறிவு இச்சை, செயல், விருத்தியுறுவதற்குக் கலை, வித்தை, அராகம் மிக முக்கியமானவை.

செயல், அறிவு, இச்சை என்ற முறையில் விருத்தியுறுதலின் கலை, வித்தை, அராகம் எனப்பட்டன. கலை தட்டி எழுப்புதல், வித்தை, அறிவு, அராகம், இச்சை. இக்கிரமம் இறையொளி, உயி ரொளியைத் தீண்டுதற்குப் பயன்படும் முறை. அறிவு சற்றே அரும் பத் தொடங்கியதும் அறிவு பின் இச்சை, பின் செயல் என்னும் கிரமத் தில் பயன்படும். இச்சையை அருள் ஒளியுந் தூண்டும், அறிவு அறி யாமைகளும் தூண்டும். இச்சை கர்ம மூலத்தைப் பெருக்குவதோடு அறிவையும் தன்வசப் படுத்தும். அதேசமயத்தில் அருள் ஒளி ஊடு ருவுவதால் அறிவானது தவறுகளை உணருவதற்கு வேண்டிய சத்தியும் பெறும். அறிவுக்கு, உணரும் சத்தி பிறப்பதற்கு ஆன்மதத்துவம், மனோமய, பிராணமய, அன்னமய கோசங்களை உதவி உபகரிக்கும். அகக்கரண புறக்கரண தத்துவங்கள் அறிவு விஸ்தரிப்பதற்குப் பேருதவி புரியும்.

மனம் என்ற தத்துவம் அகக்கரண புறக்கரணங்களுக்கு ஏகப் பிரதிநிதி. புறக்கரணங்கள் அறிந்தவற்றை அகக்கரணங்களுக்கு அறிவிப்பது மனம். மனத்தைப் பக்குவப்படுத்தாவிடின் மனம் கர்மத் துக்கேற்பப் பிறழ்வு செய்து அகக்கரணங்களுக்கு அறிவித்து உயிர் அறிவையும் கெடுத்துவிடும். அறிவின் வழி மனம் நிற்பதில்லை. அது தத்துவங்களைத் தந்த இறைவன் ஆணை. அதனால் இறைவன் வழி நின்று மனதில் மாசு படியாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' இந்த மனமாசு நீங்க முக்கியமானது வாய்மை.

'புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்' —வள்ளுவர்

இறைவன் 'தயாவான தத்துவன்' என்பது திருவாசகம். தத்துவ னின் தயையாவது உடலை அநுக்கிரகித்து அறிவைப் பிரகா சிக்கச் செய்து உயிரைத் தன்னோடத்துவிதப்படுத்தலாம். தத்துவ னின் தயைதான் அத்துவித விளைவு. இறைவன் உயிரோடத்துவிதப் படுதலும் மாயையோடத்துவிதப் படுதலும் அத்துவித விளைவாய் அது நீயாதலாம். உயிர் ஆணவத்தோடு அத்துவிதப் பட்டிருப்பதும் மாயையோடத்துவிதப் படுதலும் பின் அருளோடு அத்துவிதப் படுத லும் அத்துவித விளைவாய் 'நீ அது' வாதலாம். இறை அத்துவிதத் தின் பயன் உயிரத்துவித நிலையை நிலை பெயர்த்து, நிலையாய முத்தியில் நிலைக்கச் செய்வதாம். நிலையாய அந்நிலையே முத்திப்பேறு.

அத்துவிதம் இறை அத்துவிதம், உயிரத்துவிதம் என இரு வகைப்படும். ஒன்று விளைவு, மற்றையது நிலை. விளைவு உடனா தல். இறைவன் உயிரை ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உபகரிக் கின்றான்.

ஒன்றாதல் என்றால் இறைவன் அநாதியில் ஒன்றுபட்டிருக்கும் மாத்திரையின் அமைதலின் அந்த அநாதி அத்துவிதம், ஒன்றாதல், உயிரோடு ஒன்றாயிருத்தல். உயிர் உய்தி பெற்று இறையோடத்நுவிதப் படுதற்கு மூலமாய் இருத்தலால் அவ்வொன்றாதல், 'ஒன்றாதல் உப காரம்' எனப்பட்டது.

வேறாதல் என்றால் என்ன? வேறோர் அத்துவிதம் உண்டென் பது இதன் கருத்து. உயிரைத் தன்னோடத்துவிதப்படுத்துதற்கு இறைவன் மற்றொன்றாகிய மாயையோடும் அத்துவிதப்படவேண்டி

யிருக்கிறது. தன்னோடு தொடர்பு பட இயலாதிருக்கும் உயிருக்கு அது கைகூடும் பொருட்டு நடக்கும் வேறோர் அத்துவிதம். அதனால் இது வேறுதல் அத்துவிதமாம்.

சரீரத்தில் உயிரின் பொருட்டு இறை சரீரத்தோடு அத்து விதப்படும். இது இறை அத்துவித விளைவு, அவ்விளைவுக்குப் பயன் உயிர் சரீரத்தோடு அத்துவிதப்படுதல், இது உயிரத்துவித நிலை. இறையத்துவித விளைவுக்கும் உயிரத்துவித நிலைக்கும் உடனுதல் விளக்கமாம். ஆகவே இறை சரீரத்தோடு அத்துவிதப்படும் என்பது உயிரும் சரீரத்தோடு அத்துவிதமாம் என்பதே.

ஒன்றுதல் உபகாரத்தால் அறிவுவிளக்கம் பெற்ற உயிருக்குச் சற்றே விழிப்புண்டாகும். பின் வேறுதல் உடனுதல் உபகாரங்களால் உயிர் இறையோடு நிலையாய அத்துவித முத்திநிலை சித்தித்தற்கு வழி புலனாகும்.

இறைவன் உயிருக்குயிராய் இருப்பவன். அநாதியே அத்துவிதப் பட்டிருக்கின்றான். அத்துவிதம் என்பது பிரித்தறிய முடியாத இரு பொருட் கூட்டரவு, இறைக்கு உயிரோடு உள்ள அத்துவிதம் நிலை யானது. உயிர் ஆணவ அத்துவிதத்திலிருந்து விடுபட்டு இறையோடு அத்துவிதப்பட வேண்டியது. அறியாமையில் மூழ்கிக் கிடப்பதால் ஒன்றுபடுகின்றிலது.

இறையின் பேரொளியைத் தாங்குமாற்றல் உயிருக்கில்லை, அல்லாமலும் அப்பேரொளி உயிரைப் படுகுருடுபடுத்தி வருகிறது. உயிரின் அறிவொளி இறையின் அருளொளியோடு ஒன்று படுதலே உயிர் இறையோடத்துவிதப்படுதற்கு ஒரேவழி. உயிர் அறியுந் தன்மையுடையது; இறை அறிவித்தாலே அறியும் தன்மையுடையது; அதனால் இறைவனின் உபகாரமின்றி அது கைகூடாது. பேரறிவாகிய இறையின் பேரொளியைத் தாங்குமாற்றல் உயிருக்கின்மையால் அதற்கு இறைவனின் கருணையாகிய சிவசத்தியின் உபகாரம் வேண்டி யுள்ளது. சிவசத்தி கருணைப் பிரவாகம். அக்கருணையால் மாயை யென்னும் சடசத்தியைப் பயன்படுத்திப் பல மடிப்புக்கள் கொண்ட மாயைத்திரையில் தான் மறைந்து நின்று பேரொளியைத் தணிக்கை செய்து, உயிருக்கும் பல கவசங்களையிட்டுத் தணிக்கை செய்த தன் ஒளிக்கதிர்களில் மிருதுவானதொரு கதிரை, உயிரை மூடியிருக்கும் கவசங்களை ஊடுருவச் செய்து உயிரின் அறிவொளியோடு அத்துவிதப்

படச் செய்து சிறிதே ஆன்மா அறிவுபெறச் செய்யும். இச்சிற்றறிவு உயிருக்குக் கிடைத்த சிறுவிளக்கு. இந்தச்சரீரம் அவ்விளக்கின் இருப் பிடம். இவ்விளக்குச் சுட்டறிவையே தரும். மயக்கஅறிவையுந் தரும், 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்கிறது திருமந்திரம். அதனால் இந்தச் சரீரவிளக்கைப் பேணுகிறமுறையிற் பேணினால் அறி யாமை இருள் விடியப்பெற்று சரீர உதவியின்றியே பேரொளிப் பிழம் பைத் தாங்கும் ஆற்றல் பெறுவர். அவ்வித ஆற்றலைப் பெற்ற உயிர் தன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் இறையோடு அத்துவிதப் படும். அதற்குத் திருவருள் அநுக்கிரகம் வேண்டும். இப்படி அத்து விதப்பட்டும் சிவாநுபவம் ஒன்றினுக்கே உரித்தாகும் என்கிறது சித்தியார்.

**அத்துவாக்கள்**

சொற்பிரபஞ்சம், (சுத்தப்பிரபஞ்சம்,) மந்திரம், பதம், வன்னம் பொருட் பிரபஞ்சம் (அர்த்தப் பிரபஞ்சம்) புவனம் தத்துவம், கலை

**தத்துவங்கள்:**

சிவதத்துவம் 5. சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை.

வித்தியா தத்துவம் 7 காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை.

ஆன்மதத்துவம் 24 கன்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5 பூதங்கள் 5, தன்மாத்திரை 5, அந்தக்கரணம் 4.

**கலை:** நிவர்த்தி, பிரதிட்டை, வித்தியா, சாந்தி, சாந்தியதீதம் = 5

**சரீரம்:** காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூலசரீரம்.

**பஞ்சகோசங்கள்;-** அன்னமயகோசம், பிராணமயகோசம். (இவைகஞ்சுக சரீரங்கள்) மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் (5)

**தூலசரீரம்:** நாம்காணும் இச் சரீரம். பூதசார சரீரம்.

**சூக்கும சரீரம்:** இதைப் புரியட்டகம் எனவும் சொல்வர். பஞ்சபூதசாரம், மனம், புத்தி, அகங்காரம் என்னும் எட்டும் சேர்ந் தவை. இது ஆன்மா முத்தி பெறும் வரை உண்டு என்பர்.

குணசரீரம்: சாத்துவிகம், இராசதம், தாமதம் எனுங் குணங் களை உடையது.

கஞ்சுகசரீரம்: பஞ்சகோசங்கள், போர்வைகள்.

காரணசரீரம்: இச்சரீரம் கிடைப்பதற்குக் காரணமாயுள்ள சஞ்சித வினையால் ஆனது.

வாக்குகள்: சூக்குமை, பைசந்தி, மத்திமை, சூக்குமவைகரி தூலவைகரி (5)

மாயை: சுத்தமாயை சுத்தாசுத்தமாயை (அசுத்தமாயை) பிரகிருதிமாயை.

அந்தக்கரணங்கள்: மனம், புத்தி, சித்தம் அகங்காரம் (4)

சுத்த தத்துவங்கள் பிரேரகம் — பிரேரிக்க

வித்தியா தத்துவங்கள் போகம்— பிரயோகப்படுத்தி

ஆன்மதத்துவங்கள் போக்கியம் — பயன்படுவது

இறைவன் ஆன்மாவுக்கு நேரே உபகரிக்காமல் மாயை மூலம் செயற்படுவது ஏன் என்பதை முன்பு ஒரளவு சொன்னோம். தத்து வங்கள் கலைகள் கோசங்கள் அத்துவாக்களைப் பயன் படுத்துவது ஆன்மா நேரே இறை உபகரிப்பைப் பெறும் தகுதியின்மையினாலே யாம். அதுபற்றியும் முன்பு சிறிது விளக்கப்பட்டது. இப்போது இறைவன் இவை மூலம் செயற்படும் முறையைச் சிறிது விளக்குவோம்,

ஆன்மாவின் ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம் ஆகிய இரண்டும் வித்தியாதத்துவத்தில் அமைந்தவை. ஆனந்தமயகோசம் முதலாவது உறை. இதில் இறை ஒளி ஊடுருவி ஆன்ம ஒளியோடு கலக்கும். விஞ்ஞானமய கோசம் மிக முக்கியமானது. வித்தியாதத்து வத்துள்ள ஏழு தத்துவங்களுள் கலை, வித்தை, அராகம். முறையே செயல், அறிவு, இச்சை செயற்படுவதற்கு வியஞ்சகமாக நிற்குமிடம். தணிக்கை செய்யப்பட்ட இறையொளியாகிய அருலொளி உயிரின் அறிவு இச்சை செயல்களோடு அத்துவிதப்படுதற்கு விஞ்ஞானமய கோசத்தை ஊடுருவும் இடமே கலை, வித்தை, அராகம். ஆன்மா வின் இவ்வைந்து கோசங்களும் காரண சரீரம் கஞ்சுகசரீரம் குண சரீரம், சூக்கும சரீரம், தூலசரீரம் எனவும்படும்,

கலை (செயல்) சத்தியால் செயற்படுத்தப்பட்டு ஆணவ மலத் தைச் சிறிது நீக்க ஆன்மாவுக்கு அறிவு விருந்தி உண்டாகும்.

வித்தை (அறிவு) அறிவை எழுப்ப இந்திரியங்கள் மூலம் வரும் அறிவு விடயங்களைப் புத்தி நிச்சயித்துக் கொடுக்க அவ்விடய போகங்களில் ஆன்மா பொருந்தும்படி செய்யும். அராகம், (இச்சை) வினைப்பயனை போகத்தில் இச்சையை உண்டுபண்ணும். இவை செயற்படுத்தப்படும் முறையில் செயல், அறிவு, இச்சை என நின்று பின் செயற்படும்போது மாறி அறிவு இச்சை செயல் என்னும் முறையில் நடைபெறும்.

அத்துவாக்களின் கூட்டரவே இப்பிரபஞ்சம். சரீரம் குட்டிப் பிரபஞ்சம் என்பதும் முன்பு அறியப்பட்டது. இறைவன் அத்துவா வடிவினன் என்று உபசாரமாகக் கூறுவர். இறைவனது அருட்சத்தி செயல் வேறுபாட்டால் திரோதான சத்தியெனப்படும். திரோதான சத்தி இவ்வத்துவாக்களோடு வேறறக் கலந்து எல்லாமாகியும் பொருட்டன்மையால் வேருகியும், செயற்படுத்துதலால் உடனுகியும் நிற்றலாலும் உபசாரமாக அப்படிக் கூறுவர்.

இப் பிரபஞ்சம் கயிற்றரவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இருளில் அரவு போலத் தோற்றமளிக்கும் கயிற்றை நெருங்கி ஆராயும் போது உண்மை தெரிவது போல பரத்தை மறைத்து நிற்கும் பிரபஞ்சத்தை அறிவொளி பெற்று ஆராயின் பிரபஞ்சம் இல்லாததாகப் பரம் வெளிப்படும்.

'பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்' திருமூலர்,

இறைவனின் பஞ்சகிருத்திய நடனப் பேற்ருல் கிடைத்த இந்தச் சரீரம் நாம் கடவுளை வணங்கி உய்தி பெறுதற்கேயாம். சரீரத்தைப் பேணுமுறையிற் பேணிஞல் உயிர் இறையோடு அத்துவிதப் படுதற்கு உதவும்.

ஆனந்த மயகோசத்தில் இறையொளி உயிரொளியோடு சம்பந்தப்பட்டும் விஞ்ஞானமய கோசத்தில் அறிவு, இச்சை, செயல் மூலம் செயற்படுத்தப்பட்டும் மனே,பிராண,அன்னமய கோசங்களால் ஆன்ம அறிவுக்குத் தவறுகளை உணரச் செய்தும் உபகரிக்கும்.

மனம் வாக்குக் காயங்கள் ஒன்றுபடுதலே பயன் தரும். இந்த மனம், தத்துவம். வாக்கு, மந்திரம், பதம், வன்னம். காயம், புவனம். கலை இவை செயற்பட உதவுவது. ஆறு அத்துவாக்கள் மூலம் செயற்படுவது தெளிவு. இதில் மனம் மிக முக்கியமானது. உயிரின் அதிவேக வாகனம், அது அறிவின் வழி நிற்பதில்லை, வினைப்பயனுக்கேற்ப

இறைவனால் செலுத்தப்படுவது. இறை வழிபாட்டால் பக்குவப்படுத்தலாம். மனமே அறவழி நின்று முத்திபெற வழிகாட்டுவதும் மறவழி சென்று ஒரு நொடிப்பொழுதில் பல பிறவிகட்கு வித்திடுவதுமாம். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்,' (வள்ளுவர் வாக்கு) புறக்கரணங்கள் மூலம் அறிந்தவற்றை அகக்கரணங்களுக்குக் கொடுத்து செயற்படுத்துவது.

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
மிவ்வுலக மெவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கும் மாதர்சிற் றின்பமோ
வென்னின்மக மேருவாக்கிச்
சுமையெடுமி னென் றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாளு மாக்கி நாளும்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ்
சூறையிட் டிந்த்திரஜாலம்
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
யம்மம்ம! வெல்லவெளிதோ?
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
தருளோவ லாதுமருளோ
சமயநெறி காணாத சாக்ஷிநீ சூக்ஷமமாத்
தமியனேற் குளவுபுகலாய்
சர்வபரிபூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே
என்று இரந்துகேட்கின்றார் தாயுமானார்.

இதுவரை சிவன் தன் ஐந்து தத்துவங்களின் மூலம் தனது பேரொளியைத் தணிக்கை செய்வதும் ஆன்மதத்துவத்தில் ஆன்மாவுக்கு ஐந்து போர்வை போன்ற உடம்பை அருளியும், வித்தியாதத்துவத்தில் ஏழு தத்துவங்களும் ஆறு அத்துவாக்களும் அமைத்து அவை மூலம் இறை ஒளி ஆன்ம ஒளியோடு சம்பந்தப்பட்டு அறிவு விருத்தியெய்தி செயல்படுவதும், அதன் விளைவால் ஆன்மாவின் சிற்றறிவு நீங்கி முற்றறிவு பெற்று உய்யும் வகையும் ஒருவாறு விளக்கப்பட்டது,

பின் இணைப்பு - 1

# சிவஞானபோதப் பொழிப்பு

ஏனைய ஒளிகளால் அகற்ற முடியாது எங்கும் பரந்த புற இருளை ஓரிடத்துதித்த பன்னிருவகைப் பட்ட சூரியன் நீக்குவது போல மற்றச் சமய நூல்களினால் நீக்க முடியாத அக இருளை ஓர் ஆகமத்தின் ஒரு படலத்தில் உள்ள பன்னிரு சூத்திரங்களால் நீக்கியருளச் சிவஞான போதம் உதவியது.

இருட் கேட்டிற்கும் நிருவிகற்பஞ் சவிகற்பம் என்னும் இருவகை காட்சிக்கும் சூரியன் இன்றியமையாதவாறு போல மலத்தீர்விற்கும் ஆராய்ச்சி, அநுபூதி என்னும் இருவகை உணர்விற்கும் சிவஞான போதம் இன்றியமையாச் சிறப்புடையது.

எல்லா நூற் பொருளும் திரண்டு கூடிய ஞேயம், பெரும் பெயர், மகாவாக்கியம் ஒரு வார்த்தை அஞ்செழுத்து என்பவற்றை யும் தன்னுள் அடக்கியதே.

''அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் அஞ்சின்
பொருள்நூல் தெரியப் புகின்''

அநாதியே பந்தப்பட்ட பசுவின் அறியாமையை நீக்கி அறிந்து அநுபவித்து உணர்ந்து வினை நீக்கம் பெறுவதற்குத் தநு,கரண,புவன, போகங்கள் இறைவனால் கொடுக்கப்பட்டவை.இவற்றில்,தநுவினுடைய முக்கியத்துவம் இன்றியமையாமையும் பல மெய்ஞ்ஞானிகளால் கூறப் பட்டன.இவருள் திருமூல நாயனார் மாத்திரம் ஒன்பதுக்கும் மேற்பட்ட சூத்திரங்களால் உடம்பின் தேவையும் பயனும் வற்புறுத்தியுள்ளார். அதில் முக்கியமான மூன்றினை இங்கு தருவது சிந்தனைக் குதவலாம்.

1. உடம் பினைமுன்னம் இழுக்கென் றிருந்தேன்
   உடம் பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
   உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
   உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே.

2. உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

3. மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே

சிவஞான போதத்திலும், பதி பசு பாச உண்மை நிறுவுவதற்கு உடம்பை இடமாக வைத்தெண்ணப் படுவது சிந்தித்து மகிழ வேண்டியது.

இவ்வுடம்பு சடமாகலின், இதன்கண் இன்ப துன்பங்களை அறிந்து நுகர்தற்கு இதன் வேறாய் வேறொரு பொருள் உண்டு. அதுவே ஆன்மா.

ஒருடம்பில் நிகழும் இன்ப, துன்பங்களை மற்றொரு உடம்பின் அறியப் படாமையின் உடம்புகள் தோறும் ஆன்மாக்கள் பலவுண்டு.

அந்த ஆன்மா அநாதியே உடம்புள் கட்டுண்டு நிற்றற்கு ஒரு பந்தம் அநாதியே உண்டாயிருக்க வேண்டும்.

அப்படியிருக்கும் ஆன்மா கேவலம் (பந்தம், அறியாமை) சகலம் (பெத்தம், அறிவு) சுத்தம் (முத்தி தெளிவு) என்னும் மூன்ற வத்தைப் படும். (அவத்தை = நிலை).

நாள்தோறும் நனவும் கனவும் உறக்கமும் பேருறக்கமும் உயிர்ப்படங்கலும் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி,துரியம், துரியா தீதம்)எனக் காணப் படுதலான், உடம்பிலும் ஐந்தவத்தைப் படும். ஆன்மாக்கள் இறைவனைப்போல் தன் வயத்தனல்லாதிருப்பதால் இவற்றிற்கு உடம்பு முதலியவற்றைப் படைத்து நடாத்தி ஒடுக்கு தற்கு ஒரு முதல்வன் உண்டு.

அம் முதல்வன், அழிபொருள் போலச் சுட்டி அறியப் படுபவ னுமல்லாமல், பொய்ப் பொருள் போலச் சுட்டி அறியப்படாத வனுமல்லாமல், வேறாய், ஆகம அளவை சார்பாகத் தலை நின்று அநு மானத்தால் ஆராய்ந்து பொதுவியல்பால் துணியப்படும். அப்படி அறிபவன் ஆன்மா.

அங்ஙனம் அறியும் சார்ந்ததன் வண்ணமாகிய ஆன்மா, கேவலத்தில் ஆணவத்தோடு கூடி அதன் தன்மையையும், சகலத்தில், பிரபஞ்சத்தில் உடபொடு கூடி, மயங்கி, அறிவிக்க அறிந்து நிற்குந் தன்மையையும், சுத்தத்தில் திருவருளோடு கூடி சிவமயமாந் தன்மையையும், பெறும்.

படைத்துக் காத்து அழிக்கும் மூன்று தொழில்களையும் செய்யுங் கடவுளர்க்கு மேலாய், அவர்களை அதிட்டித்து நின்று தொழிற் படுத்துபவனே முதல்வன். அதனால் அவன் விகாரியாகான். உலகத்தைப் படைக்குங்கால் விகாரமின்றி உடனாய் நிற்பவன். தனது சமவேத சத்தியால் இருவினைகட்கேற்ப மாயையென்னும் சடசத்தியினின்றும் தோற்றுவித்து ஒடுக்குவன். இதனால் அவனும் இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்றவத்தையுடையவன். அவனுக்கு அது உபசாரமே. அவன் அமலனாய் நின்றே ஆன்மாக்களுக்கு இன்ப துன்பங்களைக் கருவிகளின் வழியாய் நுகர்விப்பன்.

## சிவஞான போதம்

### மங்கல வாழ்த்து

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

1. அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்

இது பதியுண்மைக்குப் பிரமாணங் கூறியது. இவ்வுலகம் சங்கார காரணனாயுள்ள முதல்வனையே முதலாக உடைத்து என்பது இதன் பொருள்

அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டியுணர்த்தப்படும் சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என்னும் இருகூற்றுத்தொகுதியும் தோன்றி நின்று ஒடுங்கும் முத்தொழிலுடைமையால் ஒருவனாற் தோற்றப்பட்டதாய உள் பொருளேயாம். அது தான் தோன்றும் போது தான் ஒடுங்குவதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமலம் நீங்காமையால் அது நீங்குதற் பொருட்டு மீளத் தோன்றுவதாம்.

2. அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே

சங்காரகாரணனுகிய முதல்வன்,கலப்பினுல் உடலின் உயிர்போல அவ்வான்மாக்களேயாய், பொருட்டன் மையாற் கண்ணின் அருக்கன் போல அவற்றின் வேறுமாய், உயிர்க்குயிராதற்றன்மையானே கண்ணொளியின் ஆன்மபோதம் போல உடனுமாய் நின்று, ஆணையென்னும் தனது சிற்சத்தியால் வரும் இருவினைகளால் அவ்வான்மாக்கள் இறத்தல், பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன்.

3. உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

காணப்படும் உடம்பாற் காணப்படாத உயிருக்குண்மை கூறப்பட்டது. இலது என்றன் முதலிய அறுவகை ஏதுக்களானும், மாயா இயந்திர தநுவினுளென உடம்போடு சேர்த்து ஓதிய குறிப்பேதுவானும் இவற்றின் வேருய் இவ்வுடம்பினுள் ஆன்மாவெனப்படுவதொன்றுண்டு என்றவாறு.

4. அந்தக் கரணம் அவற்றினொன்று அன்றவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத் தைத்தே.

அந்தக்கரணங்களாகிய மனம்,புத்தி,அகங்காரம், சித்தமென்னும் நான்கனுள் ஆன்மா ஒன்றல்ல. நுண்ணுணர்வில்லாத அரசன் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சர்களோடும் கூடி நின்று, தன் தொழில் நடத்துவது போல சகசமலத்தினுல் உணர்வின்றிக் கலாதிகளாற் பொது வகையான் உணர்வு நிகழினுஞ், சிறப்பு வகையான் நிகழுமாறு தனக்குத் துணையாக அவ்வந்தக்கரணங்களோடு கூடி நின்று வினை செய்யும். அதனுல் ஆன்மா சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதம் என்று ஐந்தவத்தைப்படும்.

5. விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண் மூக்கு
அளந்தறிந்து அறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

மெய், வாய், கண், மூக்குச் செவியென்பன தத்தம் விடயங்களை இஃதின்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனம் அறியும் தம்மையும் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தி அறிவிக்கும் உயிரையும் அறியமாட்டாது. அதே போல உயிர்களும், தமதறிவிற்கு வியஞ்சகமாகிய முதல்வனது சிற்சத்தியான் இருவகை அஞ்சவத்தையினின்று வினைப்பயன்களை அனுபவிக்கும் தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டா, உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதி மாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறு போல்வது. கரணத்தாலன்றிச் சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வன் அதுபற்றி விகாரியாகான்.

6. உணர்உரு அசத்தெனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே

முதற்பொருள், தம்முணர்வின் அளவைகளான் அறியப்படும் இயல்பிற்றென்னின் அங்ஙனம் அறியப்படும் பிரபஞ்சம் போல் அழிபொருளாகி அசத்தாகும். அங்ஙனமன்றி அறியப்படாததோவென்னின் முயற் கொம்பு போலச் சூனியப்பொருளாம். இவ்விருபகுதியுமின்றி ஒருவாற்றானறியப்படாமையும் ஒருவாற்றானறியப்படுதலுமாகிய சிவசத்தாமெனக் கூறுவர், மெய்யுணர்வின் நிலைபெற்றுயர்ந்தோர்.

7. யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

வாக்கு மனதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில் உணர்உருவாகிய அசத்தெல்லாம் பாழாகலின் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது. அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாகலின் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாது. ஆதலால் பாரிசேட அளவையான் இருதிறன் அறிவுளது ஒன்று உண்டு என்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதல் தன்மையும் அசத்தாதல் தன்மையும் ஆகிய இரண்டுமின்றிச் சதசத்தாயுள்ள ஆன்மாவாம்.

8. ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

ஆன்மா, தான் முன்னே செய்த புண்ணிய விசேடத்தால் தனக்கு அந்தர்யாமியாய் இதுகாறும் உண்ணின்று உணர்த்திவந்த பரம்பொருளே இப்பொழுது குரு வடிவமுங் கொண்டெழுந்தருளி வந்து, சிவதீக்கை செய்து "(மன்னவ குமாரனுகிய நீ)" ஐம்பொறிகளாகிய வேடருட்பட்டு வளர்ந்து நின் பெருந்தகைமையை அறியாது மயங்கி இடர்ப்பட்டாய், நின் தகைமை இவ்வியல்பிற்றென்று அறிவுறுப்ப, அறிந்த மாத்திரையே அவ்வேடரை விட்டுநீங்கி அன்னியமன்றி அனன்னியமாந் தன்மையின் நிலைபெற்று அம்முதல்வன் திருவடிகளை அணையும்.

9. ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே

குறை உணர்வாகிய பசு அறிவானும், பாச அறிவானும், அறியப்படாத முதல்வனை, அவனது திருவடி ஞானத்தால், பாசக் கூட்டம் நின்றுழி, நில்லாது பேய்த்தேரின் இயல்பிற்றாய்க் கழிவது என்றறிந்து, நீங்கவே, அப்பதிஞானம் பிறவித் துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு பாசத்தை ஒருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்டகாட்சி சலியாமைப் பொருட்டு, அப்பொருள் பயக்குந் திரு அஞ்செழுத்து விதிப்படி கணிக்கப்படும்.

10. அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

ஞானக் கண்ணினிற் சிந்தை நாடப்பட்ட அம் முதல்வன் பொருட்டன்மையால் வேறாயினும் வேறு காணப்படாது யானே கண்டேன் என்னும்படி உயிர் தானேயாய் நின்ற அப்பெத்த நிலை போல, ஈண்டுத் தானென வேறு காணப்படாது அம் முதல்வனேயாம்படி ஒற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின், பாசமொருவிய வழியும் வாசனையால் வந்து தாக்கும் மலம் மாயை என்னும் இரண்டனுடனே வலிய கன்ம மலமும் இல்லையாய்ப் பற்றறக் கழியும் என்றவாறு.

11. காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

காட்டக் காணும் தன்மையுடைய கண் உருவத்தைக் காணும்படி அதனோடொருங்கிசைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப் போல, அறிவிக்க அறியும் இயல்புடைய அவ்வான்மா விடயத்தை அறியும்படி, முதல்வன் அதனோடொருங்கியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான் அவ்வத்துவித நிலையை மறவாது சுடைப் பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதி தலைப்படும்.

12. செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.

அயரா அன்பின் அரன் கழலணைந்த சீவன் முத்தன், செங்கமலமலர் போல விரிந்து விளங்கிய முதல்வனது சீர்பாதத்தை அணைதற்கு உடம்படாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினை உடைய மும்மல அழுக்கை ஞான நீரால் கழுவி, தன்னைப் போல அயரா அன்பின் அரன் கழலடைந்த மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி, அவ்வாறு கழுவப்பட்டு மலமயக்கு நீங்க, அன்பரொடு சேர்ந்து அன்பு மிக்க அவருடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வனெனக் கண்டு வழிபட்டு வாழ்வான் என்றவாறு.

**பின்னிணைப்பு - 2**

# சிவஞான சித்தியார் உணர்த்தும் ஞான நெறி

சைவ சித்தாந்த நெறிக்கு உயிர் நாடிகளாய் அமைந்தவை வேதங்கள், சிவாகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், என்பனவாம். இவற்றுள்ளே மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் சைவசித்தாந்த சாதகன் கற்றுத் தெளிந்து கடைப் பிடித்தற்கு உரியன. இச்சாத்திர நூல்களுள்ளே தலையாயது மெய் கண்டார் அருளிய சிவஞான போதமாகும். மெய்கண்டாரின் முதன் மாணக்கராகிய அருணந்தி சிவாசாரியார், சிவஞான போதத்தின் கணுள்ள பன்னிரு சூத்திரங்களதும் பொருளை விளக்குமுகமாக அந் நூலின் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் ஒவ்வொரு அதிகாரமாகப் பன்னி ரண்டு அதிகாரங்களிலே ஆக்கியருளிய வழிநூலே சிவஞான சித்தி யார். இதன்கண் கூறப்படும் விடயங்களைப் பற்றி 'சைவ சமய வளர்ச்சி' என்னும் தமது நூலிலே டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறித்துள்ளமை பின்வருமாறு:-

"சிவ ஆகமப் பிரமாணங்களை ஒப்புக் கொள்ளாத சமயங்கள் புறச் சமயங்கள் எனப்பட்டன. வைதிகச் சார்பில்லாத சமயங்கள், புறப்புறச் சமயங்கள்' எனவும் வைதிகச் சார்புடையவை புறச்சமயங்கள் எனவும் கூறப்பட்டன. புறப்புறச் சமயிகளுள் உலகாயதர், சௌத்ராந்திகர் யோகசாரர், மாத்யாமிகர், வைபாடிகள் ஆகிய நால்வகைப் பௌத் தர், நிகண்டவாதிகள், ஆசீவகர் என்னும் இருவகைச் சமணர் அடங்குவர், பட்டாச்சாரியர் மதம், பிரபாகரமதம் என்னும் இருவகை மீமாஞ்சகமதமும், சுத்தப் பிரமவாதம், மாயாவாதம், பாற்கரிய வாதம், கிரீடப் பிரமவாதம் என்னும் நால்வகை ஏகான்ம வாதமும் பாஞ்சராத்திரிகம் என்னும் வைணவ மதமும் புறச்சமயத்துள் அடங் கும். அவர் அனைவருடைய சமயக் கொள்கைகளைக் கூறி, சித்தாந் தத்துடன் முரண்வனவற்றை மறுத்துச் சித்தாந்தத்தை நிலை நிறுத் துவதே பரபக்கம் என்பது. இது 301 செய்யுட்களைக் கொண்டது.

சுபக்கத்தில் சிவஞான போதப் பொருளே விரித்துரைக்கப் படுகிறது. அப்பகுதி 328 செய்யுட்கள் கொண்டது. சித்தியாரின் பெருமையை, 'சிவனுக்குமேல் தெய்வம் இல்லை, சித்திக்கு விஞ்சிய நூலில்லை' என்னும் பழமொழியாலும், தாயுமானவர் பாராட்டுரை யாலும் அறியலாம்.

இத்தகைய பெருமை வாய்ந்ததும் சைவசித்தாந்தக் கருநூல மாய் விளங்குவதுமான சிவஞான சித்தியார் சுபக்கத்திலிருந்து ஞானநெறியினை விளக்கும் சில செய்யுட்களையும் பொருளையும் இவ் வியலின்கண் தருகின்றோம்.

1. ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான்முத லீறு மாகி
மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே.

சேதன அசேதனப் பிரபஞ்சம் தோன்றி நின்று ஒடுங்குதலால் அதனைக் காரியப்படுத்தும் ஒரு கருத்தா வேண்டும். அக்கருத்தா நிமித்தகாரணனும் சங்காரகாரணனுமாய், சத்திவடிவம் பொருந்தி நின்று பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தும் இயல்புடையனும்.

2. உலகெலா மாகிவேறா யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமலனாகி நின்றன னீங்கா தெங்கும்.

முதல்வன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன் மையால் அவற்றின் வேறாயும் செலுத்துந்தன்மையால் அவற்றோடு உடனாயும் நிற்பன். எவ்வாறெனின், சத்திவடிவாய் வியாபரித்துச் சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்களோடு ஒன்றாயும் உடனாயும் நின்று அவரவர் கன்மத்துக்கேற்பத் தனுகரணாதிகளைக் கொடுத்து வினைப் பயனை நுகர்வித்தும், அசேதனப் பிரபஞ்சமாகிய தனுகரணாதிகளோடு அத்துவிதமாய்க் கலந்து பிரிவின்றியும் நிற்பன். இவ்வாறாயினும் இவற்றிற்கு வேறுமாய்த் தோய்வின்றி நிற்கும் நின்மலனும்.

3. உயிரெனப் படுவதிந்த வுடலின் வேறுளதா யுற்றுச்
செயிருறு மிச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறு மின்பத் துன்பப் பலன்களு நுகரும் பார்க்கின்
அயிலொடு மஞ்ச வத்தைப் படுமுண்மை துரியாதீதம்.

உயிர் இந்த உடம்பிற்கு வேறுயுள்ளது. உடல்களைப் பொருந்தி நின்று அதன் இச்சா ஞானக் கிரியைகள் ஏகதேசமாய் விளங்கப் பெறும். புண்ணிய பாவங்களைச் செய்யும். அப்புண்ணிய பாவங்களின் பயனை அநுபவிக்கும். சாக்கிரம் முதலிய ஐந்தவத்தையும்படும். (சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்) துரியாதீதம் அதன் கேவலநிலையாம்.

4. உணர்வன கரண மென்னி னொன்றையொன் றுணரா வெவ்வே
றணைதருஞ் செயல்க ளொன்கு மறிந்தவை யடக்கி யாக்கிப்
புணருமுட் கருவி யாக்கிப் புறக்கரு வியிலும் போக்கி
இணைதரு மிவற்றின் வேறு யானென தென்ப தான்மா

அந்தக்கரணங்களே அறியுமென்னின் அவை ஒன்றை ஒன்ற றியா, அன்றியும் அவற்றுள் ஒன்றறிந்தவற்றை மற்றொன்று அறி யாது வெவ்வேறு தொழில்களைப் பொருந்தியிருக்கும். ஆதலால் அவை அறியும் என்பது பொருந்தாது. அந்தக்கரணங்கள் நான்கினையும் அறிந்து அவற்றை விடயங்களிற் செல்ல வொட்டாது தடுத்தும், விடயங்களிற் செலுத்தியும், அவற்றின் வேறாய் யான் என்றும் எனது என்றும் நிற்பது ஆன்மாவாம்.

5. பொறிபுலன் கரண மெல்லாம் புருடனு லறிந்தான் மாவை
அறிதரா வவையேபோல வான்மாக்க ளனைத்து மெங்கும்
செறிதருஞ் சிவன்றனாலே யறிந்திடுஞ் சிவனைக் காணு
அறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்துநிற்பன்.

பொறி புலன் கரணங்கள் ஆகிய யாவும் ஆன்மாவினது உப காரத்தால் விடயங்களை அறியினும் ஆன்மாவைத் தாமறியா. அது போல, ஆன்மாக்கள் விடயங்களை முதல்வனது உபகாரத்தால் அறி யினும் அம்முதல்வனைத் தாமறியா. அங்ஙனம் அறியச் செய்யும் முதல்வனே எல்லாவற்றையும் அறிந்து ஆன்மாக்களுக்கு அறிவித்து உடனிற்பன்.

6. அறிவுறும் பொருளோ வீச னறிவுறு தவனே வென்னின்
அறிபொரு ளசித்த சத்தா மறியாத தின்று மெங்குஞ்
செறிசிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதரு சத்தின் முன்ன ரசத்தெலாம் நின்றிடாவே.

சுட்டியறியப் படுவன யாவுஞ் சடமாய் அழிவெய்தும். ஒரு வாற்றானும் அறியப்படாதனவும் பயனிலவாய் இல் பொருளாம். ஆதலால் உயிருக்கு உபகரிக்குஞ் சிவன் இவ்விரு தன்மையனின்றிச் சித்துப் பொருளும் சத்துப் பொருளுமாய் நிற்கும் இயல்புடையவனும். இவ்வியல்புடைய சிவத்தின் முன்னர் அசத்தாகிய ஒன்றும் முனைத்து நில்லாது.

7' அனைத்துஞ்சத் தென்னி னொன்றை யறிந்திடா தசத்தா லென்னின்
முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போல்
நினைப்பதிங் கசத்தே யென்னிற் சத்தின்முன் னிலாமை யானுந்
தனைக்கொ டொன் றுணர்த லானுந் தானசத் துணரா தன்றே

சத்துப் பிரித்தொன்றை அறியாதாதலாலும் தம்முன் முனைத்து நிற்காத அசத்தோடு கூடி யறியாததாலும் அறியும் பொருள் சத்தாகு மென்றல் பொருந்தாது. அசத்துச் சத்தின் முன்னில்லாததாலும் அசத்தோடு கூடியறிவதொன்று வேறு வேண்டப்படுதலாலும் அசத்தே அறியும் என்றலும் பொருந்தாது.

8. மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

ஐம்பொறி முதலிய தத்துவங்களின் வசத்ததாகித் தன்னையும் தனது தலைவனையும் அறியாது வருந்தும் உயிருக்கு, முதல்வன் அது பக்குவமெய்திய விடத்துத் திருவருளே திருமேனியாகக் கொண்டெழுந்தருளி வந்து உபதேசித்துத் தத்துவநீக்கம் செய்து ஆணவமல வலியைக் கெடுத்து ஞானமுதிப்பித்துப் பரமுத்தியைக் கொடுப்பன்.

9. பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடு முள்ளத்தே நாடிப்பாத
நிழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்
ஆசைதரு முலகுமெலா மலகைத் தேராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னும்
ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலா மோட

பாசஞானம் பசுஞானங்களாலறியப்படாத பரன் பதிஞானத்தாலறியப்பட்டும் கன்ம வசத்தாற் பிரபஞ்சப் பற்றுநித்து நிட்டைகைவராதாயின், பற்றுக்கிடமாய பிரபஞ்சம் நிலையற்றதெனக் கண்டு திருவஞ்செழுத்தை முறையே செபித்துவரின் உண்மை நிட்டை நிலையாயுறும்.

10. இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லா
மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையும்
அவனிவ னாய் நின்ற முறை யோகனாகி
அரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றம்
சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி யென்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்று கொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே.

சிவஞானி இறைவனோடும் பிரிப்பின்றி அவனேயாய் நிற்றலின் அவன் உலகியலிற் செய்த வினையாவும் அவனுக்கு வினைபுரிந்தார் மாட்டுப் பொருந்தும். அவன் தன் செயலற்று இறைபணியிலே நிற்றலின், அஞ்ஞானத்தாலுறும் ஆகாமியம் அறும். ஆகவே இவன் செயல் இறைவன் செயலாகவும் இவனுக்குச் செய்தன இறைவற்குச் செய்தனவாகவும் பயன்பட இவனுக்குப் பிறவியே இலதாகிப் பரமுத்தி சித்திக்கும். இவன் சிவநேயத்தழுந்தி நின்று ஒருகாற் பாதகமெனற்பால செய்யினும் அவை அரன்பணியறமாகவே பயன் தரும்.

11\. காய மொழிந் தாற்சுத்த ஞகி யான்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்
கேயுமுயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ னித்தை
ஆயுமறி யுடையவனு யன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையி னடைந்தமுறை யாலே
மாயமெலா நீங்கியரன் மலரடிக் கீழிருப்பன்
மாருத சிவாநுபவ மருவிக் கொண்டே

மெய்ஞானம் பெற்று நிட்டைகைவந்த சீவன்முத்தர் உடல ழிந்துபட மும்மலமும் பற்றறத் திருவடிப்பேருகும் அத்துவிதப்பர முத்தியின்பந் துய்த்திருப்பர். முதல்வன் அந்நிலையில் உயிரோடு லீலை மாத்திரையானே வேருயும் உடனுயும் ஒன்றித்தும் நின்று சிவாநுபவ நிகழ்த்துவன்.

12\. செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க லறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
எங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோ
மியாவர்க்கு மேலாஞே மென்றிறுமாப் பெய்தித்
திங்கள்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே.

சிவஞானியர் வாதனுமலந் தம்மைத் தாக்குரு வண்ணம் தம் பேற்றையுன்னிப் பெருமித முற்ருேராய் மெய்யன்பர் கூட்டத்துப் பயின்று பேரின்பத் தழுந்திச் சங்கம விலிங்க குரு சேவைகளைச் சாதித் துச் சிவனடியார்ப் பணிதலுடையோராய் உடம்புள்ளவும் உலகிற் பற்றின்றி வாழ்வர்.

---

# நூலிலே பயன்படுத்தப்பட்ட

## கலைச்சொல்லகராதி


| சொல் | பக் | சொல் | பக் |
|---|---|---|---|
| அகங்காரம் | 71 | குடிலை | 69 |
| அசுத்தமாயை | 59 | கௌஷீத கீயம் | 80 |
| அத்துவிதம் | 73 | சரீரம் | 72 |
| அத்துவித சுத்திமுறை | 71 | சங்கிதோபநிடதம் | 32 |
| அதர்வ வேதம் | 9 | சட்விம்சப்பிராமணம் | 32 |
| அதர்வவேத உபநிடதம் | 36 | சமயம் | 15 |
| அதர்வவேத பிராமணம் | 33 | சந்தோவிசிதி | 13 |
| அருத்தம் | 10 | சாக்த ஆகமங்கள் | 46 |
| ஆகமங்கள் | 43 | சாகை | 7 |
| ஆக்கினேய புராணம் (அக்நி) | 39 | சாமவேதம் | 8 |
| ஆள்சேயப் பிராமணம் | 32 | சாமவேத காலம் | 9 |
| ஆயுள்வேதம் | 10 | சங்கிதைகள் | 25 |
| இதிகாசங்கள் | 40 | சாங்கியம் | 23 |
| இருக்குவேதம் | 7 | சாமவேதசங்கிதை | 27 |
| இருக்குவேத சங்கிதை | 25 | சாமவிதானப் பிராமணம் | 32 |
| இருக்குவேத பிராமணம் | 29 | சாமவேத உபநிடதம் | 36 |
| இருக்குவேத உபநிடதங்கள் | 36 | சிவ வணக்கம் | 1 |
| உத்தரமீமாஞ்சை | 23 | சிவபுராணங்கள் | 38 |
| உபநிடதங்கள் | 33 | சிட்சை | 11 |
| ஐதரேயம் | 29 | சோதிடம் | 11 |
| கந்தருவ வேதம் | 10 | சிவாகமங்கள் | 43 |
| கன்மம் | 67 | சிவன் ஐந்தொழில் புரிதற்குக் காரணம் | 58 |
| கற்பம் | 12 | சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்தும் முறை | 70 |
| கலைகள் | 72 | சிவஞானபோதம் | 88 |
| காண்வசாகியப் பிராமணம் | 31 | சிவஞானசித்தியார் | 93 |
| காண்டம் | 72 | சீவன் | 18 |
| காமம் | 51 | சுத்தமாயை | 70 |

சைவசித்தாந்தம் 20
சைவசித்தாந்த தத்துவ விளக்கம் 54
சைவசமயம் 17
தசகாரியம் 69
தத்துவ விளக்கம் 69
தர்மம் 50
தரும சாத்திரங்கள் 37
தருக்கம் 10
தரிசனங்கள் 23
தனுர்வேதம் 10
தலவகாரப் பிராமணம் 31
தாண்டியப் பிராமணம் 32
திரோதாயி 63
தைத்திரீயப் பிராமணம் 30
தைவதப் பிராமணம் 32
நால்வகைப் புருஷார்த்தம் 48
நியாயம் 10
நிருத்தம் 11
நையாயிகம் (நியாயம்) 24
பசுவிலக்கணம் 60
பதினெண் புராணங்கள் 38
பதியிலக்கணம் 54
பதியுண்மைப் பிரமாணங்கள் 57
படைத்தல் முதலாய ஐந்தொழில் 57
பாசவிலக்கணம் 63
பிராமணங்கள் 28
பிரமபுராணங்கள் 39
பிரமகைவர்த்த புராணம் 39
புராணங்கள் 37
பூர்வமீமாஞ்சை 28
மாயை 53
மும்மலமநாதி 65
மோட்சம் 51
யசுர்வேதம் 7
யசுர்வேத சங்கிதை 26
யசுர்வேத உபநிடதங்கள் 36
யசுர்வேத பிராமணங்கள் 30
யோகம் 24
வம்சப் பிராமணம் 32
வருணாசிரம தர்மம் 52
வியாகரணம் 11
விட்டுணுபுராணங்கள் 38
வினைக்கேற்ற உடம்பு 65
வேதங்கள் 3
வேதக்கூறுபாடுகள் 6
வேதசாகைகள் 6
வேதாங்கங்கள் 9
வேத தரிசனங்கள் 22
வைசேடிகம் 25
வைணவ ஆகமங்கள் 47

# பிழை திருத்தம்

| பக்கம் | சொல் | சரியான சொல் |
|---|---|---|
| 1 | பெருந்ததகை | பெருந்தகை |
| 3 | மூதல்நூல் | முதல் நூல் |
| 7 | மூதலிய | முதலிய |
| 12 | ஒகு | ஒரு |
| 15 | நீங்சினுல் | நீங்கினுல் |
| 15 | லண்ணம் | வண்ணம் |
| 16 | துன்பத்னதக் | துன்பத்தைக் |
| 23 | இயற்றிறவர் | இயற்றியவர் |
| 30 | அநியப்படும் | அறியப்படும் |
| 37 | கேன்றே | சென்றே |
| 43 | காமிகமம் | காமிகம் |
| 45 | பசரும் | பகரும் |
| 46 | ஆய்வாவாளர் | ஆய்வாளர் |
| 50 | அதற்குத்தசு | அதற்குத் தக. |
| 57 | மாயையின் என் | மாயையின்கண் |
| 66 | துனேக்காரணமாய் | துணைக்காரணமாய் |
| 72 | அசுத்தமாயையிலும் | சுத்தமாயையிலும் |
| 72 | (சேர்க்க வேண்டும்) | சூக்குமசரீரம் |
| 86 | முக்ஒியத்நுவம் | முக்கியத்துவம் |
| 97 | யோகஞைகி | யேகஞைகி |

ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.

# திரு. இளையதம்பி சுப்பிரமணியம்



"நான் ஒய்வு பெற்றுவிட்டேன் இனி எனது ஆன்மார்த்த வழிபாடுகளிலும் கர்மாநுட்டானங்களிலும் ஈடுபடுவது ஒன்றே நான் செய்யத் தக்கது" என்று கருதாது "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் குறிக்கோளுடன் "வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தம்" என்ற பெயரில் இத் தொகுப்பு நூலை எமக்கு அளித்த சைவப்பெரியார் திரு. இ. சுப்பிரமணியம் அவர்கள், கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் பிரதிபிரதம தந்தி அதிபராகப் பணிபுரிந்து ஒய்வு பெற்றவர். காலிநகர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய பரிபாலன சபைப் பொதுச் செயலாளராகவும் தமிழ்ச் சங்க காரியதரிசியாகவும் கொழும்பு விவேகானந்த சபை துணைப் பொதுச் செயலாளராகவும் பதவி வகுத்து சமயப்பணி ஆற்றிய திரு. இ. சுப்பிரமணியம் ஒய்வு பெற்ற பின்னரும் தமது சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவதற்கு அவர் வகித்த பின்வரும் பதவிகளே சான்றுகளாகும்.

1. பொருளாளர் பெற்றூர் சங்கம் யாழ்ப்பாணம்.
   இச்சங்கத்தின் தலைவர் திரு. கு. நேசையா
   காரியதரிசி S. பொன்னையா (வழக்கறிஞர்)
2. செயலாளர் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
3. தலைவர் மக்கள் சபை, சுண்டிக்குளி (J. P.)
4. தலைவர் சுண்டிக்குளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
5. பொருளாளர், பதிப்பாசிரியர் ஈழத்துச் சைவ சித்தாந்த வித்தியா பீடம்.

சைவ சமய சாதகராகவும் சித்தாந்த சாத்திரங்களைக் கற்றுணர்ந்தவராகவும், சிறந்த பத்திமானாகவும் விளங்கும் இப் பெரியார் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் புனித கென்றி அரசர் கல்லூரியிலும் கற்று அரசாங்க சேவையில் சேர்ந்தபின் தாமாகவே கற்று (இலங்கையில் பொறியியல் பீடம் ஏற்படுத்தமுன்) City and Guilds London Institute of Technology நடத்திய Telegraphy Finalல் விசேட சித்தி பெற்று அரசாங்கமளித்த நன்கொடைப் பணமும் கல்விப்பீடம் வளங்கிய மின்பொறியியல் பட்டதாரியாக வேண்டிய பகுதி இரண்டின் விலக்கும் பெற்றவர்.

ஆங்கிலம் தமிழ் சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் நிரம்பிய அறிவு வாய்ந்த இவரது தொகுப்பு நூல் சைவசித்தாந்தம் பற்றித் தொடக்கநிலை அறிவுடையவரும் தாமாகவே படித்துத் தெளிவுபெற உதவ வல்லது.


— 'சோணா' —


# சைவ சித்தாந்த தத்துவ விளக்கப்படம்

**பரமசிவம்**
**பராசக்தி**

தசகாரியம்

**சிவபோகம்**
சிவயோகம்
சிவதரிசனம்
சிவரூபம்
ஆன்மசுத்தி
ஆன்மதரிசனம்
ஆன்மரூபம்
தத்துவசுத்தி
தத்துவதரிசனம்
தத்துவரூபம்






நிலம் முதல் நாதம் ஈறுக 36 மெய்களுக்கும் மேலாக பேராற்றலாகிய திருவருளம்மை வீற்றிருந்தருள்வள்.
இயற்கை உணர்வின் இருப்பிடமாகிய தனிமுதற்சிவன் அதற்குமேல் காணப்படுவன்
இவற்றிற்கெல்லாம் சார்புநிலைக்களமாயுள்ளதும் அச்சிவனேயாவன்